# மன்னா


# புனித யோசவ்வாஸ் இறையியல் கல்வியகமும்

# பொதுநிலையினர் ஆண்டும்

## - மன்னார் மறைமாவட்ட ஆயர் -



இறை இயேசுவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் ஆசீர்கள்!

“மன்னார் மறைமாவட்ட இறை சமூகம் ஆழமான இறையுறவில் வாழுகின்ற இறை விசுவாச விழுமியங்கள் நிறைந்த ஒரு திருஅவை” என்று எம் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் கடந்த புதன்கிழமை 01.08.2018 அன்று ஆயர் இல்லத்தில் மன்னாவுக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்தார்.

**அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.....**

“புனித யோசவ்வாஸ் அர்ப்பண ஆண்டில் பொது நிலையினரின் வாழ்வும், பணியும், உருவாக்கமும் என்ற மையப்பொருளோடு பயணிக்கும் எமக்கு இரக்கமுள்ள இறைவன் புனித யோசவ்வாஸ் இறையியல் கல்வியகத்தை கொடையாகத் தந்துள்ளார். இந்த இறையியல் கல்வியகத்தினூடாக எம் மறைமாவட்டப் பொதுநிலையினர் பயன்பெற வேண்டும் என ஆசிக்கின்றேன். இது போன்ற இறையியல் கல்வியகங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மறைமாவட்டங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. எனவே அன்புக்குரிய பொதுநிலை பணியாளர்களே! சந்தர்ப்பத்தையும், வாய்ப்பையும் பயன்படுத்தி, இறையியல் ஞானத்தின் ஊடாக உங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தி நீங்களும் எம் மறைமாவட்டமும் பயன்பெற வாழ்த்துகின்றேன்.

இக் கல்வியகத்தில் கற்று, இறையியல் மாணவர்களாக வெளியேறும் போது இந்த ஆண்டுக்கான திட்டங்களை நாம் நிறைவேற்றுகின்றோம். ஆகவே வாய்ப்புள்ளவர்கள் அனைவரும் விண்ணப்பங்களைப் பெற்று வருகின்ற செப்ரெம்பர்மாதம் 1ஆம் திகதி ஆரம்பமாகின்ற இக் கற்கைநெறியில் இணைந்துகொள்ளுங்கள்” என்று கூறி அனைவருக்கும் ஆசீர்வழங்கி தன் பேட்டியை நிறைவு செய்தார். ●

## திருப்பாலத்துவ சபையின் 175 வது ஆண்டு விழா





திருப்பாலத்துவ சபையின் 175வது ஆண்டு நிறைவு இவ்வருடம் சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்படுகின்றது. இலங்கையில் தேசிய நிகழ்வுகள் பல ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வாரம் நிறைவாண்டை முன்னிட்டு கொடிவாரம் ஆரம்பமாகியது. கொடி வாரத்தில் சேகரிக்கப்படும் பணத்திலிருந்து ஏழைக்குடும் ஒன்றிற்கு வீடு ஒன்று அமைத்துக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

➡ 15

## வெள்ளிவிழாக் காணும் அருட்தந்தை ச.மரியதாசன் சீமான்



அருட்தந்தை ச.மரியதாசன் சீமான் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்திலுள்ள முருங்கன் மறைகோட்டத்தின் அளவக்கை பங்கில் மாவிலங்கேணி எனும் கிராமத்தில் அமரர்களான செபமாலை சவிரி, அந்தோனியா (நல்லம்மா) ஆகியோருக்கு மகனாக 1962ஆம் ஆண்டு மார்கழி மாதம் 02ஆம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/மாவிலங்கேணி றோ.க.த.க பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை முருங்கன் மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றார். குருத்துவப் பயிற்சியை மன்னார் முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் அனுமதியுடன் யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கற்று 1992ஆம் ஆண்டு அதே ஆயரால் மடு திருப்பதியில் திருத்தொண்டனாக திருநிலைப்படுத்தப்பட்டார். மன்னார் இரண்டாவது ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு ஜோசேப் ஆண்டகை அவர்களால் முதல் குருவாக 1993.08.12ஆம் திகதி மடுவில் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரே மாவிலங்கேணி கிராமத்தின் முதல் குரு ஆவார்.

இவர் மன்னார் பேராலயத்தின் உதவிப்பங்குத்தந்தையாகவும், தேவன்பிட்டி, அரிப்பு, சிலாவத்துறை, மடு, முருங்கன், பேசாலை, கீளியன்குடியிருப்பு, ஆட்காட்டிவெளி, கற்கிடந்தகுளம், மாந்தை ஆகிய பங்குகளில் பங்குத்தந்தையாக பணியாற்றி தற்போது பள்ளிமுனை பங்கின் பங்குத்தந்தையாக பணியாற்றி வருகின்றார். சிறப்பாக கீளியன்குடியிருப்பு, மாந்தை பங்குகளின் ஆரம்ப பங்குத்தந்தையாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

➡ 15

## மடுத்திருத்தல ஆவணிப் பெருவிழா







கடந்த 6ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு கொடியேற்ற நிகழ்வோடு ஆரம்பிக்கப்பட்ட மடுமாதா திருத்தல ஆவணித் திருவிழாவிற்கான நவநாள் ஆயத்த வழிபாடுகள் சிறப்புற இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணிக்கு தமிழ் மொழியிலும், காலை 6.45 மணிக்கு சிங்கள மொழியிலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படுவதோடு மாலை 6.00மணிக்கு திருச்செபமாலையோடு, நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, மறையுரையும், நற்கருணை ஆசீரும் இடம்பெறுகின்றது. மேலும் 14ஆம் திகதி மாலை 6.00மணிக்கு திருச்செபமாலையும், வெஸ்பர் ஆராதனையும், நற்கருணைப் பவனியும் 15ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து அற்புதம் நிறைந்த எம் அன்னையின் திருச்சுரூபப் பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

➡ 15

## திருப்பீட சமூகத் தொடர்புத் துறையின் புதிய தலைவர்.



யூலை 05, 2018 திருப்பீட சமூகத் தொடர்புத் துறையின் தலைவராக முனைவர் பவுலோ ருபீனி (Paolo Ruffini) அவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் யூலை 5 வியாழனன்று நியமனம் செய்தார். இத்தாலிய ஆயர் பேரவையின் TV 2000 என்ற தொலைக்காட்சி நிறுவனத்தின் இயக்குனராகப் பணியாற்றிவந்த ருபீனி அவர்கள், கடந்த 40 ஆண்டளவாக ஊடகத்துறையில் பணியாற்றிவருபவர்.

➡ 15

## வாழ்த்துகின்றோம் ஆண்டகை மேதகு ஜே. டீ. அன்ரனி ஜெயக்கொடி



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் 09ஆவது துணை ஆயராக கடந்த 23.06.2018 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் மேதகு ஜே.டீ அன்ரனி ஜெயக்கொடி ஆண்டகை அவர்கள் அபிஷேகம் செய்யப்பட்டார்.

இவர் கடந்த காலங்களில் கண்டி தேசிய குருமடத்தில் இயக்குனராக பணியாற்றி எம் மன்னார் மறைமாவட்டத்தின் அநேக குருத்துவ மாணவர்களை குருக்களாக உருவாக்கி உள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர், மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குருக்கள், துறவிகள், இறைமக்கள் அனைவரும் புதிய ஆயரை அன்போடு வாழ்த்திப் பாராட்டுகின்றோம். ●

## பொன்விழாக் காணும் ஆண்டகை அதி மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ்



இவ்வருடம் ஆடிமாதம் 17ஆம் திகதி அன்று தன் ஆயத்துவ வாழ்வில் 50 வருடங்களை நிறைவு செய்து பொன்விழாவைக் கொண்டாடிய கொழும்பு உயர் மாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேராயர் அதிமேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்களை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ, மன்னார் குருக்கள், துறவிகள், இறைமக்கள் அனைவரும் அன்போடு வாழ்த்திப் பாராட்டுகின்றோம். ●

## திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்

பொருளியலாளர்கள், மற்றும் அரசியல்வாதிகள் எடுக்கும் எந்த நீண்ட காலத் திட்டமும் குடும்பங்களை மானுடத்தின் கருவூலமாகப் பாதுகாக்கும் படியாக....

# மன்னா

பதிப்பாசிரியர் மனப்பொழிவு


**இறை இயேசுவில் பிரியமானவர்களே!**

மீண்டும் "மன்னா" ஊடாக உங்கள் அனைவரையும் இரண்டாவது முறையாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த 32 வருடங்களாக மன்னா இறைமக்களின் ஆன்ம பசியை போக்கி வந்திருக்கின்றது.

என் திறமைக்கும், ஆற்றலுக்கும், இறையருளால் பெற்றுக்கொண்ட கொடைகளுக்கும் ஏற்ற வகையில் என்னால் முடிந்தளவு உங்கள் அனைவரையும் "மன்னா" ஊடாக போசிக்கவும், நிறைவடையச் செய்யவும் ஆசைப்படுகின்றேன்.

இம்மாத ஆசிரியர் பகிர்வின் ஊடாக குடும்பத்தைப் பற்றி முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய சில விடயங்களைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்

**தேசிய குடும்ப ஞானொடுக்கம்:-**

வருகின்ற செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தலவில்லு புனித அன்னம்மாள் திருத்தலத்தில் "மகிழ்ச்சியான குடும்பம்: இறைவனின் அழைப்பாகும்" என்ற மையப்பொருளில் குடும்பங்களுக்கான ஞானொடுக்கம் தேசிய ரீதியாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வளர்ந்தோர், இளையோர் மற்றும் சிறுவர்கள் என மூன்று நிலைகளில் ஞானொடுக்கம் இடம்பெறும். ஆகவே இத் தியானத்தில் குடும்பமாக பங்குபற்றி ஆன்மீக முதிர்ச்சி பெற வாழ்த்துகின்றேன்.

**திருமணம் - குடும்ப வாழ்வு:**

"திருமணம் பரலோகத்தில் நிச்சயிக்கப்படுகின்றது" குடும்பம் ஒரு குட்டித் திருஅவை. 'இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்றதுணை' என்று பல கிறிஸ்தவ தத்துவங்கள், முதுமொழிகள், பொய்யாமொழிப் புலவரின் திருக்குறள் வார்த்தைகள் வழியாக குடும்பம், குடும்பவாழ்வு, திருமணம் பற்றி கேள்விப்பட்டிக்கின்றோம். குடும்பத்தில் இருந்துதான் அனைத்து அழைத்தல்களும் உருப்பெறுகின்றன.

எனது பணி வாழ்வில் பல குடும்பங்களை என் பங்குப்பணிமனையிலும், ஆலயங்களிலும், அவர்களின் இல்லங்களிலும் சந்தித்த அனுபவம் தனித்துவமானது. என்னதான் இவ்வுலக வாழ்வு சலிப்புத்தந்தாலும், நம் கத்தோலிக்கக் குடும்பங்கள் கிறிஸ்தவ வாழ்வுக்கு ஏற்ப வாழ்க்கை நடாத்துவது கண்டு ஆச்சரியப்படுகின்றேன். மகிழ்ச்சியும் அடைகின்றேன். வாழ்த்துகின்றேன்.

நம் வாழ்வின் எந்தவொரு அழைப்பும் (எந் நிலையிலும்) சவால்கள் நிறைந்தவை என்பதற்கு விதிவிலக்கு கிடையாது. பலர் குடும்பமாக இணைந்து சவால்களை வெற்றி கண்டுள்ளார்கள். சிலர் குடும்ப வாழ்வில் தனித்து நின்று, நலிவடைந்து, தோல்வி கண்டுள்ளார்கள். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான குடும்பங்கள் பிரமாணிக்கம், ஒற்றுமை, நம்பிக்கை, அன்பு, ஏற்றுக்கொள்ளல், பகிர்தல், உரையாடல், பாராட்டுதல், திட்டமிடல், இறையுறவு போன்ற மதிப்பீடுகளை இழந்த நிலையில் காணப்படுவதால் பிளவுகளையும், வெறுப்பு உணர்வுகளையும் சந்தித்து கவலையளிக்கின்றது. நீங்கள் குடும்ப வாழ்வில் "கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை" அடைய வாழ்வின் ஊற்றுக்கு திரும்புங்கள். அன்பு செய்வதையும், நம்பிக்கையையும் கைவிட்டுவிடாதீர்கள்.

**பிள்ளைகளின் உருவாக்கம்:-**

எமது பணி வாழ்வில் பல குழந்தைகளோடு, சிறுவர்களோடு, மறைக்கல்வி மாணவர்களோடு, இளைஞர் யுவதிகளோடு உறவில் வளர்ந்து பணி செய்திருக்கின்றேன். அவற்றை பெரிய வாய்ப்பாகவும், கொடையாகவும் பார்க்கின்றேன். நமது பிள்ளைகளிடம் நிறைய ஆற்றலும், துடிப்பும், பொறுப்புணர்வும், வயதுக்கு மீறிய அறிவும் கண்டு பலதடவைகளில் வியப்பில் ஆழ்ந்துள்ளேன். "தாயை போல பிள்ளை நூலைப் போல சேலை" என்பதன் உண்மையை பிள்ளைகள் ஊடாகப் பெற்றோரில் காணமுடிகின்றது. இன்றைய பிள்ளைகளின் உருவாக்கத்தில் மேலும் கரிசனை தேவை என்பதை நாம் அறிவோம். பிள்ளைகளின் உருவாக்கத்திற்கு பெற்றோரின் ஆரோக்கியமான வாழ்வு முதல் சான்றாகும். பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்க மறக்கவேண்டாம். அவர்களின் வார்த்தைகளை அவதானமாய் செவிமடுங்கள் பிள்ளைகள் பெற்றோராகிய உங்களை இலகுவாக அணுக எந்த காரணிகளும் தடையாய் இராதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். அவர்களின் வெற்றி - தோல்வியில் உடனிருங்கள், அவர்களின் நற்செயல்களை பாராட்டுங்கள். தவறும்போது அன்போடு கண்டித்துத் திருத்துங்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்க ஆரோக்கிமான உறவில் வளரவேண்டியது இன்றைய தேவையாகும். அன்பே உங்கள் வாழ்வின் இயக்கமும், ஆற்றலுமாகட்டும். ●

"நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்கு ஆகிய மூன்றும் நிலையாயுள்ளது. அவற்றுள் தலைசிறந்தது அன்பே"

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும் வரை*
*உங்கள் அன்பின் பணியாளன்*
*அருட்பணியாளர் அ. லக்ஸ்ரன் டி சில்வா*

❋ ❋ ❋

## கலையருவியின் ஏற்பாட்டில் நடாத்தப்படும்
## மன்னார் மறைமாவட்ட மட்டத்திலான
# மாபெரும் கரோல் பாடல் போட்டி - 2018

**பங்குப்பாடகர் குழாத்தினரின் திறமைகளை வெளிக்கொணரவும், புதிய பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்களை அறிமுகம்செய்து ஊக்குவிக்கவும், கிறிஸ்மஸ் மகிழ்வினை கரோல் பாடல்களின் வழிகிரந்து கொள்ளவும் வழிசமைக்கும் வகையில் கலையருவியினால் இந்தக் கரோல் பாடல் போட்டிகள் நடாத்தப்படுகின்றது. குழுக்களாக உங்கள் திறமைகளை வெளிப்படுத்த அரிய சந்தர்ப்பம்!**

1.இப்போட்டி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெறும். கீழ்ப்பிரிவில் தரம் 5 முதல் தரம் 11 வரை பாடசாலை மாணவர்களும், மேற்பிரிவில் தரம் A/L முதல் திருமணமானவர்கள் வரை பெரியவர்களும் உள்ளடக்கப்படுவர். வயதெல்லை கிடையாது.
2.ஒவ்வொரு பிரிவினரும் குழுவாக ஒரு தமிழ்ப்பாடலைப் பாடலாம்.
3.எனவே ஒருபங்கில் இருந்து இரண்டு குழுக்கள் இப்போட்டியில் பங்கெடுக்கலாம் (கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு).
4.ஒரு பிரிவைச் சேர்ந்தவர் மற்றைய பிரிவில் இணைய முடியாது.
5.ஒரு குழுவில் 08 தொடக்கம் 16 பேர் வரையில் மட்டுமே பங்கெடுக்கலாம்.
6.ஒருபாடல் 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
7.பாடல் புதிய படைப்பாக இருத்தல் வேண்டும். பாடல் வரிகள், இசை என அனைத்தும் புதிதாக ஆக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இருக்கும் பாடலாகவோ அல்லது தழுவலாகவோ இருக்கக்கூடாது.
8.கரோல் பாடல் போட்டியில் இடம்பெறும் பாடலின் வரிகளை எழுதியவருக்கும், அப்பாடலுக்கு இசை அமைத்தவருக்கும் தனியான விருதுகள் வழங்கப்படும்.
9.எந்த இசைக்கருவியையும் பயன்படுத்தலாம். உங்கள் பாடலுக்குத் தேவையான இசைக்கருவிகளை, தொழில்நுட்ப சாதனங்களை (Code wires etc.) நீங்களே கொண்டுவர வேண்டும்.
10.நான்கு நடுவர்களுக்கும் பாடல் வரிகளை எழுத்தில் பிரதி பண்ணி வழங்க வேண்டும்.
போட்டியின்போது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் : பாடும் திறன் - 15, சுருதி பாவம் - 15, லயம் - 15, பாடல் வரிகள், இசையமைப்பு - 15, உச்சரிப்பு தெளிவு - 10, ஆடை ஒப்பனை - 10, ஒத்திசைவு - 10, நிலை, சமர்ப்பணம் (முடிவு) 10, (மொத்தம்: 100 புள்ளிகள்)
11.இப் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பங்குத்தந்தையர்களுக்கும், கன்னியர் இல்ல முதல்வர்களுக்கும் அனுப்பப்படும். பங்கெடுக்க விரும்புவோர் இவ்விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் '*கரோல் பாடல் போட்டி விண்ணப்பம்*' என்று குறிப்பிடவும். பாடலுக்கான பாடல் வரிகளை எழுதியவர், இசை அமைத்தவர் பெயரையும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடவும்
12.ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் குழுக்களுக்கு ***'புனித சிசிலியா பாடகர் குழு விருது'*** வழங்கப்படும்.
13.முதற் கட்டப் போட்டிகள் கார்த்திகை மாதம் 03 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தலைமன்னார் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலையருவி மண்டபத்தில் நடைபெறும். இப்போட்டியின்போது ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களைப் பெறும் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு இறுதிப்போட்டிக்கு அனுமதிக்கப்படுவர். போட்டியாளர்கள் காலை 8.00 மணிக்கே சமூகம் தந்து தம்மை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
14.இறுதிப் போட்டி டிசம்பர் மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இப்போட்டி நடைபெறும் இடம், நேரம் பின்பு தெரியப்படுத்தப்படும். இது இறுதிப் போட்டி நிகழ்வாகவும், மறைமாவட்ட கிறிஸ்து பிறப்பு சிறப்பு விழாவாகவும் அமைந்திருக்கும்.
15.இறுதிப்போட்டியில் பங்கெடுக்கும் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். (எனவே விண்ணப்பப் படிவத்தில் பெயர்களை எழுதும்போது முழுப்பெயரை சரியாக எழுதவும்)
16.இறுதிப்போட்டி நிகழ்வுகள் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவுகள் செய்யப்பட்டு, வானொலி தொலைக்காட்சிகளினால் ஒலி, ஒளி பரப்ப ஏற்பாடுகள் செய்யப்படும்.

## இறுவட்டுப் போட்டி – (திறந்த போட்டி)

1. கிறிஸ்து பிறப்பு விழாவை பற்றியதாக இருத்தல் வேண்டும். பாடலை எழுதி, இசையமைத்து, இறுவட்டாக எம்மிடம் ஒப்படைக்க வேண்டும்.
2. ஒருவர் எத்தனை பாடல்களையும் தனித்தனி இறுவட்டில் ஒப்படைக்கலாம்.
3. இப்பாடல்கள் பல்லவியுடன் இரண்டு அல்லது மூன்று சரணங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
4. விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் ஒக்ரோபர் 10ஆம் திகதி.
5. ஒக்ரோபர் 25ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
6. முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளரின் விபரங்கள் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்
7. பரிசு : பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும்

போட்டிகளில் பங்கெடுத்து உங்கள் திறமைகளை வெளிப்படுத்த கலையருவியின் வாழ்த்துக்கள்.
உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி! இறையாசீர்! ●

**இயக்குனர், கலையருவி,**
**மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணிமையம்**

# மன்னார் மறைமாவட்டம்


## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### ஓகஸ்ட்

05. புனித மரிய மாதா - மாளிகைத்திடல்
- புனித அந்தோனியார் திருவிழா - பெரியகட்டு
- மடுத் திருப்பதியின் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்
06. தூய குழந்தை இயேசு - மூன்றாம்பிட்டி
07. புனித அந்தோனியார் திருவிழா - பள்ளக்கமம்
10. புனித லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார் மேற்கு
15. புனித மரியன்னை விண்ணேற்பு பெருவிழா - மருதமடு திருவிழா
18. புனித மடுமாதா சிற்றாலயம் - குட்செட் றோட்
19. புனித வேளாங்கண்ணித் திருவிழா
- வைத்தியசாலை (மன்னார்)
20. புனித வேளாங்கண்ணி - தம்பனைக்குளம்
21. தூய குழந்தை இயேசு சிற்றாலயம் - கள்ளியடிப்பிட்டி
- மடு அன்னை திருவிழா - சிதம்பரபுரம் (ஓமந்தை)
22. புனித பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம், பறப்பாங்கண்டல் - வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலய திருவிழா - தோட்டவெளி
- புனித அன்னை தெரேசா மறைபரப்பு அருட்சகோதரிகள் விழா
24. புனித பார்த்லேமியு திருவிழா - ஓலைத்தொடுவாய்
25. தூய கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு
- மடுமாதா - தங்கநகர்
- புனித யோசேவ்வாஸ் ஆலயம் - தச்சன்குளம்
26. சதாசகாயமாதா - கணேசபுரம், வெள்ளாங்குளம்
27. புனித அன்னை திரேசா திருவிழா - நடுக்குடா
28. புனித அந்தோனியார் திருவிழா - உயிர்த்தராசன்குளம்
- அளவக்கை பங்குத் திருவிழா
30. தூய குழந்தை இயேசு திருவிழா - மடுக்குளம்
31. புனித சவேரியார் ஆலயம் - சுந்தரர்புரம், ஆட்காட்டிவெளி

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*-மன்னா நிர்வாகம்-*

**முக்கிய செய்திகள்**

# ஏழு அருளாளர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவர்

உலக ஆயர்கள் மாமன்ற நிகழ்வுகளில் ஒன்றாக ஏழு அருளாளர்கள் புனிதர்களாக உயர்த்தப்படும் திருப்பலி ஒக்ரோபர் 14 ஞாயிறன்று வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் நடைபெறும்.

இவ்வாண்டு ஒக்ரோபர் 4 ஞாயிறன்று அருளாளர்களான திருத்தந்தை 6ஆம் போல், பேராயர் ஒஸ்கார் ரொமேரோ உட்பட, ஏழு அருளாளர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்தார்.

யூலை 19 காலை திருப்பீடத்தில் நிகழ்ந்த கர்தினால்கள் கூட்டத்தில் திருத்தந்தை அறிவித்த ஏழு அருளாளர்களில் ஒருவரான, 19 வயது நிறைந்த இளம் தொழிலாளி நுன்சியோ சுல்ப்ரீசியோ (Nunzio Sulprizio) அவர்கள் 1963ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் திகதி 2ஆம் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கென கூடியிருந்த ஆயர்கள் முன்னிலையில் அருளாளர் திருத்தந்தை 6ஆம் பால் அவர்களால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்.

இளையோரை மையப்படுத்தி இவ்வாண்டு ஒக்ரோபர் 3ஆம் திகதி முதல் 28ஆம் திகதி முடிய வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் இந்த புனிதர்பட்டவிழாவில் 19 வயது நிறைந்த தொழிலாளி சுல்ப்ரீசியோ அவர்கள் புனிதராக உயர்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



மேலும், மறைமாவட்ட அருட்பணியாளரும், திருநற்கருணை ஆராதனையாளர்கள் சபையை நிறுவியவருமான பிரான்செஸ்கோ ஸ்பிநெல்லி, மறைமாவட்ட அருள் பணியாளர் வின்சென்சோ ரொமானோ, இயேசு கிறிஸ்துவின் எளிய பணியாளர்கள் சபையை நிறுவிய மரியகத்தெரீனா காஸ்பெர், திரு அவையின் மறைபரப்புப்பணியாளர்கள் சபையை நிறுவிய அருட் சகோதரி நசாரியா இஞ்ஞாசியா ஆகிய நால்வரும் அருளாளர் நிலையிலிருந்து புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவர். ●

# மரண தண்டனை குறித்த மறைக்கல்வியில் மாற்றங்கள்



**மரண தண்டனை மனித மாண்பைக் குலைப்பதால், அதனை உலகெங்கும் ஒழிப்பதற்கு திருஅவை முயற்சிகள் மேற்கொள்ளும் - மறைக்கல்வி 2267 பிரிவில் கூறப்பட்டுள்ள புதிய திருத்தங்கள்.**

மரண தண்டனை குறித்து கத்தோலிக்க மறைக்கல்வி 2267என்ற பிரிவில் இதுவரை கூறப்பட்டு வந்த கருத்துக்களில் மாற்றங்களை உருவாக்கி திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயம் மாற்றப்பட்ட புதிய கருத்துக்களை 02.08.2018 வியாழன் அன்று வெளியிட்டுள்ளது. திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயத்தின் தலைவர் கர்த்தினால் Luis Francisco Ladaria அவர்கள் இவ்வாண்டு மே மாதம் 11ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்த வேளையில் இந்த மாற்றங்கள் அடங்கிய வரைவை அவருக்கு அளித்து, அவரது ஒப்புதலைப் பெற்றுள்ளதாக ஆயர்களுக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டுள்ளார்.

**மரண தண்டனை குறித்த பழைய மறைக்கல்வி கருத்து**

நீதியான முறையில் அமைக்கப்பட்ட அதிகாரிகள், நேர்மையான வழக்கை நடத்தி, அதன் இறுதியில் வழங்கிய மரண தண்டனை ஒருவர் செய்த மிகக் கொடிய குற்றத்திற்கு தகுதியான தண்டனை என்று மறைக்கல்வி 2267 எண் இதுவரை கூறி வந்தது.

➡ 14

# இளம் குருக்களுக்கான தொடர் உருவாக்கம்



இவ்வருடம் ஆடி மாதம் 24, 25, 26 தினங்களில் குருக்களுக்கான தொடர் உருவாக்கப் பயிற்சி கண்டி, அம்பிட்டிய, தேசிய குருமடத்தில் நடைபெற்றது. இத்தொடர் உருவாக்கக் கருத்தரங்கில் 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் குருத்துவ அபிஷேகம் பெற்ற 80 அருட்பணியாளர்கள் இலங்கையின் பல மறைமாவட்டங்களிலுமிருந்து பங்குபற்றினார்கள். இவர்களில் 8 பேர் மன்னார் மறைமாவட்ட குருக்கள் ஆவர்.

➡ 14

# கப்புச்சின் சபையின் இலங்கை தமிழ் பிராந்திய முதல்வராக அருட்பணி அ.செல்வராஜ்



தரணிக்குளம் புனித யோசப்வாஸ் கப்புச்சின் மறைப்பணித் தளத்தின் புதிய அதிபராக தமிழ் நாட்டைச் சேர்ந்த அருட்பணி அ.செல்வராஜ் (கப்புச்சின்) சபை அவர்கள் நியமனம் பெற்று, யூன் மாதம் 08ஆம் திகதி தனது பணிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். தரணிக்குளத்தை தனது வதிவிடமாக கொண்டுள்ள அவரை தரணிக்குளம் பங்கு இறைமக்கள் யூன் 10ஆம் திகதி ஞாயிறு திருப்பலியின் போது மிகவும் கோலாகலமாக வரவேற்றார்கள். அதேவேளை தரணிக்குளம் பங்கின் புதிய உதவிப் பங்குத்தந்தையாகவும், கப்புச்சின் மறைப்பணித் தளத்தின் நிதிப் பொறுப்பாளராகவும் மன்னார் மறைமாவட்டத்தின் முதல் கப்புச்சின் குரு அருட்பணி ஜெறி குயின்ரஸ் அவர்கள் நியமனம் பெற்று, யூலை 22ஆம் திகதி ஞாயிறு திருப்பலியின்போது தரணிக்குளம் பங்கு சமூகத்தினால் சிறப்பாக வரவேற்கப்பட்டு, தனது புதிய பணிப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். புதிய பணிப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ள கப்புச்சின் சபை துறவியரின் பணி சிறக்க வாழ்த்தி செபிக்கின்றோம். ●

# மன்னார் வேதசாட்சிகள் புனிதர் நிலையடைய மன்றாடுவோம்



மன்னார், தோட்டவெளி வேதசாட்சிகள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட மன்னார் மறைமாவட்ட திருஅவை முயற்சிகளை எடுக்கின்றவேளை அகிலஉலக திரு அவை மன்னார் திருஅவையோடு ஒன்றித்து ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுக்கின்றது. நாம் மேற்கொள்கின்ற வழிபாடுகள், திருப்பலிகள், அருட்சாதனக் கொண்டாட்டங்கள் அன்பிய குடும்ப தனிச் செபங்களில் இவர்களின் தியாகம் நிறைந்த விசுவாச வாழ்வை நன்றியோடு ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போம்.●

## மன்னார் மறைசாட்சிகளைப் புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான செபம்

எங்கள் ஆண்டவரான இயேசுக்கிறிஸ்துவே!

மனிதர் அனைவரின் மீட்பரே! எல்லா நாடுகளிலும், அனைத்து மக்கள் மத்தியிலும் இருந்து உமது திருப்பெயருக்குச் சாட்சிகளை உருவாக்க திருவுளம் கொள்பவரே! எங்கள் மன்னார் மண்ணிலும் எம்முன்னோர், உமக்காக இரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்து உம்முடைய அரசு பரவுவதற்கும், உமது திருப்பெயர் புகழப்படுவதற்கும் காரணமாய் விளங்கச் செய்தீரே! மறைசாட்சிகளின் அரசரே! உமக்காக உழைக்கும் உம்முடைய மக்களுக்கு, முன் மாதிரிகையையும், நிலையான பேறும் ஆனவரே! உமக்காக இரத்தம் சிந்தி, சாவைச் சந்தித்த எம் முன்னோராகிய உம் ஊழியர்களுக்கு, இம் மண்ணுலகில் திருச்சபையானது மறைசாட்சியர் பட்டமாகிய புனித முடியைச் சூட்டுவது இறைமகிமைக்கும், எமது மீட்புக்கும் ஏற்றதாய் இருக்குமானால் இந்த அருள் நிலை இவர்களுக்குக் கிடைக்கச் செய்தருளும். ஆண்டவரே இதை நீர் எமது மீட்புக்காகச் சிந்திய திரு இரத்தத்தை முன்னிட்டு உம்மிடம் இரந்து வேண்டுகின்றோம். “மறைசாட்சிகளின் அரசியே எங்களுக்காக உமது திருமகனிடம் பரிந்து பேசியருளும்” ஆமென். ●

**தமிழ் ஆன்மீகப் பணியக செய்திகள்**

# அயன்சீடல்ன் கறுப்பு மாதா திருவிழா

**- சுவிஸ் ஆன்மீகப் பணியகம் -**



சுவிஸ் வாழ் தமிழ் கத்தோலிக்க இறைமக்களால் கடந்த 18.06.2018 அன்று அயன்சீடல்ன் கறுப்பு மாதா திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. சுவிஸ் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்ட இத்திருவிழா திருப்பலியினை அருட்பணி பிரான்சிஸ் அசிசி தலைமையேற்று நடத்தியிருந்தார். ●

## புனித பூமிக்கான திருப்பயணம்



ஜெருசலேம் புனித பூமிக்கான திருப்பயணத்தை சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் கடந்த 16.07.2018 முதல் 27.07.2018 வரை மேற்கொண்டது.

இத்திருப்பயணத்தில் 27 தமிழ் இறைமக்கள் பங்குபற்றினார்கள். இவர்களோடு அருட்பணி. நெவின்ஸ் யேசுறாஜ் பீரீஸ் அடிகளாரும் இணைந்து கொண்டார். இப்புனித பயணத்தின்போது செசாரியா, கலிலேயா, கப்பர்நாகும், கானாவூர், நாசரேத்து, ஜெரிக்கோ, பெத்லகேம், ஜெருசலேம், பெத்தானியா ஆகிய இடங்களை தரிசித்தார்கள்.●

## கேவலார் அன்னையின் 31வது திருவிழா.

**- ஜேர்மனி ஆன்மீக பணியகம் -**






புலம்பெயர் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழாவை முன்னிட்டு நம் நாட்டின் நிரந்தர சமாதானத்திற்காகவும், அனைவருக்காகவும் இறை தந்தையை வேண்டுதல் செய்யும் பெருவிழா. ஒவ்வொரு ஆண்டும் இவ்விழா ஒரு தாயின் பிள்ளைகள் என்ற உணர்வோடு, உணர்ச்சி பூர்வமாக மிகச்சிறப்பாக ஜேர்மனி நாட்டின் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மிக பணியகத்தினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடமும் இத்திருவிழா கடந்த 11.08.2018 அன்று சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. பத்திநாதர் ஜெபரட்ணம் அவர்களால் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. சிறப்பாக ஒழுங்குபடுத்திய இயக்குனர் அருட்பணி நிரூபன் தார்சீசியஸ் அவர்களை பாராட்டுகின்றோம்.●

# லூர்து திருத்தல திருப்பயணம்

**- பிரான்ஸ் ஆன்மீக பணியகம் -**

பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் கடந்த 02ஆம் திகதி முதல் ஆவணி 06ஆம் திகதி வரை லூர்து அன்னையின் திருத்தலத்தை நோக்கிய திருப்பயணத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இவ் ஆன்மீகப் பணியகத்தின் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க இறைமக்கள், இயக்குனர் அருட்பணி. யோ. யுவேனால் கமலானந்தன் அமதி அடிகளாரோடு இணைந்து சிறப்பான, அருட்சியான, பக்தியுள்ள திருப்பயணமாக ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். ●

# அருட்பணித் திட்டமிடலும், தியானமும்

**- பிரான்ஸ் ஆன்மீக பணியகம் -**

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க பிரான்ஸ் ஆன்மீகப் பணியகத்தின் அடுத்த ஆண்டுக்கான அருட்பணித் திட்டமிடலும், தியானமும் எதிர்வரும் 2018 புரட்டாதி 8 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பணியக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துப் பணித்தளப் பணியாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இயக்குனர் தந்தை அழைக்கின்றார்.●

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# வங்காலை புனித ஆனாள் ஆலயத் திருவிழா






கடந்த யூலை மாதம் 26ஆம் திகதி காலை 6.15 மணிக்கு வங்காலை கிராமத்தின் பிரதான வீதியின் ஆரம்பத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி மேன்மை தங்கிய அருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் கிராம மக்களால் வரவேற்கப்பட்டு, பின்னர் ஆயர், குருமுதல்வர், ஏனைய அருட் பணியாளர்களுடன் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தார்.

பங்குத்தந்தை அருட்பணி S. மாக்கஸ் அடிகளார், ஆலய அருட்பணிப் பேரவை உறுப்பினர்களோடு இணைந்து ஆயத்த வழிபாடுகளையும், திருவிழா வழிபாட்டு ஒழுங்குகளையும் அழகுற ஏற்பாடு செய்திருந்தார். ஆயர் தமது இறை வார்த்தைப்பகிர்வில் வங்காலை பங்கு மக்களையும், அவர்களின் விசுவாச ஆழத்தையும், திரு அவைக்கு அவர்கள் உவந்தளித்த ஏராளமான இறை அழைத்தலுக்காகவும் நன்றி சொல்லி பாராட்டினார்.

தொடர்ந்து இன்னும் இவ் வங்க மண்ணில் இருந்து இறை அழைத்தல்களை மன்னார் திரு அவைக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இத் திருவிழாத் திருப்பலியில் வங்காலைப் பங்கு மக்கள், அயல் பங்கு மக்கள் என ஏராளமான விசுவாசிகள் பங்குபற்றியிருந்தனர். ●

# மன்னார் மறைசாட்சிகள் நினைவுவிழா – 2018





மன்னார் மறைசாட்சிகளின் புனித எலும்புகள் நிறைந்த தோட்டவெளி வேதசாட்சிகள் மண்ணில் அமைந்துள்ள வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் 20.07.2018 அன்று வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு பரிசுத்த ஆவியின் கொடி அருட்பணி. டே. அலெக்ஸ்சாண்டர் சில்வா அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டு திருச்செபமாலை ஆரம்பமானது. இதனைத்தொடர்ந்து ஆயத்தநாள் திருப்பலி அருட்பணி. ச. தேவராஜா கொடுதோர் (பங்குத்தந்தை: பேசாலை, சட்டமுதன்மைக் குரு, மன்னார் மறைசாட்சிகளின் பணி, திருமுழுக்கு குழு ஆன்மீக இயக்குனர்) அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்பணியாளர் மறையுரையில் "விசுவாச வாழ்வு பற்றியும், மன்னார் மறைசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்த மக்கள் ஜெபத்தின் மூலம் பெற்றுக்கொண்ட நன்மைத்தனங்களையும், அற்புதங்களையும் பட்டியலிட்டு உரோமைக்கு வழங்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். "அதனைத் தொடர்ந்து அருட்பணி. பிராங்டப் (திருவுளப் பணியாளர் சபை) அவர்கள் நற்கருணை ஆராதனை மற்றும் இறைவார்த்தைப் பகிர்வை வழங்கினார். அதில் "நற்கருணை ஆண்டவரே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு" என எடுத்துரைத்தார்.

மறுநாள் 21.07.2018 சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு பிரதம விருந்தினராக இருந்த அருட்பணி. டே. அலெக்ஸ்சாண்டர் சில்வா (பெனோ) அவர்களும், செட்டிகுளப் பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை அவர்களும், யோசப்வாஸ்நகர் பங்குத்தந்தை அருட்பணி. ச.பிரான்சிஸ் மேரி டிகோல் அவர்களும், அருட்சகோதரிகளும், அரசியல் பிரமுகர்களும், அமைப்பின் முக்கியஸ்தர்களும் மாலை அணிவித்து கவி பாடி ஆலயத்திற்கு பவனியாக அழைத்துவரப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து அனைவரும் மெழுகுதிரி ஏந்தி மறைசாட்சிகள் கல்லறைக்கு வந்தபின் அருட்பணி. டே. அலெக்ஸ்சாண்டர் சில்வா அவர்களால் கல்லறை ஆசீர்வதிக்கப்பட்டது.

அவ்வேளையில் இறைமக்களால் "மறைசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான செபம்" சொல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து திருப்பலியின் ஆரம்ப நிகழ்வாக மங்கலவிளக்கேற்றப்பட்டது. மேலும் அருட்பணி. டே. அலெக்ஸ்சாண்டர் சில்வா அடிகளார், செட்டிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை, யோசப்வாஸ்நகர் பங்குத்தந்தை அருட்பணி. ச.பிரான்சிஸ் மேரி டிகோல் ஆகியோருடன் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தார். மறையுரையில் அருட்பணி. டே. அலெக்சாண்டர் சில்வா (பெனோ) அவர்கள் "மறைசாட்சியம்" நம் முன்னோரின் உறுதியான விசுவாசத்தைக் காட்டுகின்றது. திருச்சபை வேதசாட்சிகள் புனிதர் நிலையடைய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆண்டவருக்கு சித்தம் இருந்தால் இந்தக்காரியம் நடைபெறும் என்று கூறினார். இவ் விழாவிற்கான ஏற்பாட்டை மன்னார் மறைசாட்சிகளின் சமூகநல அமைப்பின் தலைவர். திரு. சந்தியோகு (அமிர்தம்) நெடுங்கண்டல், அவர்கள் தலைமையிலான விழாக்குழு சிறப்பான முறையில் ஏற்பாடுசெய்திருந்தது.

**தகவல்:** திரு. எஸ். அந்தோனிப்பிச்சை M.A., M.phil,
மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு ஸ்தாபகர், ஆய்வாளர், ஆலோசகர், தொடர்பாளர். ●

# மன்னா செய்தியாளர் கருத்தமர்வு



கடந்த 04.08.2018, சனிக்கிழமை காலை 9.45 மணிக்கு "மன்னா செய்தியாளர்" கருத்தமர்வு நடைபெற்றது. திரு.முகுந்தன் (டான் தொலைக்காட்சி) நிறுவனத்தின் முகாமையாளர் இக்கருத்தமர்விற்கு வளவாளராக அழைக்கப்பட்டிருந்தார். இக்கருத்தமர்வு தலைமன்னார் வீதியில் அமையவிருக்கின்ற கலையருவி நிலையத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தமர்வில் பங்குகளிலும், ஆணைக்குழுக்களிலிருந்தும் பிரதிநிதிகள் பங்குபெற்றினார்கள். வளவாளர் தனது உரையில், ஊடகத்துறையின் அடிப்படை அம்சங்களையும், கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களையும் குறித்து பகிர்ந்து கொண்டார். சிறப்பாக பத்திரிகை என்றால் என்ன?, உள்ளடக்கங்கள், செய்திகள் எப்படி அமைய வேண்டும்? போன்ற விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

கலையருவி மையம் இக்கருத்தமர்வை மேற்கொண்டமைக்கான காரணம் என்ன?

1. மன்னா பத்திரிகைக்கான செய்தியாளர்களை ஊக்கப்படுத்தல்.
2. மன்னா செய்திகள் முழு பிரதேசத்தையும் பிரதிபலிக்க வேண்டும்.
3. ஊடகவியல் துறை சார்ந்த திறமையுள்ளவர்களை இனங்கானுதல்.
4. கத்தோலிக்க திருமறை விழுமியங்களை வெளிக்கொணர சமூக தொடர்பாடல் சாதனங்கள் பயன்படுத்தலாம். ●

# கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆங்கில கற்கைநெறி

## டொன் பொஸ்கோ உயர் கல்வி நிறுவனம்

முருங்கன் டொன் பொஸ்கோ நிறுவனமானது மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு மாணவர் இல்லத்தினையும், அத்தோடு பாடசாலையில் இடைவிலகிய மாணவர்களுக்கு தொழிற்கல்வி பயிற்சிகளையும் நடாத்திவருவது அனைவரும் அறிந்ததே.

இவ்வாண்டு உயர்தரப்பரீட்சை எழுதும் மாணவர்களையும் மற்றும் 2016ஆம் ஆண்டு 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயர்தரப்பரீட்சை எழுதிய மாணவர்களையும் கருத்திற் கொண்டு அவர்களின் எதிர்காலம் உயர்கல்வியிலோ, தொழில் துறைகளிலோ சிறக்கும் வகையில் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் முகமாக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆங்கில கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதோடு மாணவர்கள் கலந்து பயன்பெற முருங்கன் டொன் பொஸ்கோ கேம்பிரிட்ஜ் ஆங்கில கற்கைநெறி மையத்திற்கு இளையோரை அழைத்து நிற்கின்றோம். இவ்வாண்டு மட்டுமே மாணவர்களின் நலன் கருதி சலுகைகள் வழங்கப்படும். கற்கை நெறிமுடிவில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தினரால் (FIRST CERTIFICATE IN ENGLISH-B2 level) சான்றிதழ் வழங்கப்படும். *விண்ணப்பிக்கும் காலம் : ஆகஸ்ட் 2018, கற்கைநெறி ஆரம்பம் செப்ரெம்பர் (03.09.2018)* தொடர்புகளுக்கு: 0768476045, 0763611215, இயக்குனர் டொன் பொஸ்கோ, முருங்கன். ●

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## மன்னார் மாவட்டச் செய்திகள்

# மன்னாரில் புதிய பேரூந்து நிலையம்



கடந்த ஆடி மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு 180 மில்லியன் ரூபாய் செலவில் மன்னாரில் புதிய பொதுப் பேரூந்து நிலையம் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இப்பாரிய திட்டமானது மேல்மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைக்கிணங்க வடமாகாண பொது போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட "சுகித புரவர" செயற்திட்டத்திற்கிணங்க கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் 180 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக் கட்டுமான ஆரம்ப விழாவிற்கு மன்னார் நகரசபையின் தலைவர் திரு. ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் கௌரவ அமைச்சர்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள், அரச, அரச சார்பற்ற அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். ●

# கல்வித்துறையின் அதி உயர் சேவைக்கு தெரிவு. தம்பதியர்களை பாராட்டுகின்றோம்.



2016ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கை கல்வித்துறையின் அதி உயர் சேவைகளில் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS), இலங்கை கல்வியியலாளர் சேவை (SLTES) ஆகிய இரண்டு பரீட்சைகளிலும் சித்தி பெற்று கல்வி நிர்வாக சேவையில் விடத்தல்தீவை சேர்ந்த திரு. ச.செல்ரன் யூடிற் அவர்களும், கல்வியியலாளர் சேவையில் முள்ளிக்குளத்தைச் சேர்ந்த திருமதி. மே.யூ.தி.செல்ரன் யூடிற் கெலன் அவர்களும் நியமனம் பெற்று மன்னார் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். இப்பெருமைக்குரிய தம்பதியர்கள் தற்பொழுது அடம்பன் பங்கைச் சேர்ந்தவர்களாவர். ●

# மன்னார் நானாட்டான் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட 'லூர்து நகர்' கிராமம் மக்களிடம் கையளிக்கப்பட்டது.



மன்னார் மாவட்டம், நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட, நறுவிலிக்குளம் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அமைக்கப்பட்ட 102 ஆவது மாதிரிக்கிராமமான லூர்துநகர் கிராமம் வைபவ ரீதியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை 05.08.2018 அன்று காலை 10.30 மணியளவில் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வானது மன்னார் மாவட்ட உதவிப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் கௌரவ சஜீத் பிறேமதாச கலந்துகொண்டு இப்புதிய வீட்டுத்திட்டத்தை வைபவ ரீதியாக மக்களிடம் கையளித்தார். குறித்த கிராமத்தில் புதிதாக அமைக்கபட்ட 23 வீடுகளை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து திறந்து வைத்தனர். ●

புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# மறைபரப்புப் பணியில் பொது நிலையினர்

## முன்னுரை :

இயேசு சீடர்களைப் பார்த்து, "விண்ணிலும், மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கின்றது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள். இதோ நான் உலகம் முடியும்வரை உங்களோடு இருக்கின்றேன்" என்று கூறினார். (மத் 28:18).

ஆம். இதுவே இறைவனுடைய கட்டளை; அவரது திருவுளம் (2 தீமோ 4:5). இக்கட்டளையை நிறைவேற்றுவதே மறைபரப்புப் பணியாகும். மறைபரப்புப் பணி குருக்களுக்கு மட்டும் உரிய பணியல்ல. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள பணி. "தலையாகிய கிறிஸ்துவோடு தாம் கொண்டுள்ள ஒன்றிப்பிலிருந்தே பொது நிலையினர் தம் மறைத்தூதுப் பணிக்கான உரிமையும், கடமையும் பெறுகின்றனர்" (2ஆம். வத். சங்கம், பொ.ம.தூ.எண் 3). திருச்சபையாகிய கட்டடம் உயர நாம் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்புக்கள். ஒவ்வொரு உறுப்பும் நன்கு செயற்பட்டால்தான் உடல் நன்கு இயங்கும். நமது போதனையால் மட்டுமல்ல, சமுதாயத்தில் சிறந்த நற்செயல்கள் புரிவதன் மூலமும் இம்மறைபரப்புப் பணியை நாம் சிறப்பாகச் செய்ய முடியும். இதைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தனியாகவும், குழுவாகவும் செய்யலாம்.

## மறைபரப்புப் பணியில் முக்கிய பங்கு பெறுபவர்கள்:

சிறுவர், சிறுமியர், இளையோர், பெற்றோர், பக்திச் சபையினர், துறவற சபையினர் மற்றும் மறைமாவட்ட குருக்கள் ஆசிரியர்கள் மற்றும் வேதியர்கள்.

## 1. மறைபரப்புப் பணியில் சிறுவர் - சிறுமியர்:

"சிறுவர் கல்வி கற்கத் தொடங்கும்போதே மறைத்தூதுப் பணிகளுக்கான பயிற்சியும் தொடங்கவேண்டும்." (2ஆம் வத்திக்கான் சங்க ஏடு, பொ.ம.தூ. எண் 12.30). ஒரு சிறுமியின் நற்செய்தி அறிவிப்புப் பணி விவிலியத்தில் அழகாகக் கூறப்படுகின்றது: சீரியா அரசனின் படைத்தலைவன் நாமான். அவனுக்குத் தொழுநோய் கண்டிருந்தது. சில கள்வர்களால் இஸ்ரவேலிலிருந்து கடத்தப்பட்ட ஒரு சிறுமி, நாமானின் மனைவிக்குப் பணிவிடை புரிந்து வந்தாள். அச்சிறுமி தன் தலைவியை நோக்கி, "என் தலைவர் சமாரியாவில் இருக்கின்ற இறைவாக்கினரைப் பார்க்கச் சென்றிருந்தால் அவர் இவரது தொழுநோயை நிச்சயமாகக் குணமாக்கி இருப்பார்" என்றாள்.

ஒரு சிறுமி மூலமாக நாமான் என்ற படைத்தலைவனுக்கு எவ்வாறு நற்செய்தி அறிவிக்கப்பட்டது என்பதை இந்த நிகழ்ச்சி சுட்டிக்காட்டுகின்றது.

எனவே, சிறுவரும் சிறுமியரும் நற்செய்தி அறிவிக்கலாம் அல்லவா? புனித சின்னப்பர் திமோத்தேயுவைப் பார்த்து, "குழந்தைப் பருவம் முதலே உமக்கு மறைநூல் தெரியும் என்பதை நீர் மறவாதீர்" என்று கூறுகின்றார். (2திமோ 3:15). இதிலிருந்து திமோத்தேயு சிறுவயதிலிருந்தே நற்செய்தியை நன்கு அறிந்திருந்தார் என்பது தெரிகின்றது.

திமோத்தேயுவின் பாட்டி, தாய் ஆகியோரின் உள்ளத்திலிருந்த அதே விசுவாசம் திமோத்தேயுவின் உள்ளத்திலும் இருக்கின்றது என்கிறார் புனித சின்னப்பர். இதிலிருந்து பரம்பரை பரம்பரையாக அவரது குலம் மறைபரப்பு பணியில் ஆர்வமாய் இருந்தது என்பதும், இவர் சிறுவயதிலிருந்தே இப்பணியை ஆர்வமாய்ச் செய்தாரென்றும் நன்கு தெரிகின்றது. "தார்சியுஸ்" என்ற சிறுவன் நற்கருணையை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வீரச் செயல் புரிந்து சிறு பருவத்திலேயே இயேசுவுக்காகத் தன் உயிரைக் கொடுத்தார். சிறுவர்களாய் இருக்கும்போதே சிறு சிறு நற்செயல்களால் கிறிஸ்துவையும், அவரது போதனைகளையும் பரப்பக் கற்பிக்க வேண்டும்.

## சிறுவர்களின் நற்செயல்கள்:

1. பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் : (ஏபே 6:1 "பிள்ளைகளே ஆண்டவருக்குள் கீழ்ப்படிந்திருங்கள்")
2. கோயிலுக்குச் செல்லுதல் : (இயேசு எருசலேம் கோயிக்குச் சென்றார்)
3. செபிக்கும் பழக்கம் : (இயேசு செபித்தார்: லூக் 11:1)
4. இறைவார்த்தையைக் கவனமுடன் கேட்டல், ஆழ்ந்து சிந்தித்தல் : (இயேசு 12 வயதில் எருசலேம் ஆலயத்தில் மறைநூல் அறிஞர்களிடையே அமர்ந்து மறைநூலை விவாதித்தார்)
5. சிறு சிறு இரக்கச் செயல்களில் ஈடுபடல் : (இயேசு சென்ற இடமெல்லாம் நன்மை செய்துகொண்டே சென்றார்)
6. பாவிகளை இரட்சிக்க சிறு ஒறுத்தல் முயற்சிகளைச் செய்தல்.
7. பள்ளியில் மறைக்கல்வி கற்றல்.
8. பிறமதக் குழந்தைகளிடம் முன்மாதிரிகையான வாழ்வு. (மத் 5:11-13)
9. இயேசுவைப் பற்றிப் பிறருக்கு எடுத்துக் கூறுதல் : (நண்பருடன் உரையாடல் வழியாக கலை நிகழ்ச்சிகள் வழியாக)

மாற்கு 10:14 : "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், தடுக்க வேண்டாம். ஏனெனில் கடவுளின் அரசு இத்தகையோரதே". இக்கூற்றிலிருந்து குழந்தைகள் தூய உள்ளமுடையவராய், இறைவனுக்கு மிகவும் உகந்தவராய் இருப்பதால் அவர்கள் செய்கின்ற நற்செயல்களே மற்றவர்களை இறைவன் பால் ஈர்க்கும் சிறந்த கருவியாக அமைகின்றன.

இவ்வாறு குழந்தைகளும் மறைபரப்புப் பணிகளில் சிறப்பாக ஈடுபடலாம். கலாத்தியர் 1:15, எபேசியர் 1:4 பகுதிகளில் நற்செய்தி அறிவிக்கும் அழைப்பு தாயின் கருவிலிருக்கும் போதே கிடைக்கின்றது என்பது தெளிவாகின்றது.



## 2. மறைபரப்புப் பணியில் இளைஞர்கள்:

1அரு 2:14 : "இளைஞரே நீங்கள் வலிமை மிகுந்தவர்கள். கடவுளின் வாக்கு உங்களுள் நிலைத்து நிற்கின்றது. தீயோனை நீங்கள் வென்று விட்டீர்கள்." இக்கூற்றிலிருந்து இளைஞர்கள் வலிமையாகவும், திடமாகவும், அஞ்சா நெஞ்சுடனும், துணிச்சலுடனும் எதையும் எடுத்துரைக்கவும், செய்யவும் ஆற்றல் படைத்தவர்கள் என்பது தெளிவாகின்றது.

எனவே, அத்தகைய இளையோர் மறைபரப்புப் பணிக்கு மிகவும் அவசியம். இன்று திருமறையின் பணிகளுக்கு இளைஞர்களைப் பயன்படுத்தாவிடில் நாம் மாபெரும் ஆற்றலை இழந்தவராவோம். இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களின் பணியில் அவர்கள்

1. அலகையைத் தோற்கடித்தவர்களாய் இருக்க வேண்டும்.
2. கடவுளின் வாக்குத்தத்தங்களுக்குள் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். இளையோரின் மறைபரப்புப் பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு புனித டோமினிக் சாவியோ:

- இறைவனைப் பழித்துப் பேசியவர்களை புனித டோமினிக் சாவியோ மனம் மாற்றினார்.
- விடுமுறையில் தன் நண்பர்களுக்கு மறைக்கல்வி கற்றுக் கொடுத்தார்.
- ஏழை எளியவர்களின் கவலையைப் போக்கி அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.
- "தீங்கு செய்தோரை மன்னிக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறி வந்தார்; சமாதானத்தின் கருவியாகத் திகழ்ந்தார்.
- "என் தோழர்களை ஆண்டவர் பாதம் கொண்டுபோய்ச் சேர்ப்பேனாகில் நான் எவ்வளவோ பேறுபெற்றவன்" என்று கூறினார்.

புனித டோமினிக் சாவியோவைப்போன்று நம் இளைஞர்கள் ஏன் நற்செய்திப்பணி ஆற்றக்கூடாது?

## பணக்கார வாலிபனுக்கு அழைப்பு (மத்19:14–22)

இயேசு பணக்கார வாலிபனை நோக்கி "நீ நிறைவுபெற விரும்பினால், போய் உன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு வானத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பின்னர் வந்து என்னைப் பின் செல்" என்று அழைத்தார். ஆனால் அவன் அதைக் கடைப்பிடிக்காமல் வருத்தத்துடன் திரும்பிச் சென்றான். மறைபரப்புப் பணியில் அவனுக்கு ஆர்வமில்லை. சொத்தின் மேல்தான் அதிகப் பற்று இருந்தது. நம் இளைஞர்கள் இவனைப்போன்று இல்லாமல் நற்செய்திப் பணியில் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும். (2ஆம் வத். சங்க ஏடு, பொ.ம.தூ.எண் 12).

1இரா. 5:5 "இளைஞர்களே, நீங்கள் மூப்பர்களுக்குப் பணிந்து நடவுங்கள். ஒருவரோடு ஒருவர் பழகுகையில் மனத்தாழ்ச்சியை ஆடையாக அணிந்து கொள்ளுங்கள்" என்ற கூற்றின்படி இளைஞர்கள் பணிவு, தாழ்ச்சி ஆகிய நற்செயல்கள் மூலம் நற்செய்தியைப் பரப்பலாம். அவர்களைப் பின்பற்றிப் பலர் திருச்சபையில் சேருவர்.

சீராக் 25:5 "உன் இளம் வயதில் நீ சேகரியாததை எவ்விதம் உன் முதுமையில் காணப்போகின்றாய்?" என்ற கூற்று இளம் வயதில் ஒவ்வொருவரும் மறைப்பரப்புப் பணியில் ஈடுபட்டு இறையரசுக்கு நன்மக்களைச் சேகரிக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

## 3.மறைபரப்புப் பணியில் பெற்றோர் :

ஏபேசி 6:4 "தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்குச் சினமூட்டாதீர்கள். அவர்ளைக் கண்டித்துத் திருத்தி, ஆண்டவருக்கு ஏற்ற முறையில் அறிவு புகட்டி வளர்த்தல் வேண்டும்."

## பெற்றோர் கடமை

குழந்தைகளுக்கு ஞான அறிவைப் புகட்டுதல், இறை பக்தியிலும், ஒழுக்கத்திலும் வளரப் பயிற்றுதல், பிறரன்புச் செயல்களைப் பழக்குதல், குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருத்தல், வீட்டில் விவிலியம் வாசித்து பிள்ளைகளுக்கு விளக்குதல்.

## பெற்றோரின் நேரடி நற்செய்திப் பணி

அன்றொரு நாள் ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடி பல் மருத்துவர் டாக்டர் ஜோ. பிரபாகரன் என்பவருடைய வீட்டுக்கு அவரது மனைவியை (பேராசிரியை) சாத்தான்குளப் பங்கு ஆசிரியர்களுக்கு ஒரு கருத்தரங்கு நடத்த அழைப்பதற்காகச் சென்றிருந்தோம். வீட்டில் குழந்தைகள் தான் இருந்தனர். பெற்றோர் இருவரும் இல்லை. "உங்கள் அப்பா, அம்மா எங்கே? " என்று அவர்களிடம் கேட்டபோது, "எங்கள் அப்பா, அம்மா இருவரும் ஒரு கிராமத்திற்கு மறைபரப்புப் பணி செய்யப் போயிருக்கின்றார்கள்." என்று கூறினர். அவர்ளைப் பற்றி மேலும் விசாரித்தபோது, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இந்தப் பெற்றோர் மறைபரப்புப் பணி செய்ய கிராமங்களுக்குச் செல்வது வழக்கம் என்பது தெரியவந்தது. இவ்வாறு ஒவ்வொரு பெற்றோரும் நற்செய்திப் பணி செய்தால் திருச்சபை ஆலமரம் போல் பரந்து விரிந்திருக்கும். (வாசியுங்கள்: 2ஆம் வத். சங்க ஏடு, பொ.ம.தூ. எண் 11).

## 4.மறைபரப்புப் பணியில் பக்திச்சபைகளின் பங்கு

நம் பங்குகளில் பல்வேறு பக்திசபைகள் செயற்படுகின்றன. இவற்றின் உறுப்பினர் குறிப்பிட்ட செபங்களைச் சொல்வதோடும், சிற்சில நற்செயல்களையும், அறப்பணிகளையும் செய்வதோடும் நின்றுவிடுகின்றனர். பக்தி சபையினர் வீடுகளைச் சந்தித்து, மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கும் பணியில் அதிகமாகப் பயிற்றப்படவேண்டும். ஒவ்வொரு பக்தி சபையும் தனது பணித்திட்டத்தில் நற்செய்தி அறிவிப்புப் பணியை அவசியம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

## 6. மறைபரப்புப் பணியில் ஆசிரியர்கள் மற்றும் வேதியர்களின் பங்கு :

சீராக் 30:1 "தன் மகனுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கின்றவன் அவன் பொருட்டு புகழப்படுவான்."

பழமொழி 23:12 : "உன் செவிகள் அறிவுச் சொற்களிலும், உன் இதயம் போதகத்திலும் பழகிக் கொள்ளக் கடவன. சிறுவனைக் கண்டிக்க மறவாதே."

பழமொழி 15:22 "சிந்திப்போர் எங்கே அதிகமாக அங்கே சிந்தனைகள் வலுப்படுகின்றன."

மேற்கண்ட விவிலிய வசனங்கள் ஆசிரியர்களின் பணிகளை விளக்குகின்றன. ஒரு மாணவனை சிறந்த அறிவாளியாக மாற்றுவது ஆசிரியரே. நாளைய தலைவர்கள் இன்றைய குழந்தைகளாக ஆசிரியர்களிடம் உள்ளனர். அந்தப் பிஞ்சு உள்ளங்களில் விதைக்கப்படும் மறை போதனையானது நன்கு வளர்ந்து பலன் தரும். எனவே, ஆசிரியர்கள் மறைகல்வியைக் கற்றுக்கொடுக்கும்போதும், எடுத்துக்காட்டான முன்மாதிரியான வாழ்க்கை வாழும்போதும் இம் மறைபரப்புப் பணியை இளம் வயதிலே சிறுவர்களிடம் செய்கின்றனர். இது அவர்களிடம் வளர்ந்து நன்கு பலனளிக்கின்றது.

## வாழ்க்கைச் சான்று :

"பீற்றர் ரெட்டியார்" என்று கப்பூச்சின் மூன்றாம் சபையைச் சேர்ந்த ஒருவர், பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை மாலையில் ஒருசில ஊர்களுக்கு நடந்து செல்வார். சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் கிராம மக்களுக்கு நற்செய்திப் பணி செய்துவிட்டு, திங்கட்கிழமை காலையில் கல்லூரிக்கு வந்து தன் கடமையை நிறைவேற்றுவார். அவருடைய பழக்கத்தினால் கல்லூரிப்பணி பாதிக்கப்படுமோ என்று கல்லூரி முதல்வர் கேட்டபோது, "நான் கல்லூரிப் பேராசிரியர் வேலையை வேண்டுமானால் விட்டுவிடுகின்றேன் ஆனால் எனது நற்செய்திப் பணியை நான் விடமாட்டேன் " என்று கூறினார்.

பங்குத் தளங்களிலே நடக்கும் மேய்ப்புப் பணிகளை அங்குள்ள ஆசிரியர்கள் ஆர்வமுடன் செய்யவேண்டும். பெருந்திரளான மக்களுக்கும், பங்குக் குருவுக்குமிடையே உறவின் பாலமாக அமையவேண்டும். ஏனெனில், பள்ளிக்குள் மட்டுமல்ல பள்ளிக்கு வெளியேயும் ஆசிரியர்களின் பணித்தளம் விரிந்து கிடக்கின்றது. பங்குத் தளத்தில் ஆசிரியர்கள் தம் பணியை ஒரு அழைத்தலாகக் கருதி, பெற்றோரையும், மற்றோரையும் அவர்கள் இல்லங்களிலே சந்தித்து, அமைதியான முறையில், ஆரவாரமில்லாமல் மிகப் பெரிய நற்செய்திப் பணியைச் செய்ய, மாவைப் புளிக்கவைக்கும் புளிக்காரம் போல செயற்பட்டு அச்சமுதாயத்தையே மாற்றி அமைக்க வாய்ப்புக்கள் பல இருக்கின்றன (மத் 13:33).

வேதியர்கள் வழக்கமாக ஆற்றிக் கொண்டிருக்கும் ஆலயப் பணிகளோடு, நேரடி நற்செய்திப் பணியிலும் ஆர்வத்தோடு ஈடுபட வேண்டும். பிற மறையினர் அதிகமாக வாழும் கிராமங்களை நற்செய்தி அறிவிப்புக்காகத் தத்தெடுத்து சிறப்புப் பணிபுரிதல் சாலச் சிறந்தது.

மக்களின் அன்றாடப் பணிகளின் இடையே அவர்களது குடும்ப விழாக்கள், சமுதாய விழாக்களில் தங்களுக்குத் தாங்களே வாய்ப்புக்களை உருவாக்கிக்கொண்டு, இறை வார்த்தையை எடுத்துரைத்து பல வேதியர்களும், ஆசிரியர்களும் செய்துவரும் மிகச் சிறப்பான பணி பாராட்டுக்குரியது. எல்லா வேதியர்களும், ஆசிரியர்களும் இவ்வாறு தன்னார்வத்துடன் நற்செய்திப்பணி புரிய அழைக்கப்படுகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்தவ ஆசிரியர்களும், வேதியர்களும் மக்கள் முன்னிலையில் ஒரு எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்து காட்டவேண்டும். பக்தியிலும், சேவையிலும், எடுத்துக்காட்டான வாழ்விலும் சிறந்து விளங்க வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும், வேதியரும் ஒரு துணைப் பங்குக் குருவாக செயற்படவேண்டும். நம் பொறுப்பில் விடப்பட்டவர்களுக்காக ஒருநாள் நாம் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்.

## இறுதியாக ஒரு சொல் :

"நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினார். ஆனால் விளையச் செய்தவர் கடவுளே" (1கொ 3:6) என்ற சின்னப்பரின் கூற்றின்படி சிறுவர், சிறுமியர், இளையோர், பெற்றோர்கள், பக்தி சபையினர், துறவற சகோதர சகோதரிகள், ஆசிரியர்கள், வேதியர்கள் ஆகியோர் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த அளவுக்கு இம்மறைபரப்புப் பணியைச் செய்யும்போது இறைவன் நல்ல விளைச்சலைக் கொடுக்கின்றார்.

எனவே மத். 28:18இல் "எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள்" என்று கூறும் இயேசுவின் ஆர்வத்தை நிறைவேற்ற இன்றே புறப்படுவோம். வாரீர்! வாரீர்!! •



# மாணவர் மன்னா



## [மத்தேயு நற்செய்தி] விவிலிய வினாவிடைப்போட்டி - 01

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகள் எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. இறுதித் திகதி 01.09.2018
3. ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் மூன்று பேருக்கு மறைமாவட்ட கறோல் நிகழ்வில் சிறந்த பரிசுகள் வழங்கப்படும்.
4. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.
5. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
6. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
7. "விவிலிய வினாவிடைப் போட்டி - 01", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 116/3, சென்.ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.●

## மத்தேயு வினா - விடைகள்

### அதிகாரங்கள்: 1-10வரை

1. யூதாவுக்கும் தாமாருக்கும் பிறந்த புதல்வர்களின் பெயர்?
2. திருமுழுக்கு யோவான் உண்டு வந்த உணவு எது?
3. யோசேப்பு எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இரவில் எந்த நாட்டிற்கு சென்றார்?
4. அலகையினால் சோதிக்கப்படுவதற்காக இயேசுவைப் பாலைவனத்திற்கு அழைத்துச் சென்றது யார்?
5. கனிவுடையோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் எதை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்?
6. ஒருவர் தருமம் செய்யும்போது எப்படியான மனநிலையிலிருக்க வேண்டுமென்று இயேசு போதித்தார்?
7. "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகின்றவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்று எது கூறுகின்றது?
8. "ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் பையன் குணமடைவான்" என்று கூறியவர் யார்?
9. இயேசு முடக்குவாதமுற்றவனைப் பார்த்து எதைத் தூக்கிக் கொண்டு போகும்படி கூறினார்?
10. இயேசு பன்னிரு சீடர்களை அனுப்பிய போது எவ்வகையான அதிகாரங்களைக் கொடுத்தார்?●

## விவேகம் சிறந்தது. கதையுடன் சிந்தனை..

ஒரு ரயில் பயணம். அதில் தந்தையும், மகளும் பயணிக்கின்றார்கள். சிறிது தூரம் சென்றதும் தந்தை உறங்கிவிட்டார். அந்த சமயத்தில் ரயிலின் உள்ளே திருடர்கள் நுழைந்து பயணிகளின் அனைத்துப் பொருட்களையும் கொள்ளையடித்து விட்டனர். தந்தை விழித்தெழுந்து பார்த்தார். தான் கொண்டு வந்த பெட்டி திருட்டுப் போய் விட்டதே என்று அழுது புலம்பினார். அப்போது மகள் "அப்பா அழாதீர்கள், திருடர்களைக் கண்டதும் எனது நகைகளைக் கழற்றி வாய்க்குள் போட்டு விட்டேன். இதோ என் நகைகள்" என வாயைத் திறந்து நகைகளை எடுத்துக் கொடுத்தாள். அப்போது தந்தை "இது தெரிந்திருந்தால் உன்னுடைய அம்மாவை அழைத்து வந்திருக்கலாம். அவள் பெட்டியை விழுங்கி அதையும் பாதுகாத்திருப்பாள்" என்று கூறி பெருமூச்சு விட்டார். பிள்ளாய் விவேகத்தையும் முன்மதியையும் பற்றிக்கொள். இவற்றை எப்போதும் உன் கண்முன் நிறுத்தி வை. இவை உனக்கு உயிராகவும், உன் கழுத்துக்கு அணிகலனாகவும் இருக்கும். நீ அச்சமின்றி உன் வழியில் நடப்பாய்? உன் கால் ஒருபோதும் இடறாது. (நீதி. மொ 3:21-23)●

## செவ்வாயில் பறக்கப்போகும் ஹெலிகொப்டர்

மீண்டும் செவ்வாய் மீது கவனம் செலுத்தவிருக்கின்றது அமெரிக்காவின் விண்வெளி அமைப்பான நாசா ஏற்கனவே அனுப்பியதைப் போல ஊர்தியை அனுப்பாமல், 2020 செவ்வாய் திட்டத்திற்கு ஹெலிகொப்டர் ஒன்றை நாசா அனுப்பப் போகின்றது. "மார்ஸ்காப்டர்" எனச் செல்லமாக அழைக்கப்படும் இது தானோட்டி வாகனம் ஆகும்.

மார்ஸ்காப்டர் செவ்வாயில் இறங்கியதும் எப்படிப் பறக்கும், என்ன மாதிரியான படங்களை எடுத்து அனுப்பும் என்பதை விளக்கும் ஒரு கற்பனைக் காணொலியையும் நாசா அண்மையில் வெளியிட்டுள்ளது. விண்கலன்களிலிருந்தும், செவ்வாயின் தரைப் பகுதியிலிருந்தும் ஏகப்பட்ட படங்களை நாசா எடுத்துள்ளது. என்றாலும் பறவைப் பார்வையில் செவ்வாயின் மேற்பரப்புகளைப் படம்பிடித்து ஆராய்வதன் மூலம் அக்கிரகத்தைப் பற்றி நமக்கு புதுவிதமான தகவல்கள் கிடைக்கும் என நாசா நம்புகின்றது.●

## உலகின் முதல் அம்புலன்ஸ் உருவான வரலாறு தெரியுமா?

நெப்போலியன் படைப்பிரிவில் பணியாற்றிய தலைமை டாக்டர் டொமினிக் ஜின்லாரேதான் அம்புலன்ஸ் என்ற வார்த்தையைக் கண்டுபிடித்தார். பயன்படுத்தினார். இது பிரெஞ்சு வார்த்தை. 'ஹொஸ்பிட்டல் அம்புலன்ஸ்' என்னும் வார்த்தைக்கு 'நகரும் மருத்துவமனை' என்பது பொருள். முதல் அம்புலன்ஸ் வண்டி 200 வருடங்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. முதலில் குதிரை பூட்டிய வண்டியில் இருந்த அம்புலன்ஸ், பின் இரயில்கள், கப்பல்கள், விமானங்கள் என விரிவடைந்தது. அம்புலன்ஸில் நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் போது பலர் இறக்க நேரிட்டதால் அம்புலன்ஸிலேயே ஒக்சிஜன்,ஸ்ட்ரெச்சர், மருந்துகள் ஆகிய முக்கியமானவற்றைக் கொண்ட குட்டி மருத்துவமனை போல் ஆக்கப்பட்டது. மோட்டார் வாகனங்களில் அமைக்கப்பட்ட உலகின் முதல் அம்புலன்ஸ் நியூயோர்க் நகரில் உள்ள பெவில்யூ மருத்துவமனையில் 1869ஆம் ஆண்டில் மக்களுக்காக பயன்படுத்தப்பட்டது. உலகின் முதல் ஹெலிகொப்டர் அம்புலன்ஸ் இரண்டாம் உலகப் போரில் செயல்பட்டது. 1970க்குப் பிறகு அம்புலன்ஸிற்காகவே பயிற்சி அளிக்கப்பட்ட மருத்துவர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் அமர்த்தப்பட்டனர். ஆபத்தில் உள்ள நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அம்புலன்ஸிலேயே அளிக்கப்பட்டது. உலகின் மிகப்பெரிய அம்புலன்ஸ் வாகனம் பிரிட்டனில் உள்ளது. 59அடி நீளமுள்ள 44 படுக்கை வசதி கொண்ட அம்புலன்ஸ் அமெரிக்காவில் உள்ளது. "தாதியர்" என்றால் 'மருந்து, உணவு முதலியவற்றை அன்புடன் ஊட்டி நம்மை உற்சாகப் படுத்துபவர்' என்று பொருள். கிரேக்க உரோமானியர்கள் காயங்களுக்கு மருந்து கட்டுவதற்காக மட்டும் இத்தகைய பெண்கள் இருந்தனர். உரோமானியர்கள் ஆண் தாதியர்களை தங்கள் இராணுவத்தில் சேர்த்தனர். அவர்கள் அடிபட்ட வீரர்களுக்கு மருந்து வைத்துத் தாமே கட்டிவிட்டனர்.●

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம் பற்றிய ஓர் அறிமுகம்

## - அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி -

'கிறிஸ்தவ நாகரிகம்' எனும் கற்கைநெறி கிறிஸ்தவ கலாசாரம், கிறிஸ்தவ பண்பாடு அதன் தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையும், மையமும் கிறிஸ்துவாகும். கிறிஸ்துவின் படிப்பினைகள், பணிகள், பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றின் பிரதிபலிப்பில் இறையாட்சி சமூகத்தை உருவாக்குவதே கிறிஸ்துவின் இலட்சியமாகும். இறையாட்சிச் சமூகத்தின் மதிப்பீடுகளின் வளர்ச்சியையும், பரம்பலையும் வரலாற்று நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற கற்கைநெறியே கிறிஸ்தவ நாகரிகமாகும். தொன்மை நாகரிகங்களை தோற்றுவாயாகக் கொண்ட யூத நாகரிகம் இறை நம்பிக்கையை ஆணிவேராகக்கொண்டு, மேற்கத்தேய நாகரிகங்களின் தாக்கங்களுடனும், தனித்துவமான பண்புகளுடனும் வளர்ந்துள்ளது.

யூத, கிரேக்க, உரோமநாகரிகங்களின் முக்கிய கூறுகளைத் தன்னகத்தே கொண்டதே கிறிஸ்தவ நாகரிகமாகும். இது ஐரோப்பிய நாகரிகத்தின் தோற்றத்திற்குப் பல வழிகளில் பங்களிப்புச் செய்ததுடன், ஐரோப்பாவில் பாரிய வளர்ச்சியையும், பரம்பலையும் பெற்ற நாகரிகமாகும். கிறிஸ்தவ கோட்பாடுகளில் தோன்றிய சிந்தனைகளாலும், சமயச் சீர்திருத்த சிந்தனைகளாலும் பன்மைத் தன்மையுடன் வளர்ந்துள்ளது. மறுமலர்ச்சிக்கால நவீனத்துவ சிந்தனைத் தாக்கங்களுடன் கிறிஸ்தவ கலை, சிற்பம், ஓவியம் இலக்கியங்கள் எனப்பல கலாசார வளங்களை உலகிற்கு அளித்துள்ளது. சமூக நலன், சமூக ஒன்றிப்பு என்பவற்றோடு அமைதிக்கான வழிகளை ஏற்படுத்துவதில் முனைப்பாக செயற்பட்டுவருகின்றது. பரந்த தன்மைகொண்ட கிறிஸ்தவ நாகரிகத்தை கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்கள் இலகுவாகக் கற்று, அறிந்து, கற்றலின் பேற்றை அடையும் வழியில் பத்து தேர்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவை இங்கு வரலாற்று அடிப்படையில் அல்லது விடயப்பொருள் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் தேர்ச்சிகளுக்குள்ளும், தேர்ச்சி மட்டங்களுக்குள்ளும் நெருங்கிய தொடர்புண்டு. அவற்றைப் படிப்படியாக அறிந்து இப்பாடத்தைக் கற்கவேண்டும். அதனால் கிறிஸ்தவ நாகரிகத்தின் தன்மை, அதன் வளர்ச்சி, பங்களிப்பு பற்றிய விடயங்களைப் புரிந்துகொள்வது இலகுவாகும். ஒவ்வொரு தேர்ச்சியிலும் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**தேர்ச்சி - 1:** நாகரிகத்தினதும், பண்பாட்டினதும் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்துக்கு அடிப்படையான யூத நாகரிகம் மற்றும் எகிப்திய, அசீரிய, பபிலோனிய, பாரசீக, கிரேக்க, உரோம நாகரிகங்களின் தாக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

**தேர்ச்சி - 2:** ஒரு நாகரிகத்தின் தோற்றத்துக்குக் காரணமான நிலப்பகுதியின் முக்கியத்துவமும், அதை அண்டி வாழும் மக்களின் வாழ்வியல் தன்மைகளும் தரப்பட்டுள்ளன.

எகிப்திய அடிமைத்தனமும், உடன்படிக்கையும், நீதித்தலைவர்கள், அரசர்கள் காலங்கள், பிளவுபட்ட அரசு, நாடுகடத்தல், நாடுதிரும்புதல் போன்றவை இப்பகுதியில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன.

**தேர்ச்சி - 3:** கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்தில் யூதரான இயேசுவின் காலத்து பாலஸ்தீனாவின் ஆட்சிமுறை, சமூக அமைப்பு, சமயப் பின்னணி, யூதமொழி, சமூக, சமய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் தாக்கம் மற்றும் வழக்கங்கள் பற்றிய விடயங்களையும் இப்பகுதியில் காணலாம்.

**தேர்ச்சி - 4:** கிறிஸ்தவ நாகரிகத்துக்கு அடிப்படை இயேசுக் கிறிஸ்துவே. அவரின் வாழ்வில், படிப்பினைகளில், செயற்பாடுகளில், பாடுகள், மரணம், உயிர்ப்பில் பிரதிபலிக்கப்படும் விழுமியங்கள் கிறிஸ்தவ நாகரிகத்துக்கு முக்கியமானவையாகும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி - 5:** திருத்தூதர்களின் படிப்பினைகளையும், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைபற்றிய விடயங்களையும் அறியமுடிகின்றது. புனித பவுல் தம் வாழ்வில் எதிர்கொண்ட சவால்களும், அவரது மறைசாட்சி மரணமும் தரும் விழுமியப் படிப்பினைகள் கிறிஸ்தவ நாகரிகத்தின் தன்மையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

**தேர்ச்சி - 6:** கிரேக்க கலாசார சூழலில் கிறிஸ்தவம் எதிர்கொண்ட சவால்களையும், கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பையும், இக்கால கட்டத்தில் கீழைத்தேய, மேலைத்தேய துறவறச்சபைகள் கிறிஸ்தவ வாழ்வியல் வளர்ச்சிக்கு செய்த பங்களிப்பையும் காணமுடியும்.

**தேர்ச்சி - 7:** புனித பெனடிக்ற் சபையினரின் பணிகள் சிறப்பிடம் பெறுவதோடு, மத்தியகால உச்சப் பகுதியில் சமய சீர்திருத்த சிந்தனையாளர்களும், திருத்தெந்தீன் பொதுச்சங்கமும், துறவற சபைகளும் கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு சிறப்பிடம் பெறுகின்றது.

**தேர்ச்சி - 8:** ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய அறிவுசார் விழிப்புணர்வுக் காலத்தில் சமுதாய வளர்ச்சிக்கு உதவ கல்வியாளர்களும், விஞ்ஞானிகளும், சிந்தனையாளர்களும், கலைஞர்களும் பங்களிப்பாற்றினர். கிறிஸ்தவ இலக்கிய நூல்கள், இசை, கட்டிட, சிற்ப, சித்திரக் கலைகள் கிறிஸ்தவ கலாசாரத்தை வளப்படுத்தின.

**தேர்ச்சி - 9:** கிழக்கு ஆசியாவில் சீனா, பிலிப்பைன்ஸ் தீவுகள், யப்பான், இந்தியா, இலங்கை ஆகிய இடங்களில் முறையே இயேசுசபையினரும், ஸ்பானிய மறைபரப்பாளர்களும், புனித தோமா மற்றும் தூய சவேரியார் மறைசாட்சிகளும், பிரான்சிஸ்கன் மறைபரப்பாளர்களும் தம் வாழ்வாலும், பணியாலும் கிறிஸ்தவ கலாசார மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்புச் செய்துள்ளனர்.

**தேர்ச்சி - 10:** இரண்டாம் வத்திக்கான் சங்கம் 'இன்றைய உலகில் திருச்சபை' என்னும் கொள்கைத் திரட்டில் மனிதமாண்பு, குடும்பவாழ்வு, பண்பாடு பற்றிய அறிவுரைகளைத் தந்துள்ளது. ஆசிய ஆயர்களது பேரவை (FABC) சமூக நலன் பண்பாடுபற்றிய தகவல்களைத் தந்துள்ளது. கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அதற்கான வழிகாட்டலையும் தருகின்றது.

2017ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்ட இப்புதிய பாடத்திட்டம் தற்போது இலங்கையில் பல பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றது. கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் நாகரிகப் பாடமொன்றை தேர்வு செய்யும் போது அவர்களுக்கு எதிர்காலத்தில் பல்கலைக்கழக பாடத்தெரிவில் இப்பாடம் பெரும் பயனளிக்கும் என்பதை ஆசிரியர் மாணவர்கள் நன்கறிவார்கள். இந்து, பௌத்த, இஸ்லாம் நாகரிகங்களைப் போன்று கிறிஸ்தவ நாகரிகம் ஓர் பாடமாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனும் கோரிக்கையின் பிரகாரம் இப்பாடம் 2011ஆம் ஆண்டு கலைப்பிரிவு மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டு, தற்போது 2019ஆம் ஆண்டு பிரிவு மாணவர்கள் தொடக்கம் இப்புதிய பாடத்திட்டத்திற்கமைய வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடப்பரப்பு தொடர்பான நூல்கள் மிகக் குறைவாக உள்ளமையாலும், மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் அடிப்படையில் இப்பாடப்பரப்பை உள்வாங்க வேண்டிய தேவை உள்ளமையாலும் மாணவர்களுக்கு உதவ 'மன்னா' முன்வந்துள்ளது. இப்பாடம் தொடர்பான மேலதிக விளக்கங்களையும், மாதிரி வினாவிடைகளையும் மன்னா பத்திரிகையின் 'மாணவ மன்னா' பக்கத்தின் மூலமாக தொடர்ந்துவரும் காலங்களில் மாணவர்கள் பெற்றுப் பயன்பெறமுடியும்.●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!



# இளையோர் மன்னா



## இளையோரே, நீங்கள் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்கத் தயாரா?

'நம் மத்தியில் இருக்கும் இறைவனையும், சகோதரர், சகோதரிகளையும் அன்பு கூர அழைக்கும் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்குங்கள்' என்று இத்தாலிய இளையோரிடம் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

இத்தாலியின் பிரேஷா மறைமாவட்டத்தின் 'அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்தில்' ஏறத்தாழ மூவாயிரம் இளையோரை சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் வீட்டுப்பாடம் ஒன்றையும் இளையோருக்கு அளித்தார்.

ஜொவான்னி பத்திஸ்தா மொந்தினி என்ற இயற்பெயரைக் கொண்ட அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் பிறந்த பிரேஷா மறைமாவட்டத்தின் இளையோரிடம் அத்திருத்தந்தையின் இளமைக்கால வாழ்வு, மற்றும் அவரின் கனவுகள் பற்றிச் சிந்திக்கும் வீட்டுப்பாடத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அளித்தார். திருஅவை மாறுவதற்கு இளையோர் உதவ முடியும் என ஆயர்கள் உண்மையிலே நம்புகின்றனரா என ஓர் இளைஞன் கேள்வி எழுப்பினான். ஆயர்கள் இளையோருக்குச் செவிமடுத்து திருஅவையில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவர விருப்பமாய் இருந்தால் இளையோராகிய நீங்கள், இயேசுவுக்குச் செவிமடுத்து, உங்களை மாற்றுவதற்குத் தயாரா என்று இப்போது நான் கேட்கின்றேன் எனக் கூறினார் திருத்தந்தை.



இயேசுவை நம்புகின்றவர்களுக்கு வியத்தகு அனுபவங்களை அவர் கொடுக்கின்றார் எனவும், விவிலியத்தை வாசிக்கவும், திருப்பலியில் பங்கு பெறவும் இளையோருக்கு அழைப்புவிடுத்த திருத்தந்தை இளம் வயதில் ஏராளமான கனவுகளுடன் வாழ்ந்த புனித பிரான்சிஸ் அசிசி, புனித தமியான் போன்றவர்களுடைய வாழ்வுபற்றியும் எடுத்துரைத்தார்.

வருகின்ற ஒக்டோபர் மாதத்தில் இளையோர் தொடர்பாக நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றம் பற்றியும் கூறிய திருத்தந்தை, தனக்காகச் செபிக்க மறக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.●

## எங்கே செல்கின்றாய்?

– தே. சுரேக்கா, வேப்பங்குளம் –



இளைஞனே!
வாழ்வதும், வீழ்வதுமாய்
புதிரான கதையாய்
எங்கே சென்று கொண்டிருக்கிறாய்?

தொலைந்த மனிதம் தேடியா? - நீ
தொலைத்த ஆன்மீகம் தேடியா?
அழைப்பை உதறி
அன்பைத் தொலைத்து
அதிகார நாட்டில்
போதை தேடி நீயும்
புதைந்து போவதேனோ?



மலர்கள் கூட இங்கு மாலையாகி மடிகையிலே
மங்கிப் போய் நீயும்
மறைந்து போவதேனோ
உலகை மாற்றும் சக்திகளே!
உணர்வுகளை தொலையாதீர்
வானளவு உயர வேண்டும் நீங்கள்.●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

# இளையோர் வாழ்வில் கவனக்குறைவு, காரியச் சிதைவு

- வேதியர்: T.M. சந்தியாகு வேங்கிடகுளம் இந்தியா -

"மழைத் தண்ணீரை வெறும் வயிற்றில் குடிங்க, உங்க வயிற்றுக் கோளாறு வெகு விரைவில் சரியாய் விடும்" என்றார் டாக்டர். என்ன சோதனை! வைத்தியம் சற்று சிக்கலாயிருக்கும் என்று எதிர்பார்த்து குடும்ப மருத்துவரிடம் சென்ற பாத்திமாவிற்கு சற்று வியப்பாகவும், எளிதானதாகவும் மனதில் பட்டது. மருத்துவர் இந்த வைத்தியத்தைச் சொல்லி இன்றுடன் மூன்று மாதங்கள் முடிவடைகின்றன. இதுவரை ஒரு நாள் கூட மழை பெய்யவில்லை. அன்று நள்ளிரவு மணி இரண்டு. பத்தாம் வகுப்புப் படிக்கும் பதினாறு வயது பேத்தியுடன் உறங்கிக் கொண்டிருக்கிறாள் பாட்டி. திடீரென்று பெரும் மழை கொட்டத் தொடங்கியது. பக்கத்தில் படுத்திருந்த பேத்தி பிரியாவை எழுப்பினார் பாட்டி. உடனே எழுந்த பிரியா "என்னங்க பாட்டி" என்றாள். "பேத்தி பாரு நல்ல மழை பெய்யுது. இந்த குடத்தைக் கொண்டு போய் மழையில போட்டுட்டுவா. டாக்டர் சொன்னபடி நான் வெறும் வயிற்றில் அந்த மழைத் தண்ணீரைக் குடிக்கணும்" என்றார். பாட்டி சொன்ன வேலையை மின்னல் வேகத்தில் செய்து பாட்டியின் பாராட்டைப் பெற்று படுத்துக் கொண்டாள் பிரியா. காலை நேரம் மணி ஆறு ஆகிவிட்டது. பேத்தி ராத்திரி கொஞ்சநேரம் கண்விழிச்சதினால் அசந்து உறங்குறா. அவளுக்கு சிரமம் கொடுக்க வேண்டாம். நாமளே போய் அந்த குடத்து தண்ணீரை வெறும் வயிற்றில் குடிப்போம் என்று வேகமாய் போய் மழையில் போடப்பட்ட குடத்தை பார்த்ததும் அதிர்ந்து போனாள் பாட்டி. ஏனென்றால் குடம் கவிழ்த்துப் போடப்பட்டிருந்ததால் அதில் சொட்டுத் தண்ணீர் கூட நிரம்பவில்லை. இதைப் பற்றி பேத்தியிடம் கேட்க அவள் "பாட்டி நீங்க குடத்தை மழையில போடச் சொன்னீங்க. குடத்தை நிமித்திப் போடு, கவிழ்த்து போடு என்றீர்களா?" என்றாள். இந்நிகழ்வு வெளிப்படுத்தும் உண்மை என்ன.? பேத்தியின் கவனக்குறைவு – பாட்டியின் காரியச் சிதைவாக மாறிவிட்டது.

### காரியம் சிறக்க கவனம் அடிப்படை :

நாம் தொடங்கும் எந்தச் செயலும் வெற்றி பெற வேண்டும் என்பது நம் ஏக்கமும், நோக்கமுமாய் இருக்கவேண்டும். அது சிதற ஏராளமான காரணங்கள் உள்ளன. வெற்றி என்ற இலக்கைப் பல வேளைகளில் எட்டிப்பிடிக்க, குறுக்கு வழியில் பயணிக்க முனைகின்றோம். அப்போது கவனம் சிதறும் வாய்ப்பு அதிகரிக்கின்றது. சில வேளைகளில் உணர்வுக்கு முதலிடம் கொடுக்கும் போது உத்வேக அறிவு மழுங்கடிக்கப்படுகின்றது. அறிவும் உணர்வும் சம அளவில் செயற்பாட்டுவடிவம் பெறும்பொழுதுதான் எந்தச் செயலும் எதிர்பார்க்கும் வெற்றியைத் தரமுடியும் இதனைத்தான் ஆன்றோர் "பதறாத காரியம் சிதறாது" என்றனர். அது ஒரு தொடர்வண்டி நிலையம். பயணச்சீட்டு பெறுவதற்கு ஒரு நடுத்தர வயது மனிதர் விரைந்து வந்தார். தடுமாறிப்போகும் நிலையில், பத்தடி தூரத்தில் வந்த பெரியவரை ஒருவர் வேகமாக ஓடி வந்து காப்பாற்ற விழைகின்றார். அந்தோ பரிதாபம்! காப்பாற்ற வந்தவர் படிக்கட்டில் விழுந்து, அவரது மண்டை உடைந்து, இரத்த வெள்ளத்தில் மிதக்கின்றார். இந்நிகழ்வுக்குக் காரணம் என்ன? உணர்வின் உந்துதல்... படிக்கட்டை பார்க்கவில்லை.

கால் தடுக்கி விழுந்து விட்டார். ஆம். காரியத்தை செய்வது மட்டுமல்ல, அதை எப்படிச் செய்வது என்பதையும் பொறுத்து



வெற்றி அமைகின்றது. காரிய வெற்றிக்குக் கவனமே அடிப்படை என்பதை நாம் ஒருநாளும் மறக்கலாகாது.

### கவனம் சிதைந்திட காரணிகள்

செய்யும் செயலில் விருப்பமின்றி, பிறரின் வற்புறுத்தலிற்கும், கட்டுப்பாட்டுக் கடமைக்காகவும் செயலை மேற்கொள்ளுதல். சுய சிந்தனைக்கு இடம் கொடுக்காமல், பிறர் சொல்லச் சொல்லச் செய்து, வெற்றியோ, தோல்வியோ கட்டளை இட்டவருக்குச் சமர்ப்பித்தலாகும். ஒரு செயலைத் தொடங்கும் பொழுது இருக்கும் சிந்தனையை அச் செயல் தொடரும் பொழுது மாற்றிக் கொள்ளுதல். இதற்கு கவனச் சிதறல் என்று பெயர். மனம் அலைபாயும் பொழுது காரிய வெற்றி கேள்விக்குறியாகின்றது. கவனம் நிலைபெற தூண்டுதலாக சில உணர்வுகள் மேலெழுகின்றன. அவை 1. பொறுப்புணர்வு, 2. இரக்க உணர்வு, 3. மதிப்புணர்வு, 4. பய உணர்வு, 5. பகுத்துணர்வு இவை ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவாக எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கலாம்.

இளையோராகிய நீங்கள் எளிதில் புரிந்து கொள்வீர்கள் என நம்பலாம் அன்றோ? கவனத்தை திசை திருப்புவதில் அலட்சியம் அல்லது Indifference எனச் சொல்லும் மெத்தனப்போக்கு முதலிடம் பெறுகிறது. அது... பிறகு பார்த்துக் கொள்ளலாம்.. இப்ப என்ன அவசரம். இது இல்லாட்டி இன்னொன்று. எல்லாம் விதிப்படிதான் நடக்கும், போன்ற சிந்தனைகளைத் தோன்றச் செய்து கவனம் ஊன்றி நிற்பதிலிருந்து தடை செய்கின்றது. செய்வது சரியாகத்தான் இருக்கும் என்ற எண்ணக் கோர்வை ஏற்படுத்தும் பிழை. இதை "இடமாறு தோற்றப் பிழை" என்று தமிழ் இலக்கணம் கூறுகின்றது. இது பெரும்பாலும் எழுத்து வடிவம் பெற்ற ஒன்றை அல்லது எழுதும் பொழுது தவறாக புரிந்து கொள்வதில் வெளிப்படுகின்றது. எடுத்துக் காட்டாக அச்சுப்பிழை பார்க்கும் ஒருவர் பாப்பு ஆறாம் பவுல் என இருந்ததை கவனிக்காமல் விட்டு விட்டார்.

பாரூக்கு நூலில் " ஆலயத்திலிருந்து வெள்ளியை கொள்ளையடித்து சென்றனர். " என்று உள்ள வாக்கியத்தை ஆலயத்திலிருந்து வெள்ளியை வெள்ளையடித்துச் சென்றனர் என்று வாசிக்கப்பட்டது. 'ற' 'ர' 'ன' 'ண' 'ல' 'ழ' 'ள' போன்ற எழுத்து மாற்றம், கருத்து மற்றும் உச்சரிப்பு மாற்றம் ஏற்படுத்தும் என்பதை கவனிக்க விடாமல் "இடமாறு தோற்றப் பிழை" செய்து விடுகின்றது.

### ஏமாற்றும் கவனக்குறைவு

இது செயற்படுபவர் எவ்வளவு கவனமாயிருந்தாலும் ஏமாற்றி விடுகின்றது. ஆஸ்திரிய நாட்டு நகரம் ஒன்று "இன்ஸ்புர்க்". அங்கு கற்றறிந்த வெளிநாட்டு பயணிகள் இருவர் சுவிஸ்சர்லாந்து சூரிச் நகருக்கு டிக்கட் பெற்றிருந்தனர். அதில் பயண நேரம் பிற்பகல் 14.21 என்றிருந்தது. இவர்கள் 14.00 மணிக்கு ரயில் நிலையம் வந்து விட்டனர். இருவரும் 21 என்பதை 27 எனப்புரிந்து கொண்டு பயணிகள் அறையில் பேசிக்கொண்டிருந்தனர். ரயில் சரியாக 14.00 மணிக்கு வந்து ஓரிரு நிமிடங்களில் போய்விட்டது. ரயில் போனபின் தம் கவனக் குறைவை தவறைப்புரிந்து கொண்டு வருந்தினர். பின் அடுத்த ரயில் இரண்டரை மணிநேரம் கழித்து வந்தது. அதில் பயணம் செய்ய நேர்ந்தது. கவனத்தை சிதறடிப்பதில் பிறரின் குறுக்கீடு, மறதி, திட்டங்களை திடீரென மாற்றுதல், இயற்கை பேரிடர்கள், வன்முறைகள் பல சூழல்கள் காரணியாகின்றன.

### கவனக்குவிப்பிற்கு கை கொடுக்கும் வழிமுறைகள் :

1. *உள்ள ஒருங்கிணைப்பு :* திட்டம் நல்ல திட்டம். செயற்படுத்தும் வழிமுறை சிறப்பானது. அது வெற்றிக்கு இட்டுச்செல்ல தேவையானது. லூக் 2.19 சொல்வது நல்ல சிந்தனைதான்.

2. *இஸ்டப்பட்டு கஸ்டப்படுதல் :* தொட்டு விட்ட எந்த செயலும் அது உன் செயல்தான். தொடங்கு முன் கருத்து வேறுபாடு இருந்தாலும் செயலில் இறங்கியபின் மறு சிந்தனைக்கு இடமளிக்காது விருப்ப செயற்பாடாக மாற்றிக் கொள்ள வேண்டும்.


3. *அவசியத் தேவை என தெளிவு பெறுதல் :* must என்ற உந்துதல் தொடரத் தொடர செயல்கள் வெற்றி பெற உதவும். கவனம் சிதைய வாய்ப்பில்லை. 'அவசிய தேவையை அலட்சியம் செய்யலாகாது' என்பது ஆன்றோர் மொழி.

4. *கவனத்திற்கு கடிவாளம் நோக்கம் :* தூண்டில் வழியாக மீன் பிடிப்பவருக்கு மிதப்பின் மீதும், கயிற்றின் மீது நடப்பவருக்கு கயிற்றின் மீதும் கண்(பார்வை) பதிந்திருக்க வேண்டும். நோக்கம்தான் கவனத்தைச் சீராக ஒருங்கிணைக்கும்.

5. *வாசிப்பும், யோசிப்பும் யாசிப்பை தவிர்க்கின்றன :* கவனத்தை பெருக்கிக் கொள்ளும் விவிலியத்தை, அறநெறிநூல்களை அதிகம் வாசிப்பது நல்லது. இந்த இரண்டும் தொடருமானால் யாரிடமும் யாசிக்கும் தேவை குறைந்துவிடும்.

கற்பனைகளை சீராக்கி கவனத்தை வேராக்கு!

புதிய ஆண்டு புலர்ந்துள்ள நிலையில் ஒரு நல்ல தலைப்பை எடுத்து சிந்திக்க நமக்கு அழைப்பு தரப்பட்டுள்ளது. கவனத்தை குறைக்க பல அதீத கற்பனைகள் முளைக்கும். கற்பனைகள் தேவையில்லை என நான் தடை போடவில்லை. அது முடியாது-கூடாது. ஆனால் இளையோராகிய உங்கள் பயணம் இலக்கு நோக்கி, எழுச்சியுடன் தொடர கவனம் கை கொடுக்க வேண்டும். அதற்கு தேவையான கற்பனை வளத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும். எங்கு கற்பனைகள் சீராக்கப்படுகின்றனவோ அங்கு கவனம் வேர் ஊன்றும் என்பது எனது கனிவான அறிவுரை. கவனம்! கவனம்! உன் மீதும், உன் இல்லத்தின் மீதும், உற்றார் உறவினர் மீதும், ஆன்மீகப் பணியகத்தின் மீதும், புலம் பெயர்ந்து வாழும் நம் இனத்தின் மீதும் கவனம்.. கடவுளின் கவனம் உன் மீது இருப்பது போல் வாழ்ந்து காட்டு.●



# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக, அரசியல், ஆன்மீகம் சார்ந்த தொடர் 76

# ‘புலிக்கதை’ தொடரப்போகின்றது !

**76. ‘புலிக்கதை’ தொடரப்போகின்றது!**

***கழுதை அமைச்சர்!***

அரசனொருவன் வேட்டைக்குப் புறப்படவிருந்தான். தனது அமைச்சரை அழைத்து, ‘இன்று மழை வருமா?” எனக் கேட்கின்றான். ‘வராது’ என அமைச்சர் கூறிவிடுகின்றார். ஆனால், வழியிலே ஒரு கழுதை மேல் வந்து கொண்டிருந்த கிராமத்தவன் ஒருவன், ‘அரசே இந்நேரத்தில் எங்கு செல்கின்றீர்கள்? கொஞ்ச நேரத்தில் மழை அல்லவா பெய்யப்போகின்றது!’ என எச்சரிக்கின்றான். அதைப் பொருட்படுத்தாமல் சென்ற அரசன் வேட்டையாடிக் கொண்டிருந்தபோது கடும் மழை பெய்து, நன்றாக நனைந்து போனான். அதனால் உடனே அரண்மனை திரும்பவேண்டி ஏற்பட்டது.

திரும்பும் வழியில் மழைவருமென எச்சரித்த குடியானவனை சந்திக்கின்றான். ‘மழை வருமென்று உனக்கு எப்படித் தெரிந்திருந்தது?” எனக் கேட்கின்றான். கிராமத்தவனோ, “அரசே, அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும். மழை பெய்வதற்கு முன் அது தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும்” என்றான். உடனே அரசன், அவ்வமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அக்கழுதையை அமைச்சராக்கினான்!

இக்கதை அமெரிக்க முன்னாள் அரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கனால் சொல்லப்பட்டதாகும். இக்கதையை ஆபிரகாம் லிங்கன் கூறிவிட்டு, “கழுதையை அமைச்சராக்கியதில்தான் அரசன் ஒரு தவறு செய்துவிட்டார்! என்னவெனில், அது முதற்கொண்டு எல்லாக் கழுதைகளும் ஏதாவது பதவி வேண்டும் என அலைகின்றன!” என அக்கதையினைக் கூறிமுடித்தாராம்!

***பதவிதேடி அலையும் கழுதைகள்!***

அன்று ஆபிரகாம் லிங்கன் சொன்ன விடயம் இன்றைய அரசியல் சூழலுக்கு மட்டுமல்ல சமுதாய, சமய சூழமைவுகளுக்கும் நன்கு பொருத்தமுடையதாகவே தெரிகின்றது. பதவிமோகம் பிடித்து பல வடிவங்களில் திரிகின்றார்கள் இன்றைய மனிதர்கள். காலாகாலமாகப் பேசிவரும் மூவாசைகளான மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பவற்றைவிட நான்காவது ஆசையான பதவியாசையால் இன்றைய சமுதாயம் மிக மோசமாக நோய்வாய்ப் பட்டுப்போய்க் கிடக்கின்றது!

“மரணம் முற்றுப்புள்ளி அல்ல” என்ற கவிதை நூலில் ‘சிம்மாசன நோய்’ என்ற கவிதையில் எழுத்தாளர் அப்துல் ரகுமான் பின்வருமாறு உரைக்கின்றார்: “...மூவாசையைவிடப் பெரிய ஆசை/ சிம்மாசன ஆசை. அதனால்தான் மூன்றையும் கொடுத்தாவது/ அதைப்பெற முயல்கின்றான் மனிதன். அதிகாரம் விசித்திரமான சாராயம். அதைக்குடிக்கிறவன் தன்னை மறப்பதில்லை; பிறரை மறந்து விடுகின்றான்...” என்கின்றார்.

***படிப்புக்கு ஏற்ற பதவி?***


இக்கருத்துக்கு அணிசேர்ப்பதுபோல நண்பர் ஒருவர் இவ்வாண்டின் தொடக்கத்தில் மின்னூடகத்தில் பகிர்ந்துகொண்ட விடயம் ஒன்று அமைந்திருக்கின்றது. இவ்வாண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற இருந்த காலத்தில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாறைக்குப் பயணம் செய்திருக்கின்றார். அவரின் அருகில் இருந்த இருக்கையில் நடுத்தர வயதான ஒருவர் கூடவே பயணம் செய்திருக்கின்றார். நீண்ட பயணம் என்பதால் இருவரும் பல்வேறுபட்ட விடயங்களை உரையாடிக்கொண்டு சென்றிருக்கின்றார். இவர்களின் உரையாடலின் ஆரம்பத்தில் நடுத்தர வயதானவர் இளம் குடும்பஸ்தரின் குடும்பத்தைப் பற்றி வினவியிருக்கின்றார். அவரும் தனது வளர்ந்துவரும் சிறுவயது மூன்று குழந்தைகளைப் பற்றிக் கூறியிருக்கின்றார்.

பதிலுக்கு இளம் குடும்பஸ்தரும் மற்றையவரின் குடும்பத்தைப் பற்றி கேட்டிருக்கின்றார். அவர், “எனக்கு மூன்று பிள்ளைகள் தம்பி” எனத் தொடங்கியவர், “மூத்தவன் கல்விக்கல்லூரி முடிச்சுப்போட்டு ஆசிரியரா வேலபாக்கிறான். இரண்டாவது பல்கலைக்கழகத்தில படிச்சிப் பட்டம் பெற்றிற்று, வேலை தேடிக்கொண்டிருக்கின்றான். மூன்றாமவன் எட்டாம் ஆண்டோட படிப்பை நிறுத்திப்போட்டு வீட்டில இருந்தான்! இப்ப, இந்த வட்டாரத் தேர்தல்ல, அவன்ர படிப்புக்கு ஏற்றமாதிரி ஒரு வேட்பாளரா நிக்கிறான்!” என நிதானமாகச் சொல்லி முடித்தாராம்!

***‘சிம்மாசன நோய்’!***

‘சிம்மாசன நோய்’ இன்று பல தரத்தாரையும், திறத்தாரையும் பீடித்திருக்கின்றது என்பதை அனைத்து மட்டங்களிலும் அவதானிக்கலாம். அதனால்தான் இன்று கதிரைகளைத் தேடி அலைகின்றார்கள் ஒரு பெரும் கூட்டத்தினர். எங்கள் நிலை எந்தளவிற்கு தாழ்ந்துபோய்விட்டது என்பதற்கு மேற்சொன்ன அநுபவம் ஓர் உதாரணமே!

பணிகளைச் செய்து அதன் ‘பரிணாம வளர்ச்சியில்’ பதவிகளை அடைவதில் எவ்வித தவறும் இல்லை. அதனால் இன்னும் அதிகமான பணிகளைப் புரியலாம். ஆனால், இன்றைய சூழலில் எப்பாடுபட்டாவது, யார் காலைப் பிடித்தாவது பதவிகளை அடைவதையே - கதிரைகளைக் கைப்பற்றுவதையே குறியாகக் கொண்டு, திட்டம்போட்டுச் செயற்படுவதைக் காணமுடிகின்றது. நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர்




பல இடங்களில் நடந்த ‘சங்கீதக் கதிரைப்’ போட்டி இதற்கு ஓர் உதாரணமே! இதுபோல இன்னும் பல உதாரணங்களை ஏனைய சமூக தளங்களில் நின்று நோக்குகின்றபோது இந்நிலை நன்கு புரியும்.

அப் பதவிகளைக்கூட மக்களுக்காகத் தொண்டுகள் ஆற்றப் பயன்படுத்தினாலும் பரவாயில்லை! ஆனால் பதவிகளைப் பெற்று, எந்தளவிற்குத் தங்கள் படிகளை உயர்த்திக் கொள்ளலாம் என்பதில்தான் இவர்கள் கருத்தாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் பொதுவாகத் திறனற்றவர்களாக, பேராசை கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். இவர்களால் சமூகத்திற்கு என்ன நன்மை கிடைக்கப் போகின்றது?

***அபிவிருத்தி வேலைகளும் அரைகுறைதான்!***

மத்திய அரசின் அமைச்சுப் பதவிகளை ஏற்க முடியாத சூழலில் ‘தமிழ்த் தேசிய’ நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். சரி, அது போகட்டும். அடுத்து, மாகாணத்திற்காக ஒதுக்கப்படும் நிதி முழுமையாகச் செலவிடப்படுகின்றதா என்றால்; அதுவும் இல்லை! ‘வடக்கின் அபிவிருத்திக்கு நிதி போதாது’ எனக் கூச்சலிடுகின்றார்கள். ஆனால், ஒதுக்கப்படும் நிதியில் ஒரு பகுதி மீண்டும் திருப்பி அனுப்பப்படுகின்ற அவல நிலைதான் தொடர்ந்து நீடிக்கின்றது. அல்லது ஆண்டின் இறுதி மாதத்தில் பணம் திரும்பப்போகின்றதே என அவசரப்பட்டு, அவதிப்பட்டு செய்யப்படுகின்ற செயற்பாடுகளாகவே அவை அமைந்துவிடுகின்றன. 2017ஆம் ஆண்டில் மார்கழி மாதத்தின் கடைசி இரு கிழமைகளில் சில பிரதேச செயலகங்கள் நடத்திமுடித்த பண்பாட்டு விழாக்கள் இதற்கு ஒரு சான்றே! ஏன், இவ்விழாக்களை ஆண்டின் ஏனைய காலப்பகுதியில் அழகாகத் திட்டமிட்டு நடத்தினால் என்ன? ஏன் ஆண்டின் இறுதி நாட்களில் அவசரப்பட்டு நடத்தவேண்டும்?

மேலும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள், மாகாணசபை உறுப்பினர்கள் ஊடாக அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி எப்படிச் செலவிடப்படுகின்றது என்பது மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும்போதுதான் தமது பிரதிநிதிகளின் நிதி எப்படி பங்கிடப்படுகின்றது என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள். பொதுவாகப் பார்த்தால் நமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமைகளைப்பற்றி 21.07.2018அன்று வலம்புரி ஆசிரியர் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில்,“...தமக்கு வருகின்ற நிதி ஒதுக்கீட்டில் விளையாட்டுக் கழகங்களுக்கு நிதியுதவி; பாடசாலைகளுக்கு உபகரணக் கொள்வனவுக்கு நிதிப்பங்களிப்பு; சனசமூக நிலையங்களின் கட்டிடத் திருத்தத்துக்கு நிதி வழங்கல் என்பதோடு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை முடிந்து போகின்றது. இதையும் கடந்தால் பரிசளிப்பு விழாவில் பங்கேற்பு, பாராளுமன்ற உறுப்பினர் உரை என்பதோடு அவர்களின் பணி முடிந்து விடுவதாக அவர்களும் நினைக்கின்றார்கள். அதன்வழி மக்களும் நம்புகின்றார்கள்...” என்ற பார்வை நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவதானிப்புக்கும். மக்களின் கவனத்திற்கும் உரியது.

பொதுவாக மாகாணசபை உறுப்பினர்கள் ஆங்காங்கே ஐம்பது, அறுபது கதிரைகளை ஏதாவது ஒன்றியங்களுக்கோ அல்லது சங்கத்தினருக்கோ கொடுப்பதும், சில துவிச்சக்கரவண்டிகளை மாணவர்களுக்குக் கையளிப்பதும் அல்லது சில தளபாடங்களையோ அல்லது சில இசைக்கருவிகளையோ கொள்வனவு செய்ய நிதி ஒதுக்குவதும் என இவர்களுடைய அபிவிருத்திப் பணிகள் முடிந்துவிடுகின்றன. இதற்குமேல் அவர்களால் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு இருக்கின்றதோ என்பது இன்னொரு பக்கம்!

உள்ளூராட்சி சபைகளை எடுத்துக்கொண்டால் அவைகள் உள்ளூர் மட்டங்களில் செய்யவேண்டிய அபிவிருத்திப் பணிகளை விட்டுவிட்டு, உலகளாவிய அபிவிருத்திக்கு என்னசெய்யலாம் என்பதுபோல அவர்கள் தங்கள் தங்கள் சபைகளில் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறெனில், எவ்வாறு அபிவிருத்திப் பணிகள் இடம்பெறும்?

***முயல் பிடிக்கும் நாயை...!***

இப்படியே ஒன்றுமாறி ஒன்றைக் கதைத்துக் கதைத்து, பேசிப் பேசி காலங்களை ஓட்டிவிடுவார்கள் போலத்தான் தோன்றுகின்றது. முயல் பிடிக்கும் நாயை முஞ்சியில் பார்த்தால் தெரியும் என

என் பேரனார் கூறியதை சிறுவயதில் கேட்டிருக்கின்றேன். நமது தலைவர்களைப் பார்க்கும்போது என் பேரனார் கூறிய அம்முதுமொழியே என் நினைவுக்கு அடிக்கடி வருவது தவிர்க்க முடியாது போகின்றது! இனிவரும் காலங்களில் தமிழரின் பிரச்சினைகளைப்பற்றி தமிழ்த் தலைவர்கள் கூட அவ்வப்போது பேசுவார்கள், ஏதும் அசம்பாவிதங்கள் நடக்கின்றபோது அறிக்கை விடுவார்கள் அல்லது வெளிநாட்டு அதிதிகள் வருகின்றபோது ஏதாவது அரசியல் தீர்வு குறித்துப் பேசிவிட்டு தங்கள் வாழ்க்கையை நடத்துவார்கள் என்பதாகவே தெரிகின்றது.

ஆகக்குறைந்தது இக்காலகட்டத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள், பிரதிநிதிகளிடையே ஒன்றுபட்ட, ஒற்றுமைப்பட்ட நிலைமையாவது நிலவும் என நினைத்தால்; அதுவும் அந்தா இந்தாவென்று அறுந்துவிழும் நிலையில்தான் தொங்கிக்கொண்டிருக்கின்றது! இருக்கின்ற ஒற்றுமை (?), வரப்போகும் மாகாணசபைத் தேர்தலோடு முடிவுக்கு வந்துவிடுமோ என்ற ஆதங்கமே அதிகரித்திருக்கின்றது! இன்றைய எம் தலைவர்களின் இப் பரிதாப நிலையினை அவதானிக்கும் சாதாரண மக்கள் பிலாக் காயப் பாத்த பேயன்மாதிரி விழிபிதிங்கிப்போய் நிற்கின்றார்கள்!

***வேற்றுமைகளுக்கு விடைகொடுக்கவேண்டும்!***

‘நம்மிடையே இருக்கும் வேற்றுமைகளைக் களைந்தாலே அடக்கு முறைகளில் இருந்து நாம் மீளலாம்’ என உலகத் தமிழர் பேரவையின் தலைவரும் பேராசிரியருமான எஸ். ஜே. இம்மானுவல் அடிகளார் தந்தை செல்வாவின் நாற்பத்தொராவது ஆண்டு நினைவு நாளில் கலந்துகொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டிருக்கின்றார். அடிகளார் குறிப்பிட்டது போல தங்களுக்கிடையே நிலவும் வேற்றுமைகளுக்கு இவர்கள் விடை கொடுக்காதவரை விடிவு கிடையாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

“எங்கள் அரசியல்வாதிகள், தலைவர்களுக்கு சிறப்புப் பொறுப்பும் கடமையும் உண்டு. ஒருவரை ஒருவர் தட்டி வீழ்த்துபவர்களாக இருக்காது ஒரே இலட்சியத்துடன், ஒரே நோக்கத்துடன் விளையாடும் கால்பந்தாட்ட வீரர்கள் போன்று ஒரே இலட்சியத்துக்காக ஒத்துழைக்க வேண்டும்” என மேலும் அழைப்பு விடுத்திருக்கின்றார். “நாங்கள் எமது சகல திறமைகளையும் உபயோகித்து எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினால் போதாது. எமது சமூகத்துக்குள்ளே எமக்குள்ளே ஆழமாக வேரூன்றியிருக்கும் வேற்றுமைகள் அடக்கு முறைகளில் இருந்து விடுதலைபெற வேண்டும்” எனவும் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

***இலட்சியத்தோடு இருக்கின்றார்களா?***

மேலும், “இலட்சியத்திற்காக ஒத்துழையுங்கள் என்பதே என் பணிவான வேண்டுகோள்” என்றும், “எம் மத்தியில் இருக்கும் சமூகத்தலைவர்களும், புத்திஜீவிகளும், உத்தியோகத்தர்களும், மதத்தலைவர்களும் பார்வையாளராகவோ மௌனமாகவோ இருப்பது தவறானது.

எம் இனத்துக்குத் துரோகம் இழைப்பதாகும். நாங்கள் மௌனமாக இருந்தால் சில அரசியல்வாதிகள் மக்கள் நலனைக் கைவிட்டு சுயநலத்துடன் நடக்கின்றனர்” எனவும் மேற்சொன்ன நிகழ்வில் சமூகப் பொறுப்பிலுள்ள அத்தனை பேருக்கும் அழைப்புவிடுத்து அறிவுரை கூறியிருக்கின்றார். புத்திஜீவிகளும், சமய – சமூகத் தலைவர்களும் சமூக வாழ்விலிருந்து தள்ளியிருக்கும் வரை அரசியல்வாதிகளின் ஆட்டம் அதிகமாகவே இருக்கும் என்பதைக் குறிப்பாக சமய – சமூகத் தலைவர்கள் மனம்கொண்டு உழைக்க முன்வருவார்களா?

***‘பிரிவோமாக இருந்தால் அழித்துவிடுவோம்!’***

“நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையாக செயற்படவேண்டும். இதனை விடுத்து பிரிந்து செயற்படுவோமாக இருந்தால் எமது மக்களை நாமே அழிப்பதாக அமையும்!” என எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் அவர்கள் 24.06.2018அன்று வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் ‘நீதியரசர் பேசுகிறார்’ என்ற நூல்வெளியீட்டு நிகழ்ச்சியில் தெரிவித்திருக்கின்றார்.

பிரிந்தால் பெரும் ஆபத்து விளையும் எனத் தெரிகின்றது. பின் ஏன் பிரிந்துபோவதற்கே பெரும் எடுப்பிலான ஆயத்தங்களைச் செய்கின்றீர்கள்? என இவர்களிடம் கேட்கவேண்டும்போல் இருக்கின்றது! காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளுள் தமிழரசுக் கட்சியின் அரசியல் தலைவர்கள் ஏனைய கட்சித் தலைவர்களை மாற்றான்தாய் மனநிலையோடு பார்ப்பது தமிழ் தேசிய நீண்ட நெடிய அரசியல் பயணத்திற்கு எவ்வகையிலும் உகந்ததல்ல, ஆரோக்கியமானதல்ல என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும்! அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளான ‘ரெலோ’, ‘ஈபிஆர்எல்எப்’, ‘புளொட்’ ஆகியவை ஒத்திசைந்து ஓரணியில் நின்று செயற்படும் மனநிலையையும் உருவாக்கிக்கொள்ள முன்வரவேண்டும்.

***‘புலிக்கதை’ தொடரத்தான்போகின்றது!***

எது எப்படியிருந்தாலும், இவ்வாண்டு ஐப்பசித்திங்கள் மாகாணசபை கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்பட்டால் மீண்டும் ‘புலிக்கதை’ தொடங்கிவிடும் என உறுதிபடக் கூறலாம். ஏனென்றால் கடந்த காலங்களில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்கள், ஏன், அரச தலைவருக்கான தேர்தலென் என எதனை எடுத்துக்கொண்டாலும் நாட்டின் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகளை நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ தொடர்புபடுத்தியே அவை வெற்றி கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் அரசியல் பிரமுகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை முன்னிறுத்தியோ அல்லது அவர்களின் இலட்சிய தடங்களில் பயணிப்பதாகக் கூறிக்கொண்டோ தமது சிம்மாசனங்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

➡ 15

# ஓய்வைவிட பிறர் மீது கொள்ளும் அக்கறை முதலிடம் பெறட்டும்

நமது தேவைகளா? பிறரின் தேவைகளா? என்ற கேள்வி எழும்போது பிறருக்கே முதலிடம் கொடுப்போம். திருத்தந்தை கிறிஸ்டோபர் பிரான்சிஸ் வத்திக்கான் செய்திகளில் திருப்பலி வாசகம் குறித்து நண்பகல் மூவேளை செப உரையில் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட போது மற்றவர்களின் தேவை நிறைவு செய்யப்பட நம்மிடமிருந்து பல தியாகங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று கூறினார்.

பணி முடிந்து திரும்பிய சீடர்களுக்கு ஓய்வளிக்க விரும்பிய இயேசு, அதை நிறைவேற்ற முடியாமல், மக்கள் கூட்டத்திற்குப் போதிக்க வேண்டிய கட்டாயத்தை எதிர்நோக்கியதை சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய நிகழ்வுகள் நம் வாழ்விலும் இடம்பெறுகின்றன. ஏனெனில் நம் திட்டங்களைவிட, மற்றவர்களுக்கு நாம் உதவ வேண்டியது அவசரமானதும், அவசியமானதும் என்றார்.

நற்செய்தி அறிவித்தலில் மூன்று வினைச் சொற்கள் முக்கியத்துவம் நிறைந்தவை என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, ஒரு மேய்ப்பரைப்போல் பார்ப்பது, இரக்கத்துடன் செயற்படுவது, கற்பிப்பது என்பனவற்றை எடுத்துரைத்தார். தன் சீடர்கள் ஓய்வெடுக்கச் செல்லும் நேரத்தில் தன்னைத் தேடிவந்த மக்கள் கூட்டத்தின் தேவைகளை அறிந்து அவர்களை



இரக்கத்தின் கண்கள் கொண்டு நோக்கிய இயேசு, அந்த மக்களுக்கு தான் வழங்கும் கொடையாக, வார்த்தை எனும் அப்பத்தைத் தந்தார் என மேலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.●

# “தியாக்கோன்கள் பிறரன்பின் ஊழியர்கள்”

## – திருத்தந்தை பிரான்சிஸ் –

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ‘தியாக்கோன்கள்: பிறரன்பின் ஊழியர்கள்’ எனும் புதிய நூல் வெளியீடு.

*யூலை 25, 2018: ஜெரோம் லூயிஸ் வத்திக்கான் செய்திகளில்* அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர்பேரவை, ‘தியாக்கோன்கள்: பிறரன்பின் ஊழியர்கள’ என்ற தலைப்பில், “திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் புதிய நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. நிரந்தர தியாக்கோன் என்ற நிலையில் இருப்போருக்கும், திரு அவைக்கும் உள்ள உறவைக் குறித்து ஒரு தியாக்கோனின் கண்ணோட்டத்திலிருந்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஆயர் பேரவை அறிவித்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புவனஸ் அயஸ் பேராயராகப் பணியாற்றிய வேளையில் வெளியிட்ட கருத்துக்களையும், அவர் திருத்தந்தையான பின்னர் எழுதிய ‘நற்செய்தியின் மகிழ்வு’ என்ற திருத்தூது அறிவுரை மடலில் கூறியுள்ள கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு, நிரந்தர தியாக்கோன் என்ற நிலையை விபரிக்கும் கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

கிறிஸ்துவுக்கும், மறைமாவட்ட ஆயருக்கும், தங்கள் பகுதியில் வாழும் வறியோருக்கும் உதவிகள் செய்வதன் வழியே கிறிஸ்துவின் மறையுடலுக்கு நிரந்தர தியாக்கோன்கள் ஆற்றிவரும் பணிகள் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொண்டிருக்கும் உயர்ந்த கண்ணோட்டத்தை இந்நூல் வெளிக்கொணர்கின்றது. இல்லங்களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்லும் பணியாளர்களாக, கிறிஸ்தவப்பிறரன்புக்கு எடுத்துக்காட்டுகளாக வாழும் நிரந்தர தியாக்கோன்கள் குறித்த ஓர் அழகிய நூல் இது என்று அமெரிக்க ஆயர் பேரவை கூறியுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாட்டு தலத்திரு அவையில் ஏறத்தாழ 16,000 இற்கும் அதிகமான நிரந்தர தியாக்கோன்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ●

# நமதன்னையின் அணிகள் கூட்டத்திற்கு திருத்தந்தை செய்தி

பாத்திமாவில், கிறிஸ்தவத் தம்பதியர்க்கென நடாத்தப்பட்ட பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு திருத்தந்தை செய்தி அனுப்பியுள்ளார். திருஅவை உண்மையைக் கூறவேண்டியிருப்பதால் பாவத்தைக் கண்டிக்கின்றது. அதே நேரம், பாவி என தன்னை ஏற்பவரை அரவணைத்துக்கொள்கின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருமணமான கிறிஸ்தவத் தம்பதியர் பங்குபெறும் ஒரு பன்னாட்டு கருத்தரங்கிற்குச் செய்தி அனுப்பினார். போர்த்துக்கல் நாட்டின் பாத்திமாவில் “நமதன்னையின் அணிகள்” எனப்படும் ஒரு பொதுநிலை இயக்கத்தினர் நடாத்திய கருத்தரங்கிற்குச் செய்தி அனுப்பிய திருத்தந்தை, தந்தையிடம் திரும்பி வந்த காணாமற்போன மகனின் செயலை மையப்படுத்தி இக் கருத்தரங்கு நடைபெற்றதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமற்போய், பின்னர் திரும்பி வந்த மகனை அணைப்பதில் ஒரு போதும் தளராமல் இருந்த, மற்றும் தன் அன்பை மீண்டும் உறுதி செய்த தந்தை போன்று திரு அவை பாவிகளிடம் நடந்து கொண்டு இறைவனின் இரக்கத்தை வழங்குகின்றது என்று தன் செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

யூலை 16 தொடங்கிய “நமதன்னையின் அணிகளின்” 12வது பன்னாட்டு கருத்தரங்கு, யூலை 21இல் நிறைவடைந்தது. “நமதன்னையின் அணிகள்” இயக்கம், திருமணமான



தம்பதியரின் ஆன்மீகத்தை மையப்படுத்தி, 1938ஆம் ஆண்டில் சில தம்பதியர் மற்றும் அருட்பணி Henry Caffarel அவர்களால் பிரான்ஸ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டு டிசம்பரில் புத்துயிர் பெற்ற இந்த இயக்கத்தில், தற்போது ஐந்து கண்டங்களில் 95 நாடுகளைச் சேர்ந்த 13,500 இற்கும் மேற்பட்ட அணிகள் உள்ளன. திருமணம் எனும் அருளடையாளத்தை ஆழமாகப் புரிந்துகொள்ளவும், இன்றைய சமுதாயத்தில் தம்பதியரையும், குடும்பங்களையும் ஒன்றிணைக்கவுமென அந்த அணிகள் ஒவ்வொரு மாதமும் கூடுகின்றன.●

# வத்திக்கான் காணொளிக்கு ‘பன்னாட்டு விருது’

புலம்பெயர்ந்தவர், மற்றும் குடிபெயர்ந்தவர் எதிர் கொள்ளும் நெருக்கடிகளை உலக சமுதாயத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தில் ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீடஅவை தயாரித்த காணொளி ஒன்றிற்கு பன்னாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. ‘பன்னாட்டு சமூக விளம்பர விழா’ எனப்படும் உலகளாவிய அமைப்பு ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் புலம்பெயர்ந்தவர், மற்றும் குடிபெயர்ந்தவர் துறை தயாரித்த காணொளிக்கு இந்த விருதை வழங்கியுள்ளது. இந்த காணொளித் தயாரிப்பிற்கு சமூகத் தொடர்பு நிறுவனம் உதவியுள்ளது.

ஸ்பெயின் நாட்டு தலைநகர் மட்ரித்தில், நடைபெற்ற 12வது விளம்பர விழா நிகழ்வில், உலகெங்கிலுமிருந்து நிறுவனங்களும், விளம்பர தாரர்களும் கலந்து கொண்டனர்.

வத்திக்கான் தயாரித்துள்ள இந்த காணொளி மூன்றரை நிமிடம் கொண்டது. புலம்பெயர்ந்தவர், மற்றும் குடிபெயர்ந்தவர்களை வரவேற்று, பாதுகாத்து, ஊக்குவித்து, ஒருங்கிணைப்பதற்கு அரசுகளும், நிறுவனங்களும், பொதுமக்களும் ஆற்றவேண்டிய செயல்கள் பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தக்காணொளியில் பேசியுள்ளார்.●

# அருட்பணி அருப்பே அவர்களை அருளாளராக உயர்த்தும் பணிகள் ஆரம்பம்

இயேசு சபையின் உலகத்தலைவரும், இறைவனின் ஊழியருமான ‘அருட்பணி பேத்ரோ அருப்பே’ அவர்களை அருளாளராக உயர்த்தும் பணிகள் ஆரம்பம். யூலை 25, 2018 இயேசு சபையின் 28வது உலகத்தலைவராகப் பணியாற்றிய இறைவனின் ஊழியர் அருட்பணி பேத்ரோ அருப்பே அவர்களை அருளாளராக உயர்த்தும் பணிகளைத் தொடங்குவதற்கு உரோம் மறைமாவட்டம் அனுமதி வழங்கியுள்ளது என்று இயேசு சபையின் தற்போதைய உலகத்தலைவர் அருட்பணி அர்த்தூரோ சோசா அவர்கள் கூறியுள்ளார். இயேசு சபையின் பல்கலைக்கழகங்களில் பணிபுரிவோரின் உலக மாநாடு அண்மையில் ஸ்பெயின் நாட்டின் பில்பாவோ நகரில் நடைபெற்ற வேளையில் அருள்பணி அர்த்தூரோ சோசா அவர்கள் இதனை அறிவித்தார்.

➔ 15



### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

# புனிதர்களின் பாதையில்

## புனித லோரன்ஸ்




மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

புனித லோரன்ஸ் திருத்தந்தை புனித 2ஆம் சிக்ஸ்டசின் திருத்தொண்டராகப் பணிபுரிந்தார். புனித பேதுரு புனித பவுலுக்கு அடுத்த மிகப் புகழ் வாய்ந்த மறைசாட்சி இவரேயன்றி வேறுயாருமிலர். கி.பி. 400 ஆவது ஆண்டில் ‘புருடென்சியஸ்’ என்ற வரலாற்று ஆசிரியர், லோரன்சின் மன்றாட்டினால்தான் உரோமை நகரம் கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றது என்று குறிப்பிடுகிறார். இவர் பெயரால் எழுப்பப்பட்ட ஆலயத்திற்கு வரும் அடியவர்களின் பெருங்கூட்டத்தையும், அவர்களின் பலதரப்பட்ட வேண்டுதல்கள் புதுமையாகக் கேட்கப்பட்டதையும் அவர் விவரிக்கின்றார். இந்த மறைசாட்சியின் திருநாளுக்கு முன் 4ஆம் நூற்றாண்டில் திருவிழிப்பு இருந்ததும் குறிப்பிடத்தக்கது. திருத்தந்தை 2ஆம் சிக்ஸ்டஸ் மறைசாட்சியின் சாவினை அடைந்தார். நான்கே நாட்களுக்குப்பின் லாரன்சும் இவருடன் 4 பேரும் மறைசாட்சிகளாக வலேரியன் கொடுங்கோல் மன்னன் காலத்தில் கி.பி 258இல் மாண்டனர்.

தாம் மிகவும் மதித்து வந்த சிக்ஸ்டஸ் என்ற பாப்பரசரைக் காவலர்கள் பிடித்துக்கொண்டு போவதைப் பார்த்த இவர் அவரைப் பார்த்து “அன்புத் தந்தாய்! என்னைவிட்டு விட்டு நீர் மட்டும் போவது முறையோ? நான் செய்த தவறு என்ன?” என்று கேட்டுப் பெருமூச்சுவிட்டு அழுதார். பாப்பரசர் மறுமொழியாக “மகனே, துணிவுடன் இரு. மூன்றே நாட்களுக்குப்பின் என்னைப் பின் தொடர்வாய்” என்றார்.

பிறகு நீதிபதி இவரை வரவழைத்து இவரிடம் இருந்த கோவில் உடைமைகளை மூன்று நாட்களுக்குள் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கட்டளையிட்டான்.

இவரோ, குருடர், செவிடர், சப்பாணி முதலிய ஏழைகளுக்குக் கோவில் உடைமைகளைப் பகிர்ந்து அளித்துவிட்டு, அவர்களையே கூட்டமாகச் சேர்த்துக் கொண்டு நீதிபதியை அணுகி, “இதோ! இவர்கள்தான் விலையுயர்ந்த கோவில் உடைமைகள்” என்றார். மன்னன் சினங்கொண்டான். புனிதரைப் பிடித்து இரும்புக் கட்டிலில் கிடத்தி அதனடியில் நெருப்பு மூட்டும்படி கட்டளையிட்டான்.

இவரோ சுடர்விட்டு எழுந்த நெருப்பின் கொடுமையைப் பொறுத்துக்கொண்டே மகிழ்வாய் இறைவனைப் புகழ்ந்தார். அப்போது இவரது தலையின்மேல் ஒளிக் கதிர் தோன்ற, அங்கு நின்றோர் அதைக் கண்டு மகிழ்ந்தனர். பின்னர் இவர் நீதிபதியை நோக்கி “எனது உடல் நன்றாய் வெந்திருக்கிறது. இப்போது நீர் இதை எடுத்து உண்ணலாம்” என்று கூறி உயிர் துறந்து மறைசாட்சி முடி பெற்றார்.

உரோமையில் உள்ள மிகச் சிறந்த ஆலயங்களில் இப் புனிதர் பெயரால் எழுப்பப்பட்ட ஆலயமும் அடங்கும். தொடக்கத்தில் மன்னன் கொன்ஸ்டான்டைன் எழுப்பிய சிற்றாலயம் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் பேராலயமாகக் கட்டப்பட்டு இன்றும் எழிலுடன் காட்சியளிக்கின்றது.●

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## புது மனித ஜனனம்

மனிதா! மயானங்கள் இனி இங்கில்லை.
மனிதப் பிணங்கள் அதிகரித்ததால் .....!
கொலைவெறி கொண்டதால்......!
நீ என்ன பயன் கண்டாய் .......?
நீயும் மனிதன், நானும் மனிதன் - ஆனாலும்
விதம் விதமான ஆயுதங்கள் அல்லவா
நம் உயிர்களைக் குடிக்கின்றன?

அன்று மூண்ட இனவாதத் தீயை
இன்றுவரை எதற்காக
எண்ணெய் ஊற்றி வளர்க்கின்றாய்?
இதில் பொசுங்குவது நம் சந்ததிகள்தானே?
நாம் இந்த மண்ணில்தானே
பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்கின்றோம்?
பின் எதற்காக இந்த இனவாதக் கூறுகள்?
துப்பாக்கி வேட்டுகள் ஏன்?
அழகான இத்தீவினிலே
அன்போடு வாழ்வதை விட்டு
ஏன் அநியாயச் சாவுகள்?
எத்தனை விதவைகள் ......!
எத்தனை குழந்தைகள்.......!
எத்தனை தொலைந்த உறவுகள் .........!
முற்றிய போர் தந்த பரிசுகள் இவைதானே!

முத்துக் குளிக்கும் கடலில் சேருதாம்
நித்தம் பெருகும் இலங்கையரின் இரத்தம்!
இப்போதுகூட நாம் ஒன்றாய்கரம் கோர்க்கலாம்
நம் நாடு முழுவதும்
வெள்ளைப் புறாக்களை பறக்கவிடலாம்.
ஒவ்வொரு வருடமும் பிறக்கப் பிறக்க
யுத்தச் சாவுகளே அதிகம்.
யுத்தம் இறந்து அன்பு முத்தம் பொழியட்டும்
நல்ல வாழ்வு மலரட்டும்.●

## அமைதி

ஓ! அமைதியே உன்னைத்தேடி
நான் அலைந்தேன்!
காற்றினில் இருக்கின்றாயா?
கடலினில் இருக்கின்றாயா?
வானில் இருக்கின்றாயா?
பூமியில் இருக்கின்றாயா?
எங்கே கிடைக்கும் அமைதியென்று
எண்ணற்ற மனிதர் கூட்டம்
ஏங்கித் தவிப்பது உனக்குப் புரிகின்றதா?

ஓடி ஓடி உழைத்தும் அமைதி இல்லை.
கோடி கோடியாய்க் குவித்தும்
அமைதி இல்லை!
உறவுக் கூட்டமிருந்தும் நீ இல்லை.
உண்ணா விரதம் இருந்தும் நீ இல்லை.
உல்லாச வாழ்விருந்தும் நீ இல்லை.
ஓ! அமைதியே நீ எங்கிருக்கிறாய் சொல்?
வானத்தை வில்லாய் வளைத்தால்
வருவாயா?
கடல் நீர் முழுவதும்
கையில் அள்ளுவேன் வருவாயா?
எங்கெங்கோ தேடினேன் எங்கேயும் இல்லை.
நின்றேன் .... நிதானித்தேன்....
சிந்தித்தேன்.......!
நீ எங்கேயும் இல்லை!
என் மனதில்தான் நீ இருக்கின்றாய்
கையில் இருந்த உன்னைத்
தொலைத்துவிட்டு
வீணாக அலைந்தேன் நான் ...........!●

## பூவே புயலாகு...!

பெண்ணே நீ
பாரதியின் புதுமைப் பெண்!
நாளாந்த நடப்புக்குள்
நலிந்து கிடக்க
உனக்கு இன்னும் ஆசையா?

சீதன வெறியர்களின்
சீதனக் கொடுமைக்குள்
சிக்கித் தவிக்க
உனக்கு இன்னும் வேட்கையா?


நீ படிப்பதும் பக்குவப்படுவதும்
இறைவழிபாட்டிற்கு சமம்
என்றார் நேரு.
உனக்கு சமத்துவம் வழங்குவதே
மானிடத்தின் சுயமரியாதைக்கான
சரித்திரம் என்றார் பெரியார்.

உனக்காக பேசிய
பெண்ணினவாதிகளின் வார்த்தைகள்
வெற்றுக் காகிதமாகலாமா?
நீ புத்துலகு படைக்கும்
வித்து என்பதை விளங்க
வைத்துவிடு.

பெண்ணே! நீ
பூவாக இருப்பதை முதலில் நிறுத்து.
புயலாக புதுப்பாதையில் புறப்படு.
நீ புயலான பூ
என்பதை இப்பூமி
புரிந்துகொள்ளட்டும்! ●



# கொஞ்சம் சிரிங்க



**விமல்:** கண்ணு என்னோட ஞாபகம் வந்தா நீ என்ன செய்வே?
**றோஜா:** நீங்க எப்பவும் வாங்கி தருவீங்களே அந்த ஐஸ்கிரீமை வாங்கி சாப்பிடுவேன்!!
**விமல்:** ???
**றோஜா:** சரி என்னோட ஞாபகம் வந்தா நீ என்ன செய்வே?
**விமல்:** அந்த வயித்தெரிச்சலுக்கு ஒரு பீடியை பத்தவச்சு நல்லா இழுத்து புகை விடுவேன்.
**றோஜா:** ???

..................................

**வடிவேலு:** டேய் நன்னாரிப் பயலுகளா! என்னடா இது வீடு பூரா ஒரே பழத்தோலா கிடக்கு??
**வ.பிரண்ட்ஸ்:** அண்ணே! அண்ணே!
**வடிவேலு:** என்ன நொண்ணே??
**வ.பிரண்ட்ஸ்:** அதான்னே தோல் கொடுப்பான் தோழன்னே!
**வடிவேலு:** தோலுக்கும் தோளுக்கும் வித்தியாசம் தெரியாத வெண்ணைங்களா!!

..................................

**ராமு:** மனைவியை அடக்கி ஆள்வது எப்படின்னு ஒரு புக் எழுத வேண்டும் என்று இருந்தேன்....!
**சோமு:** அப்புறம் என்னாச்சு...?
**ராமு:** அவா அடிச்ச அடியில மனைவியிடம் அடங்கிப் போவது எப்படி என்று எழுதிவிட்டேன்.

**மனைவி:** என்னங்க சொர்க்கத்தில் கணவனும், மனைவியும் சேர்ந்து வாழ முடியாதாமே?
**கணவன்:** அதனாலதாண்டி அது சொர்க்கம்.

..................................

**பெண்:** ஹலோ இது கஸ்டமர் கேர் தானே?
**கஸ்டமர் கேர்:** ஆமாம் சொல்லுங்க மேடம்
**பெண்:** என் அஞ்சு வயசு பையன் சிம்கார்ட்டை விழுங்கிட்டான்.
**கஸ்டமர் கேர்:** அப்படினா டாக்டர் கிட்ட கூட்டி கிட்டு போங்க மேடம்.
**பெண்:** இல்லை அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சி அவன் பேசும் போது காசு போகுமா சார்?
**கஸ்டமர் கேர்:** ???

..................................

**கணவன்:** நேத்து ராத்திரி நான் குடிச்சிட்டு வந்தப்போ நீ பேசிய வார்த்தை ஒவ்வொன்றும் என்னை செருப்பால அடிச்சது போல இருந்துச்சு...!!
**மனைவி:** அடப்போங்க... குடிச்சிருந்ததால உங்களுக்கு தெரியல.... நெசமாவே நான் செருப்பாலதான் அடிச்சேன்.

# மன்னா விளம்பரப் பலகை

"உலகப் பொருட்கள் எதன்மீதும் ஆசை வைக்காதே, துயரங்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான் என்பதை மறந்துவிடாதே"

"ஒருவர் உனக்கு எத்தீங்கும் செய்யாதிருக்கும்போது அவரை வீண் வாதத்திற்கு இழுக்காதே"

................................

"கடவுளின் விரல் எழுதிய சிறுகதைதான் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும்"

................................

"மனிதா! தண்ணீராய் நீ இருந்தால் தவளைதான் உன்னைச் சுற்றி வரும். ஆனால் சூரியனாய் நீ இருப்பாயானால் பூமியே உன்னைச் சுற்றிவரும்."

"உடலுக்கு உயிர் எவ்வளவு அவசியமோ அதுபோல ஆத்மாவுக்கு பிரார்த்தனை அவசியம்".
"எத்தொழிலும் செய்வது இழிவல்ல, சோம்பலே இழிவானது"

"திரும்பப்பெற முடியாத விடயங்கள் உச்சரிக்கப்பட்ட சொல், தவறிவிட்ட வாய்ப்பு, கடந்துபோன நிமிடம்."

................

நல்லவராய் இருப்பது நல்லதுதான்! ஆனால் நல்லது கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது!

.........................

"நாம் தேடியது கிடைக்காவிட்டால் நம்மைத் தேடிவருவதை சந்தோசமாக ஏற்றுக்கொள்வோம்."

.........................

"உன் பையை பணத்தால் நிரப்புவதைவிட்டு உன் மனதை நேர்மையால் நிரப்பு"

எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்

# மருத்துவக் குணங்கள்



### வயிற்றில் இரைச்சலா?

சிலருக்கு வயிற்றில் இரைச்சல் இருந்துகொண்டே இருக்கும். அவர்களை எந்த வேலையிலும் ஈடுபட விடாது. இந்தத் தொல்லையைத் தவிர்க்க, ஒரு டம்ளர் வெந்நீரில், ஒரு ஸ்பூன் சம்ஜா விதைகளை (துளசியின் விதை) ஊற வைத்துக் குடித்தால் வயிற்றில் இரைச்சல் நிச்சயம் நின்றுவிடும்.

### இரத்தக் கொதிப்பா?

உங்களுக்கு இரத்தக் கொதிப்பு இருக்கின்றதா? கவலை வேண்டாம்! வெள்ளரிப் பிஞ்சை பச்சையாகவோ அல்லது பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டு வாருங்கள். வெள்ளரிப் பிஞ்சு கிடைக்காத காலமாயிருந்தால் வெந்தயக் கீரையை சமைத்துச் சாப்பிடுங்கள். சாம்பார் கூட்டு செய்து சாப்பிட்டு வாருங்கள். இரத்தக் கொதிப்பு நோய் மட்டுப்படும்.

### பசி இல்லையா?

வயிற்றுக்குச் சாப்பிட ஒன்றும் இல்லையே என்று வருத்தப்படும் இவ்வுலகில், பசி இல்லையே என்று துன்பப்படுவோரும் உண்டு. இது ஒரு பிணி. இதைப் போக்க மிளகு கசாயம் சாப்பிடவேண்டும். ஒரு ஸ்பூன் மிளகை எடுத்து இலேசாக வறுத்து அதை அப்படியே தட்டிப் போட்டு கசாயம் செய்து வடிகட்டி, அதில் சிறிது தேனையும் சேர்த்துச் சாப்பிட்டால் பசியின்மை போகும். நன்றாகப் பசி எடுக்கும்.

### பற்களில் தொல்லையா?

பப்பாளிப் பழத்தில் நல்ல மருத்துவக் குணம் இருக்கின்றது. பல் சம்பந்தமான எந்த நோய் ஏற்பட்டாலும் சில பப்பாளிப் பழத்துண்டுகளை வாயில் போட்டு மெல்லுங்கள். அந்தப் பழச்சாறு பல் இடுக்கில் புகுந்து நல்ல வேலை செய்கின்றது. உடனே தொல்லை தீருகிறது.

### சீத பேதியா?

சீதபேதி ஏற்பட்டு துன்பமாய் இருக்கின்றதா? உடனே காரம் சாப்பிடுவதை நிறுத்துங்கள். கருவேப்பிலையை அரைத்துத் தயிரில் கரைத்து சாப்பிடுங்கள். காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது மிகவும் நல்லது. இரண்டொரு நாட்களில் சீதபேதி சரியாகிவிடும்.

### காது வலியா?

காதுவலி ஏற்பட்டு துன்பம் உண்டானால், உடனே ஐந்து வெள்ளைப் பூண்டுகளை நசுக்கி, சாறு எடுத்து இரண்டு சொட்டு வலிக்கும் காதில் விடுங்கள் உடனே வலி நீங்கி விடும்.

### ஒற்றை தலைவலி?

இன்றைக்கும் பெரும்பாலானோருக்கு இருக்கும் ஒற்றை தலைவிக்கு அன்னாசிப்பழம் மிகச்சிறந்த மருந்தாக உள்ளது. 40 நாட்கள் அன்னாசிப்பழத்துடன் தேன் கலந்து சாப்பிட மூளைக்கோளாறு, ஞாபகசக்தி குறைவு போன்றவையும் குணமாகும்.

தொடர்ந்து விக்கல் வந்துகொண்டே இருப்பவர்கள் சிறிதளவு அன்னாசிப்பழச்சாற்றில் சர்க்கரை சேர்த்து அருந்த வேண்டும். தொண்டையில் புண், சதை வளர்ச்சி போன்றவற்றிற்கு அன்னாசிப்பழச்சாறு நல்ல பலன் தரும், மஞ்சள் காமாலை, வயிற்றுவலி, இதயவலி போன்றவற்றையும் சரிசெய்யும்.●

# சமையல் குறிப்பு

## கன்டோஸ்

### தேவையான பொருட்கள்



பால்மா - 2 மேசைக் கரண்டி
சீனி - 2 மேசைக் கரண்டி
கொக்கோ பவுடர் - 1 மே. க
மாஜரின் - 1 மே. க
தண்ணீர் - 2 மே. க
வனிலா - 1 மே. க
கஜூ - 50 கிராம்



### செய்முறை :

கஜூவை மாஜரினில் பொரித்துக் கொள்ளவும் பால்மாவையும் கொக்கோ பவுடரையும் ஈரமற்ற பாத்திரத்தில் போட்டுக் கொள்ளவும் தாச்சியில் சீனியைப் போட்டு 2 மேசைக் கரண்டி நீரை விட்டு பாகுபதம் வரை காய்ச்சவும். முதலில் சீனி முழுவதும் கரைந்து வெழுவெழுப்பான நுரைப்பதம் தோன்றும்போது மாஜரினை அதனுள் போட்டு மாஜரின் உருகியதும் அடுப்பில் இருந்து தாய்ச்சியை உடனடியாக இறக்கவும்.

வனிலாவையும் சேர்த்து பிறிதொரு பாத்திரத்தில் ஊற்றிக் கொள்ளவும். பின்பு பாகு உள்ள பாத்திரத்தை குளிர் நீர் உள்ள பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். கலந்து வைத்துள்ள மாக் கலவையை அதனுள் நன்றாக சேர்த்துக்கொள்ளவும்.

இக்கலவையை பெரிய நெல்லிக்காய் அளவு உருண்டையாக உருட்டிக்கொண்டு பொலித்தினில் வைத்து மெலிதாகத் தட்டிக் கொண்டபின் பொரித்த கஜூவை நடுவே வைத்து கஜூவை மூடும் வண்ணம் பொலித்தின் பேப்பரால் சீர்படுத்திய பின்பு பரிமாறலாம். ●

# பொது நிலையினரின் அருள் வாழ்வு

அருள் வாழ்வு, ஆவியின் வாழ்வு, ஞான வாழ்வு, ஆன்மீக வாழ்வு என்ற சொற்றொடர்களை ஒரே பொருளிலேயே பயன் படுத்துகின்றோம். மனிதனுக்கு ஆறறிவு உண்டு. மிருகங்கள் தம் உணர்ச்சிகளில் மூழ்கி விடுகின்றன. அவற்றைக் கடக்க முடிவதில்லை. ஆனால் மனிதன் அப்படியன்று. தன்னிலே முடங்கி விடாமல், தன்னைக் கடந்து நின்று, தனது உணர்வுகளை, உந்துதல்களை ஓர் இரண்டாம் மனிதன் பார்ப்பது போல ஆய்வு செய்யும் ஆற்றல் அவனுக்கு உண்டு.

இந்தத் திறன் இருப்பதனாலேயே தனக்கென்று இலட்சியங்களையும், குறிக்கோள்களையும் நிர்ணயிக்க முடிகின்றது. சிரமங்களை பாராமல் அவற்றிற்குத் தன்னை அர்ப்பணிக்க முடிகின்றது. இந்தத் தற்காப்பு ஆற்றல் இருப்பதனாலேயே தன்னைத் திறனாய்வு செய்து கொள்ள முடிகின்றது. தன்னைத் திருத்திக் கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும், வளரவும், முன்னேறவும் வழி பிறக்கின்றது.

இவ்வாறு கடந்து நிற்கும் ஆற்றல் இருப்பதாலேயே நிரந்தரமற்ற, தொடக்கமும், முடிவும் உள்ள தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும், குறையும், நிறையும் கொண்ட அனைத்தையும் அன்பினால் நிரப்ப முடிகின்றது. அதையே அருளாகவும், கொடையாகவும், வாய்ப்பாகவும் பார்க்க முடிகின்றது. இந்த மறைபொருளை இறை அனுபவமாக உணரமுடிகின்றது. அந்த இறைவனின் மறைபொருளில் தற்கடந்த நிலையில் தன்னை இழக்க முடிகின்றது; கையளிக்க இயல்கிறது.

இந்த ஆற்றலையே நாம் ஆவி அல்லது ஆன்மா என்கின்றோம். இந்த ஆவி அல்லது ஆன்மாவின் ஆற்றலைப் பயன்படுத்தும்போது தன்னைக் கடந்த இனம் புரியாத நிறைவு, மகிழ்ச்சி, பாதுகாப்பு உணர்வு ஏற்படுகின்றது. இலட்சியத்தையும், அதற்கான வழிமுறைகளையும் கடந்து நின்று பார்ப்பதால் குறிக்கோளை அடையப் பயன்படுத்தும் வழிமுறை ஏற்றதா என்று பார்க்கவும், விமர்சிக்கவும் கூடிய உளச்சித்திரம், மனச்சுதந்திரம் உருவாகின்றது. வாழ்க்கையின் எந்த ஒரு அம்சத்திற்கும் அடிமையாகாமல், அனைத்திலிருந்தும் விடுபட்டு, தனக்கு நல்லதென்று படுகிற எதற்கும் தன்னை அர்ப்பணிக்கவும், தேவையில்லை என்று உணர்கின்றவற்றிலிருந்து இந்த ஆவி அல்லது ஆன்ம ஆற்றலைக் கிளறிவிட்டு, அதனை வளர்த்து, ஆழப்படுத்தி அதனடிப்படையில் வாழ்வை வளப்படுத்துவதையே ஆவியின் வாழ்வு, ஆன்ம வாழ்வு, அருள் வாழ்வு என்கின்றோம். இந்த ஆவியின் ஆற்றலை அதிகரிக்கச் செய்ய, வலுப்படுத்த, அருள் வாழ்வை ஆழப்படுத்த ஒவ்வொருவரும் தங்களுக்குப் பொருத்தமான வழிமுறைகளைப் பின்பற்றுவார்கள். இதன் அடிப்படையிலேயே அருள் வாழ்வில் பல வகைகள் உருவாகின்றன.

உலக ஈடுபாடே பொது நிலையினரின் தனித்தன்மை. இந்த உலக ஈடுபாட்டில் தற்காப்பு அல்லது இறை அனுபவத்திற்கு ஏற்ற வழிமுறைகளை உள்ளடக்கியதே பொதுநிலையினரின் அருள்வாழ்வு. குறிப்பாக குடும்ப வாழ்வின் அனுபவங்கள், பணித்தள சவால்கள், சமூக சூழல் நிலவரங்கள் ஆகியவை பொது நிலையினர் அருள் வாழ்விற்குப் பல வடிவங்களைக் கொடுக்கின்றன.

அதில் செபத்திற்கு, உள அமைதிக்கு முக்கியமான இடம் உண்டு. உலகத்தைத் துறந்து அமைதியான இடத்தில் செய்யும் தியானத்தை விட, உலகப் பராக்குகளோடு இணைந்து, ஒன்றித்து அதில் கடத்தல் அனுபவம் பெற்று கிடைக்கும் அமைதியே, அதற்கேற்ற தியானமுறையே சிறந்ததாக இருக்கும்.

குடும்ப வாழ்வில், பணி இடத்தில், சமூகச் சூழலில் ஏற்படும் புதுப்புது சவால்களில் தற்கடந்த இறையனுபவம் பெற முயலும் போது அந்தச் சவால்களின் உண்மையான நிலவரம் என்ன? அறிவியல் பூர்வமான விளக்கம் என்ன? என்ற கேள்விகள் முன் நிற்கும். அதன் பிறகே விவிலியப் போதனைகளும், திருச்சபைப் படிப்பினைகளும் அலசப்படும். எந்தவிதமான குடும்பக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுவது என்று சிந்தித்து, சீர்தூக்கி, முடிவு எடுப்பது போன்ற பொறுப்பான வாழ்வுமுறை வாழ்க்கையின் புதுப்புதுச் சிக்கல்களுக்கான விடை செயற்பாட்டிலேதான் கண்டுபிடிக்க முடியுமேயொழிய அதற்கு முன்னதாகக் கிடைக்காது. பரிசோதனை செய்து பார்த்து வெற்றியோ, தோல்வியோ கண்ட பிறகே தெளிவு கிடைக்கும். எனவே பரிசோதனை முயற்சிகளுக்குப் பொது நிலையினர் முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதற்கான சுதந்திர உணர்வு அழுத்தம் பெறும். ●

# செபமாலை எம் வாழ்வின் வெற்றியின் மாலை

**- திருமதி. ஜெரின் செபஸ்ரியான்பிள்ளை -**



தாயிற் சிறந்ததோர் கோவிலும் இல்லை, தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை, அம்மா என்றால் அன்பின் வடிவம், அன்னை ஒரு ஆலயம் என்று அன்னையைப் பற்றி நாம் எழுதிக்கொண்டே போகலாம். தந்தை குடும்பத்தின் மூளை, தாயோ இதயம்.

திருஅவையின் அடித்தளமாக, ஆணிவேராக, அச்சாணியாக அன்றும், இன்றும் பலம் தந்து, துணை தந்து, கரம் பிடித்து வழிநடத்துபவள் அன்னை மரியா என்றால் அது மிகையாகாது. அவளின் வழிநடத்துதலில், பரிந்துரையில் பல புனிதர்கள், திருத்தந்தையர், பொது நிலையினர், துறவறத்தார் வாழ்ந்து, மடிந்து இருக்கின்றார்கள் என்பது நிதர்சனம். உதாரணமாக புனித அந்தோனியார். ''மரியாவின் நாமம் தேனைவிட நாவுக்கு இனிமையானது. பரவசப்படுத்தும் பாட்டை விட செவிக்கு இனிமை தருவது'' என்று மரியாவை புகழ்கின்றார். ''மரியா இயேசுவைத் தம் உதரத்தில் தாங்குமுன் நம்பிக்கையால் முதலில் அவரை உள்ளத்தில் பெற்றெடுத்தார்'' என புனித அகுஸ்தினார் மரியாவின் நம்பிக்கையை அதன் ஆழத்தை எமக்கு எடுத்து இயம்புகின்றார்.

➡ 14

# வேதனையிலும் சாதனை படைப்பதற்காக அழைக்கப்படும் கிறிஸ்தவர்கள்

**– S.A.ஜெஸ்ரீன், நெடுங்கண்டல் –**

''இந்த உலகத்தில் உங்களுக்கு வேதனை உண்டு, சவால் உண்டு, ஆனால் கலங்காதீர்கள். இவ்வுலகத்தை நான் வெற்றி கொண்டேன்'' என்ற எம் பெருமானின் கூற்று கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் அனுதினமும் பல வடிவங்களில், பரிமாணங்களில் அர்த்தம் பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது. ''ஓர் குழந்தை உதரத்தில் கருத்தரித்ததிலிருந்து அதனைப் பக்குவமாகப் பிரசவித்து பாலூட்டி, சீராட்டி, கல்வியோடு சிறந்த பண்புகளையும் ஊட்டி தான் பெற்ற பிள்ளையை ஊரார் புகழும் வரை உடலாலும், உள்ளத்தாலும், ஓர் தாய் படுகின்ற வேதனை, உழைப்பு போற்றப்படக் கூடியது. இத்தியாகம் இவ்வுலகத்தில் ஓர் உயர்ந்த தியாகம். இத்தியாகத்தை இவ்வுலகத்தில் எதற்கும் ஒப்பிட முடியாது. அவ்வாறே, ஓர் சிறந்த மாணவனை, மாணவியை உருவாக்க பாடசாலைச் சமூகத்தினால் எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியிலும், உழைப்பிலும் இவ்வேதனை காணப்படுகின்றது.



தமது நாட்டு மக்கள் நலமாக, கடன் சுமையின்றிப் பல பொருளாதார முன்னேற்றங்களிலும், தனிமனித வருமானத்திலும் உயர்ச்சியையும் காட்டுவதற்கு, கொண்டுவருவதற்கு, எடுக்கப்படும் முயற்சி, பிராயச்சித்தம் ஓர் நாட்டின் சிறந்த தலைவனை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது. பூமியில் வாழப் பிறக்கின்ற ஆசைப்படுகின்ற அனைத்து ஜீவன்களும் இவ்வேதனை என்ற அரிய ஔடதத்தை சுவைத்து, சாதனை படைப்பதற்காக அழைக்கப்படுகின்றார்கள்.

கிறிஸ்தவன் என்பவன் சிலுவையின் ஊடாகத்தான் மீட்பை அடையமுடியும். இது எம் பெருமான் எமக்கு வகுத்துக் கொடுத்த மாபெரும் வரலாற்றுச் சாதனையாகும். ஓர் சிறந்த தத்துவமாகும் அத்தோடு இச்சிலுவையின் வழியில் நடக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் பல எண்ணிலடங்கா துயரத்தை, அனுபவத்தை வாழ அழைக்கப்படுகின்றார்கள்.

இங்கு இறைவனின் விருப்பம் நாம் வேதனை அடைவது அல்ல. மாறாக ஓர் நல்ல கிறிஸ்தவனின் வாழ்வு மிக மிக விலை உயர்ந்தது. அத்தோடு அதனை வாழ பல அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள், விட்டுக் கொடுப்புக்கள் தேவை என்பதை எமக்கு உணர்த்துவதாகும். ''நாங்கள் கிறிஸ்தவர்கள்' என்ற எம் கூற்றை பார்க்கிலும் ''நீங்கள் கிறிஸ்தவர்களா?'' என்ற அயலவனின் கூற்றில் பல விடயங்கள் காணப்படுவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பல அர்த்தங்கள் புதையுண்டு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

நாங்கள் அணிகின்ற சிலுவையை மட்டும் மேற்கோள்காட்டி எம்மை கிறிஸ்தவர்கள் என்று இனம் காட்டுவதை விட, எமது செயலைப் பார்த்து எம் அருகில் இருப்பவர்கள் நீங்கள் கிறிஸ்தவரா? என்று கேட்பதிலேயே எம் வாழ்வின் அர்த்தம், கிறிஸ்தவர்களின் அர்த்தம் முழுமை பெறுகின்றது. இன்றைய சமுதாயத்தில் நாங்கள் எல்லோரும் பரம்பரை கிறிஸ்தவர்கள் என்று வெறுமனே வாய்மொழி பேசுகின்ற எம்மவர் மத்தியில் எத்தனையோ பல பிரச்சினைகள். எமது வழக்காறுகளை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொல்லி வெடியுடன், கொடியேற்றிப் பல வழிபாடுகளுடனும் கொண்டாடப்படுகின்ற பெருநாட்களுக்குப் பின்பு எமது ஊர்களில் ஏற்படும் பிரச்சனைகள் எத்தனை? குறைகள் எத்தனை? இவை எல்லாம் எம்மைச் சிந்திக்க அழைக்கின்றன. ''உங்களுடைய விழாக்களை நான் வெறுக்கின்றேன்'' என்ற இறை கூற்று இங்கு அர்த்தம் பெறுவதை எம்மால் உணர முடிகின்றது. ஓர் உன்னத நோக்கத்திற்காக உயர்ந்த மனித மாண்பைக் கட்டிக்காத்துக் கொண்டாடுகின்ற விழாக்கள் இன்று அர்த்தம் இழந்து வெளிப்பகட்டுக்காக, சுயநலத்துடன் கொண்டாடப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரினதும் சிந்தனையிலும், நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்தாத வழிபாடுகளும் அர்த்தமற்றது. ''மாறவே ஆசைப்படுகின்றேன் எம்மை மாற்றிவிடும் அருமை நேசரே.'' என்று எம்மை முழுமையாக இறைவனிடம் ஒப்படைக்கும் அந்த சந்தர்ப்பங்களை ஏன் நாம் தவற விடுகின்றோம்?

நாம் எல்லோரும் நிலையற்ற உலகில் இருந்து நிலையான உலகை நோக்கி பயணிக்கின்றவர்களாக இருக்கின்றோம். ஆகவே இறைவார்த்தையின் ஒளியில் மாறுகின்ற போது நிலையற்ற செல்வத்தைக் கொண்டு நிலையான செல்வத்தைத் தேடுவது எமது கடமையாக இருக்கின்றது.

இதனை மறந்து இன்று எமது சமூகம் சுயநலத்துடனும், வரட்டுக் கௌரவங்களுடனும், தன்னலத்துடனும் வாழ்வது துரதிர்ஸ்டமான ஒரு நிலையாகக் காணப்படுகின்றது. கண் இருந்தும் பார்க்க மறுக்கின்றோம். காது இருந்தும் கேட்க மறுக்கின்றோம். உள்ளம் இருந்தும் ஆழ்ந்து அறிந்து உணர மறுக்கின்றோம். எமது இந்து சகோதரர்களின் போதனையின்படி கடந்தகால உலகத்தின் பலன் நிகழ்காலத்தில் பிரதிபலிப்பதாகவும், புத்த பெருமானின் போதனையில் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம் மனிதனிடம் காணப்படும் ஆசையே என்றும் கூறப்படுவதைப் பார்க்க முடிகின்றது.

ஆகவே, இங்கு அனைத்து மதங்களும் கூறுவது இவ்வுலக செல்வங்கள், பதவிகள், சொத்துக்கள் எல்லாம் வெறுமனே நிலையற்றது என்பதாகும்.

ஆகவே, இயேசு பெருமான் எம்மைப் பார்த்துக்கேட்பது உங்கள் செல்வங்களை இவ்உலகில் சேகரிக்க வேண்டாம். ஏனென்றால் பூச்சி, புழுக்கள் இதனை அழித்துவிடும். மாறாக விண்ணுலகில் சேகரியுங்கள். அங்கே பூச்சியும் இல்லை, புழுவும் இல்லை என்பதாகும்.

நாங்கள் எல்லோரும் மிக விலையேறப் பெற்றவர்கள். ஆண்டவரின் பார்வையில் மிகுந்த பெறுமதி உள்ளவர்கள். காரணம் எம்மை ஆண்டவர் இயேசு தனது இரத்தத்தால் கழுவி, சுத்தப்படுத்தியுள்ளார்.

தனது இரத்தத்தை எமக்காக சிந்தியுள்ளார். தமது இரத்தத்தால் எம்மைத் தமது சுவீகார மக்களாக மாற்றியுள்ளார். இதனை எமக்குத் திருச்சபை பல ஆண்டுகளாக போதித்து வருகின்றது. ஆனால் இதனை நாங்கள் ஆழமாக உணரவில்லை. வேதாகமத்தின் ஒளியில் சிந்திக்கவில்லை.

நாங்கள் இறைவனின் சுவீகார பிள்ளைகள் என்ற பெயரை எம்மகத்தே கொண்டுள்ளது எமக்கு மிகப்பெரிய பாக்கியம். ஆகவே, எமது அனுதின வாழ்வில் ஏற்படுகின்ற வேதனைகள் எமது சாட்சிய வாழ்வுக்கு உரம் ஊட்டுவதாக அமைய, எமது வாழ்வை மாற்றி இறைனுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ முயற்சிப்போம். ●

# அமைதி இன்றி வளர்ச்சியும், வளர்ச்சியின்றி அமைதியும் இல்லை

உலகில் பாதுகாப்பு என்பது வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அந்த வளர்ச்சி வழியாகவே ஏழ்மையை எதிர்த்துப் போராட முடியும் என ஐ.நா. அவைக் கூட்டத்தில் உரையாற்றினார். ஐ.நா.விற்கான திருப்பீடப் பிரதிநிதி பேராயர் பெர்னதித்தோ அவுசா. சிறு ஆயுதங்கள் உற்பத்திச் செய்யப்படுவது, சட்டவிரோதமாக விற்கப்படுவது போன்றவற்றைத் தடைசெய்யும் அனைத்துலக ஒப்பந்தம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது குறித்து ஆராயும் ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றிய பேராயர் அவுசா அவர்கள், அமைதிக் கலாசாரத்தை ஊக்குவிப்பதன் வழியாகவே, வாழ்வுக்கான மதிப்பையும் மனித மாண்பையும் மேம்படுத்த முடியும் என்பதை வலியுறுத்தினார்.

சிறு ரக ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது குறித்த முயற்சியில் தகவல் சேகரிப்பு, அனுபவப் பகிர்வு, நல் நடவடிக்கைகள் போன்றவை வழியாக மக்கள் சமூகமும், அரசு சாரா அமைப்புக்களும் ஆற்றி வரும் சிறப்புப் பணிகள் பாராட்டுக்குரியவை என்பதையும் சுட்டிக்காட்டினார் பேராயர் அவுசா. அமைதியின்றி உறுதியான வளர்ச்சியைப் பெறமுடியாது. உறுதியான வளர்ச்சியின்றி அமைதி கிட்டாது என்ற வளர்ச்சி குறித்து 2030ஆம் ஆண்டிற்கான திட்ட வரைவு குறித்தும் எடுத்துரைத்த பேராயர் அவுசா அவர்கள், 1967ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் பவுல் அவர்கள் வெளியிட்ட அமைதியின் புதிய பெயர் வளர்ச்சி என்ற பதத்தை இது எதிரொலிப்பதாக உள்ளது என்றார்.

சிறு ரக ஆயுதங்களின் சட்ட விரோத விற்பனைகள் அமைதிக்கும், வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார் பேராயர் அவுசா. ●

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.193

2 அரசர்கள் (அதிகாரம் 13 முதல் 25 முடிய)

உங்கள் விடைகளை செப்ரம்பர் மாதம் 01ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | ❖ | | | | 03 |
| | | ❖ | | | | 04 | | | ❖ | |
| | | | 05 | | | | | | 06 | |
| | | ❖ | | | 07 | | | | | |
| | 08 | | | 09 | | | | ❖ | | |
| | 10 | | | | | | | 11 | | |
| | | | 12 | | | | 13 | | | |
| 14 | | | | | 15 | 16 | | | 17 | ❖ |
| | 18 | | | | | | | | | |
| | 19 | | | ❖ | | | | ❖ | | |
| 20 | | | | | 21 | | | | | 22 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. எசேக்கியா தூதரின் கையிலிருந்த மடலை வாங்கி வாசித்தபின் கோவிலினுள் சென்று ஆண்டவர் திருமுன் மடலை ………………….. வைத்தார்.
4. ஆனால் யோகவா ஆண்டவரின் ……………….ப் பார்வையை நாட ஆண்டவரும் அவனுக்குச் செவிசாய்த்தார்.
7. ஒசேயா அவனுக்கு அடிபணிந்து …………………….. செலுத்தி வந்தான்.
8. அவன் மூன்றுமுறை …………………விட்டு நிறுத்தினான். (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
9. எனவே எனது உரிமைச்சொத்தில் எஞ்சியிருப்போரைக் ……………………… அவர்களின் பகைவரிடம் ஒப்படைப்பேன்.
10. ஆகாசு தன் மூதாதையரோடு ……………………….. கொண்டு தாவீதின் நகரில் அடக்கம்செய்யப்பட்டான்.
18. ஆண்டவரின் வார்த்தையாக நீர் கூறியது நல்………………..
19. இவ்வுடன்படிக்கை நூலில் எழுதப்பட்டுள்ளதுபோல் உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் ……………… கொண்டாடுங்கள்.
20. நீ அவர்களுடைய ……………………… மேடுகளையும், பலிப்பீடங்களையும் அழிக்கவில்லையா?

### மேலிருந்து கீழ்

01) இவ்வாண்டு தானாக…………………… நீ உண்பாய்.
02) ஏனெனில் மனாசே அவர்களை வழிதவறி……………….ச் செய்தான்.
03) அவனுடைய அன்றாடத் ……………… அவன் வாழ்நாள் முழுவதும் மன்னனால் அவனுக்கு ஒவ்வொரு நாளும் செலவுப்படி வழங்கப்பட்டு வந்தது.
05) ஆனால் லெபனோனின் விலங்கு ஒன்று அவ்வழியே ……………….. நெருஞ்சிச் செடியை மிதித்துப்போட்டதாம்.
06) பெற்றோரின் பாவத்துக்காகப் ……………… கொல்லப்படலாகாது.
09) அசீரிய மன்னன் அதற்கு இணங்கி தமஸ்குவைக் …………….. அதன் குடிமக்களைக் கீருக்கு நாடு கடத்தினான்.
11) போர் வீரர் அனைவரும் அரசபூங்காவின் இரு மதில்களுக்கு இடையே அமைந்த வாயில் ……………… அராபாவை நோக்கி இரவில் ஓடினர்.
13) பாபிலோனிய மன்னன் செதேக்கியாவின் புதல்வர்களை அவனது கண்முன்னே ……..............……..
16) அவன் மூதாதையருடன் தாவீதின் ………………..அடக்கம் செய்யப்பட்டான்.
17) எலிசா அவனை நோக்கி ………………யும் அம்புகளையும் எடுத்துக்கொள் என்றார்.

### வலமிருந்து இடம்

03) வானளாவிய கேதுரு மரங்களையும் அங்கு நின்ற உயர்ந்த…….....……. மரங்களையும் வெட்டினேன்.
05) ஏனெனில் அவர்தம் வாழ்நாள்களில் அமைதியும், பாதுகாப்பும் இருந்தால் …………......…. என்று எண்ணிக்கொண்டிருந்தார்.
06) எனவே அவன் ……………….…எலிசாவின் கல்லறையில் போட்டுவிட்டு ஓடினான்.
11) உங்கள் தீய……….……….விட்டுத் திரும்புங்கள்.
12) நாட்டில் ……………… .மக்களைத்தவிர எவரையும் விட்டு வைக்கவில்லை.
13) அதாவது ……………….. சினம் இன்னும் தணியவில்லை.
15) அப்பொழுது அரசன் ஆகாசு சக்கரத்தாங்கிகளைப் பிரித்துக் கொப்பறைகளை அவற்றினின்று…………………னான். (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
21) ஏனெனில் இஸ்ராயேல் மக்கள் அன்றுவரை அதற்குத்……………காட்டி வந்தனர்.
22) தங்கள் புதல்வர்ளையும், புதல்வியரையும் ………………. பலியிட்டனர்.

### கீழிருந்து மேல்

05) அதற்கு எசேக்கியா “நிழல் பத்துப்பாகை முன்னோக்கிப்…………….எளிது” என்றான்.
08) அப்பலிபீடங்களின்மேல் மனித ……………………களைச் சுட்டெரித்தபின் அவர் ஜெருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்.
09) மேலும் உன்னையும், இந்நகரையும் அசீரிய மன்னனின்………………விடுவிப்பேன்.
14) எனவே ஆண்டவரின் சினம் நமக்கெதிராகச் ………………..விட்டெரிகிறது.
18) அவர்கள் சமாரியாவை உரிமையாகக்கொண்டு அதன் நகரங்களில் ……..................….. வந்தனர்.
20) மேலும் காவல் மாடம் முதல் அரண்சூழ் கோட்டைவரை எல்லா நகர்களிலும் தங்களுக்குத் …………………மேடுகளை அமைத்துக்கொண்டனர்.
21) ஒருவன் உள்ளும் புறமும் தட்டினைத் துடைத்து……..…. யாக்குவதுபோல் நானும் ஜெருசலேமைத் துடைத்துத் தூய்மை - யாக்குவேன்.
22) அவரது காலத்தில் எகிப்து நாட்டின் மன்னன் ……....………… என்ற பார்வோன் அசீரிய அரசனை நோக்கிச் செல்கையில் யூப்பிரத்தீசு ஆற்றை வந்தடைந்தான்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 191

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



முதலாம் பரிசு:
A. மேரி, பற்றிமா,
விவேகானந்தா வீதி, கீரி,
மன்னார்.



இரண்டாம் பரிசு:
E. ஜெய்மன் றாஜா,
புத்திரர் கண்டான்,
முருங்கன்.

மூன்றாம் பரிசு:
S. டென்சியா பெரேரா,
8ம் வட்டாரம்,
பேசாலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 191ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. திருமதி. ரஜனி எட்வின், பெரியநாவற்குளம், மாந்தை
02. யோ. ஆன்நிருஜன் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
03. அ. பிரிய தர்சினி சில்வா பெரியபண்டிவிரிச்சான், மடு.
04. க. கணேஷ், எழுத்தூர், மன்னார்.
05. ஞா. வினோதர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
06. ச. ஜெயா, எழுத்தூர், மன்னார்.
07. ப. பிறைன் குரூஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
08. வி. தாசன் டலிமா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
09. செ. இன்பென்ரா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
10. ச. அபிஷேக், எழுத்தூர், மன்னார்.
11. அ. இராசநாயகம் சில்வா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
12. அ. அன்பன் கூஞ்ஞ, பெரியபண்டிவிரிச்சான், மடு.
13. புஸ்பா சேவியர், இல:58/6A, மத்தியவீதி, திருகோணமலை.
14. நி. யாழிசன், யோசப்வாஸ் வீதி, செட்டிகுளம்.
15. ராமச்சந்திரன் றொசாந்தினி, அடம்பன்.
16. அ. ஜெனிபர், நொச்சிகுளம், உயிலங்குளம்.
17. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
18. R. ஜெகநாதன், இல: 161 மடுக்கரை, நானாட்டான்.
19. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை
20. ஐ. ஜெஜின்ஷிக்கா, நறுவிலிக்குளம், வங்காலை
21. சுரேன் சயூட்சன், முழங்காவில், பூநகரி.
22. ராமச்சந்திரன் மேரி டிலுசியா, அடம்பன்.
23. பவேந்திரன் அகிலா, திருக்கேதீஸ்வரம், மாந்தை
24. J. ஜெறுஷன் லோகு, முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
25. S. பெனடிக்ற் தயாளன், இலுப்பைக்குளம் நேரியகுளம்.
26. யோகராசா மயூரி, கார்மேல் இல்லம், அடம்பன்.
27. நி. டேனியல், குடியிருப்பு, செட்டிகுளம்.
28. றஞ்சினி எட்வின், பெரியநாவற்குளம்.
29. ஜின்போன் லக்மினி குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
30. இருதயநாதன் மெகன்சி, இல: 161, மடுக்கரை, நானாட்டான்.
31. எ. றமீசன், எழுத்தூர், மன்னார்.
32. ஜாகுலநாயகி தாஸன், வேப்பங்குளம், வவுனியா.
33. சதீஸ் வர்சிகன், முழங்காவில், பூநகரி.
34. பவேந்திரன் அனுஜன், திருக்கேதீஸ்வரம், மாந்தை
35. அ. அக்ஷயா, நொச்சிகுளம், உயிலங்குளம்.
36. சுரேஸ்குமார் சுவேந்தன், பல்லவராயன்கட்டு, பூநகரி.
37. வின்சன் துஷிகா, திருக்கேதீஸ்வரம், மாந்தை.
38. அ. டனிஸ்வரன், அடம்பன்.
39. யோ. செபஸ்ரியாம்பிள்ளை, நொச்சிகுளம், உயிலங்குளம்.
40. ராமச்சந்திரன், றொசங்கர், அடம்பன்.
41. இ. அக்சயா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
42. அ. மிராண்டா, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
43. ம. துஷந்திக்கா, எழுவைதீவு, யாழ்ப்பாணம்.
44. ப. மனோகரன், செட்டிகுளம்.
45. ராமச்சந்திரன் டிலுஜன், அடம்பன்.
46. மு. தனதனமோகன், தாமரைக்குளம், அடம்பன்.
47. அன்பழகன், சவேரியார்புரம், சிலாவத்துறை.
48. அ. பெனடிற், 4ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.
49. இ. மெற்றில்டா, திருக்கேதீஸ்வரம், மாந்தை.
50. றொஷான், எழுவைதீவு, யாழ்ப்பாணம்.

## மரண தண்டனை ……….

03ஆம் பக்கத் தொடர்ச்சி

**மரண தண்டனை குறித்த புதிய மறைக்கல்வி கருத்து**

தீவிரமான குற்றங்களை ஒருவர் செய்திருந்தாலும், அவரது மனித மாண்பு, அக்குற்றங்களால் எவ்வகையிலும் குறையவில்லை என்றும், தீவிரக் குற்றங்கள் புரிவோரை மக்களிடமிருந்து பிரித்து, காவலில் வைப்பதில், தகுந்த வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், காவலில் வைக்கப்பட்டிருப்போர் மனம் திருந்தும் வாய்ப்புக்கள் உண்டு என்றும் மறைக்கல்வி 2267 என்ற பிரிவில் புதிதான எண்ணங்கள் கூறப்பட்டுள்ளன.

**மரண தண்டனையை அறவே ஒழிப்பதில் திருஅவை**

அந்த எண்ணங்களின் அடிப்படையில், மனித மாண்பு எந்தச் சூழலிலும் சிதைக்கப்படக் கூடாது என்பதில் திருஅவை உறுதியாக உள்ளது என்றும் மரண தண்டனை இந்த மாண்பைக் குலைப்பதால், அதனை உலகெங்கும் ஒழிப்பதற்கு திருஅவை முயற்சிகள் மேற்கொள்ளும் என்றும் இந்த புதிய திருத்தங்களில் கூறப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் அடங்கிய மறைக்கல்வி 2267ஆம் எண்ணை திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயம் வெளியிட்டுள்ளது.●

## இளம் குருக்களுக்கான ……….

03ஆம் பக்கத் தொடர்ச்சி

“புதிய தொழில் நுட்பங்களும், அதன் அணுகுமுறைகளும்” என்ற தலைப்பில் மையப்படுத்தியதாக இவ்வுருவாக்கப்பயிற்சியின் உரைகளும், நிகழ்வுகளும் அமைந்திருந்தன. எம் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் ஆரம்பித்துவைத்தார்.●

## செபமாலை எம் வாழ்வின் ……….

13ஆம் பக்கத் தொடர்ச்சி

செபமாலையைத் தக்கவிதமாய் செபிக்கிறவன் ஒரு போதும் சேதம் ஆகமாட்டான். இதை நான் என் இரத்தத்தினால் எழுதித்தர தயாராய் இருக்கின்றேன் என புனித மான்போர்ட் சாட்சியம் பகர்கின்றார். ஒரு குடும்பத்திற்கு அல்லது ஒரு குழந்தைக்கு அம்மா என்பவள் எவ்வளவு முக்கியமானவர் என்பதை நாம் நன்கு அறிவோம். அதனால் தான் கடவுள் திருஅவையின் அங்கத்தவர்களாகிய நமக்கு அன்றும், இன்றும், என்றும் தாயாக அன்னை மரியாவைத் தந்திருக்கின்றார். இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம் “அம்மா இவரே உம் மகன்” என்றார். பின்னர் தம் சீடரிடம், “இவரே உம் தாய்” என்றார் (யோவான் 19:26-27)

செபமாலை வெற்றியின் மாலை. கி.பி நான்காம் நூற்றாண்டில் பாலைவனத்தில் வாழ்ந்த துறவிகள் தான் முதன் முதலில் செபமாலைப் பக்திக்கு அடி அத்திவாரம் இட்டார்கள். பின்னர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் புனித டோமினிக்கிற்கு அன்னை மரியா அளித்த காட்சியில் அவருக்கு செபமாலையை கொடுத்து செபமாலை பக்தியைப் பரப்புமாறு கேட்டுக்கொண்டதாக திரு அவையின் பாரம்பரியம் கூறுகின்றது. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் செபமாலைதான் நான் விரும்பும் செபம். என் இளமை முதற்கொண்டு என் கவலைகளை, செபமாலை வழியாக கடவுளிடம் ஒப்படைத்திருக்கின்றேன். என் இன்ப, துன்ப வேளையில் என் துணையாக, ஆறுதல் அளிப்பதாக செபமாலை இருந்துள்ளதாக கூறுகின்றார்.

ஒரு மோட்டார் வண்டியில் எப்படி இறுதியாக சேமிப்பு (ரிசர்வ்) பெற்றோல் உதவி புரிகின்றதோ அவ்வாறே எவ்வளவு கால நேரம் நாம் மன்றாடியும் நமக்கு கிடைக்காத அன்பை, ஆறுதலை, அரவணைப்பை, பரிந்துரையை, உதவியை நாம் எம் அன்னை மரியிடம் தொடர்ந்து மன்றாடும் போது பெற்றுக்கொள்ளலாம். அன்று கானாவூர் திருமண விழாவில் இரசம் தீர்ந்துவிட்டதும் (யோவான் 2:1-11) எவ்வாறு தன்மகன் இயேசுவிடம் பரிந்து பேசினாரோ அவ்வாறே எம் அன்னை எமக்காக பரிந்து பேச ஆவலுடன் காத்திருக்கிறார் என்பதை நாம் மனதார உணரவேண்டும்.

இயேசு தனது நேரம் இன்னும் வரவில்லை என்று கூறினாலும் தனது தாயின் சொல்லை தட்டாமல் ஏற்று தண்ணீரை இரசமாக்கினார். இயேசு செய்த முதல் புதுமை ஒரு குடும்பத்தின் திருமண விழாவில் நடைபெற்றதை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். ‘அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம்’ செய்யுங்கள் என்று அன்று கானாவூர் திருமண விழாவில் கூறிய தாய் மரியா இன்றும் நம்மிடம் அதையே கூறுகின்றார். இயேசுவின் போதனைகளை கடைப்பிடித்து ஒழுக நமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

எனவே திருமுழுக்கின் போது விண்ணகத் தந்தையின் பிள்ளைகளாக அழைக்கப்பட்ட நாம் எமது குடும்ப வாழ்வில் தனிப்பட்ட வாழ்வில் திருச்செபமாலையை தினமும் செபிப்போம். அன்றாடம் நாம் செபமாலை செபிக்கும் போது இயேசுவின் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும் நாம் சிந்திக்க முடியும். அதனையே எமது அன்னையும் ஆசிக்கின்றார் என்பதை எம்மனதில் ஆழமாக பதிப்போம். எனவே செபமாலையை எமது கையில் ஏந்துவோம். எமது இவ்வுலக, மறுஉலக வாழ்வில் வெற்றி வாகை சூடுவோம். மரியாவின் பிள்ளைகளாக இறை தந்தைக்கு சாட்சியம் பகர்வோம்.●

# நீங்காத நினைவுகள்

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 05 1940



உதிர்வு 22 08 2016

### திரு. அந்தோனி சூசை
(பெரியமுறிப்பு, பெரிய குஞ்சுக்குளம்)

**"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியது" (திரு.116.5)**

பாசத்தின் பிறப்பிடமே! - எம்
குடும்பத்தின் குல விளக்கே!
ஐயா என்றழைக்க நீங்கள் இல்லையே!
நானிலத்தில் உம் உயிர் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஆனதையா!
நாடோடிபோல் எம் மனது
உம் முகமதை தேடுதையா!
உமது ஆன்மா ஆண்டவரின் அடியில் இளைப்பாற கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 08 1974



உதிர்வு 10 08 2004

### திருமதி. அன்ரன் யோகநாயகம் பிலோமினா (லில்லி)
(குமானாயங்குளம், அடம்பன்)

**"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான்.11:25)**

ஊர் போற்ற, உற்றார் உறவினர் போற்ற
என்றும் சிரித்த முகமும், கவரும் பேச்சும் கொண்டு
குணம் காத்து, குடும்ப நலம் காத்த துணையே!
அன்புத்தாயே! நீங்கள் தரணி விட்டு போனதால்
தவியாய் தவிக்கின்றோம்.
மறைந்து போனாலும் என்றும் மறந்து போகாத
நான்காம் ஆண்டு நினைவில்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புக் கணவன், ஆசைமகள்.

## 9ஆம் ஆண்டு, 8 1/2 ஆண்டு நினைவஞ்சலி





### ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)
### திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)

(கொன்வெண்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

**"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது" (1கொரிந்தியர் 15:42)**

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

***உம் பிரிவால் துயருறும்:***
***சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.***
***தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்***

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 08 1974



உதிர்வு 18 08 2014

### அருட்பணி. தேவதாசன் எட்வின் (அ.ம.தி). குருத்துவம் – 12.11.2007

குருத்துவப் பணியை ஆரம்பித்து, குறுகிய ஏழாண்டுப் பணியிலே எட்டிப்பார்க்காத அளவு ஏராளமான பணி செய்து, எமக்காக இறைவனிடம் வேண்டிட எம்மை விட்டுச் சென்று நான்காண்டுகள் மறைந்ததையா! ஆனால் நாற்றிசை எங்கும் - உன் பெயர் ஒலிக்குதையா. உன்னை விரும்பாதோர் யாருமில்லை. உன்னை வெறுப்போர் எவருமில்லை. உணவற்ற, உறக்கமற்ற இரவில் கூட உன் நினைவுகள் கூட எம்மைவிட்டு நீங்குவதில்லை. எப்படி மறப்போம் நின் நினைவுகளை. நின் ஆன்மா சாந்தி பெற நித்தமும் செபிக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
குடும்பத்தினர், உறவினர்கள்.

## மடுத்திருத்தல..........

**01ஆம் பக்கத் தொடர்ச்சி**

இத் திருவிழாத் திருப்பலியை கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயர் அதி மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்ட ஆயர், ஏனைய மறைமாவட்ட ஆயர்களும், குருக்களும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

இத் திருவிழாவிற்கான சகல ஒழுங்குகளையும் மடுமாதா திருத்தல பரிபாலகர் அருட்பணி. பெப்பி சோசை அடிகளார், முன்னைநாள் பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மடுப் பிரதேச செயலாளர், இன்னும் ஏனைய அரசாங்க அலுவலகப் பணியாளர்களும் இணைந்து மேற்கொண்டனர்.

மடுமாதா திருத்தலம் அனைத்து மக்களையும் இன, மத, மொழி வேறுபாடின்றி அரவணைக்கும் புனித பூமி ஆகும். பல இலட்சக்கணக்கான இறைமக்கள் நவ நாட்களிலும் திருவிழாவிலும் பங்குகொண்டார்கள். இறைமக்கள் வீண் களியாட்டங்களைத் தவிர்த்து மடுத்திருப்பதியின் ஒழுங்குகளை கடைப்பிடித்து திருத்தலத்தின் புனிதத்துவத்தை பாதுகாக்கவும், நடைபெறுகின்ற திருப்பலி, வழிபாடு, செபமாலைத் தியானம், ஒப்புரவு அருட்சாதனம், நற்செய்திப் பகிர்வு ஆகியவற்றில் முழுமையாக பங்கெடுத்து ஆன்மீக எழுச்சி பெற ஒலிபெருக்கி மூலமாக அவ்வப்போது அறிவுறுத்தப்பட்டார்கள்.

## அதிர்வுகள்.....

**10ஆம் பக்கத் தொடர்ச்சி**

சிம்மாசனங்களில் ஏறிய பின் வாக்களித்த மக்கள் பற்றிய அக்கறையோ, அல்லலபடும் முன்னாள் போராளிகள் பற்றியோ அல்லது அன்றாடம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியோ இவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை. அப்படி இல்லையென்று ஏதாவது செய்வதாக இருந்தால் போராட்டங்களில் சில மணித்துளிகள் நிற்பது, மேடைகளில் மத்திய அரசைத் தாக்கிப்பேசுவது, அறிக்கை விடுவது, பேட்டியளிப்பது என இவர்களின் செயற்பாடுகள் முடிந்துவிடுவதாகவே தெரிகின்றது. இருபது, முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற எந்தத் தேர்தலிலாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர்களைப் பயன்படுத்தாது எக்கட்சியாவது வெற்றியீட்டி இருக்கின்றதா? இல்லையே. இனிவரும் தேர்தல்களிலும் அவர்களின் பெயரே வெற்றிக்கான மந்திரமாக இருக்கப்போகின்றது என ஐயம் திரிபற கூறலாம். வேறென்ன? அவர்களின் பெயரே நம் அரசியல்வாதிகளுக்கு 'துரும்பு'ஆக இருக்கப் போவதோடு மீண்டும் ஒருதடவை வழமைபோன்று 'புலிக்கதை' தொடரத்தான் போகின்றது. "வந்தாக. போனாக. வாசலுல நின்னாக. வாக்குறுதி மந்திரத்த வாய்கிழியச் சொன்னாக. வாய்கிழியச் சொல்லிவிட்டு வாக்குகளக் கேட்டாக. வாக்குகள வாங்கிப்புட்டு வந்தவழி போனாக. போனவுகளக் காணலியே போன இடம் தெரியல்லியே!" என்ற சு.பாண்டியனின் அவதானிப்பே நின்று நிலைக்கப் போகின்றது! ●

## அருட்பணி அருப்பே அவர்களை......

**11ஆம் பக்கத் தொடர்ச்சி**

திருத்தந்தையின் சார்பில் உரோம் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றும் கர்தினால் ஆஞ்செலோ தேதொனாத்திஸ் அவர்கள் வழங்கிய ஒப்புதலைத் தொடர்ந்து இந்தப்பணி ஆரம்பமாகியுள்ளது என்று அருள்பணி சோசா அவர்கள் கூறினார். 1907ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி ஸ்பெயின் நாட்டின் பில்பாவோ நகரில் பிறந்த பேத்ரோ அருப்பே அவர்கள், 1945ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோஷிமா நகரம் அணுகுண்டு தாக்குதலுக்கு உள்ளான போது அந்நகரின் அருகே அமைந்திருந்த இயேசு சபை நவத்துறவியர் இல்லத்தில் நவத்துறவியரின் பயிற்சியாளராகப் பணியாற்றினார். 1968ஆம் ஆண்டு, இயேசு சபையின் 28வது உலகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அருட்பணி அருப்பே அவர்கள், 1983ஆம் ஆண்டு பக்கவாத நோயினால் தாக்கப்படும் வரை சபையின் தலைவராக தலைசிறந்த பணியாற்றினார். 1991ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி தன் 83வது வயதில் இறையடி சேர்ந்த அருள்பணி அருப்பே அவர்கள் துவக்கிய பல்வேறு முயற்சிகளில், புலம்பெயர்ந்தோர் பணிக்கென உருவாக்கிய இயேசு சபையின் பணிக்குழு மிக முக்கிய முயற்சி என்று கருதப்படுகின்றது. ●

## திருப்பீட சமூகத் தொடர்புத் துறையின்......

**01ஆம் பக்கத் தொடர்ச்சி**

1956ஆம் ஆண்டு இத்தாலியின் சிசிலித் தீவில், பலெர்மோ என்ற ஊரில் பிறந்த ருபீனி அவர்கள், உரோம் நகரின் 'லா சாப்பியன்சா' பல்கலைக்கழகத்தில் தன் பட்டப்படிப்பை நிறைவு செய்தார். தன் 23வது வயது முதல் ஊடகத்துறையில் பணியாற்றிவந்துள்ள ருபீனி அவர்கள், இதழியல் தொடர்பான பல விருதுகளைப் பெற்றுள்ளார். திருப்பீட சமூகத் தொடர்புத் துறையின் தலைவராக பொறுப்பேற்பதன் வழியாக, முனைவர் பவுலோ ருபீனி அவர்கள், ஒரு திருப்பீடத்துறையின் தலைவராக நியமனம் பெறும் முதல் பொதுநிலையினர் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## வெள்ளிவிழாக் காணும்.....

**01ஆம் பக்கத் தொடர்ச்சி**

அத்துடன் மறைமாவட்டத்தின் பல புதிய ஆலயங்களை ஆரம்பித்து அவ்விடங்களில் மக்கள் ஒன்றுகூடி செபிப்பதற்கு வழிவகுத்துள்ளார். பங்குப் பணியோடு 10 ஆண்டுகளுக்கு மேலாக மன்னார் மறைமாவட்ட காணிகளுக்கு பொறுப்பாக இருந்து மறைமாவட்ட காணிகளை இனங்கண்டு அவற்றை பாதுகாத்து காணி ஆவணங்களை ஒழுங்கு படுத்தி காணிகளை நல்லமுறையில் பயன்படுத்தி மறைமாவட்டத்திற்கும் மக்களுக்கும் பலன் அளிக்கும் வகையில் சில திட்டங்களை வகுத்து செயற்படுத்தும் ஆர்வம் உடையவர். குறிப்பாக மன்னார் மறைமாவட்டத்திற்கு சொந்தமாக இருக்கும் மடுமாதா எரிபொருள் நிரப்பும் நிலையத்தை ஆயர் மற்றும் குருமுதல்வரின் அனுமதியோடு கட்டிமுடித்து அது நல்லமுறையில் இயங்க இன்றும் அதற்கு பொறுப்பாக இருந்துவருகின்றார். எமது புதிய ஆயர் அவர்களும் இந்த நிறுவனத்தை தொடர்ந்து பொறுப்புடன் நடத்த இவரை பணித்துள்ளார். இவர் தனது குருத்துவ வெள்ளி விழா நன்றித் திருப்பலியை தனது சொந்த கிராமமாகிய மாவிலங்கேணி புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் எதிர்வரும் ஆவணி மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார். ●

## திருப்பாலத்துவ சபை.........

**01ஆம் பக்கத் தொடர்ச்சி**

எம் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மனுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் கடந்த 26.07.2018 அன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு அன்பிய தொடர்பகத்திற்கு வருகைதந்தபோது வரவேற்களிக்கப்பட்டது. இதன் போது அருட்பணி. யூட்குரூஸ், அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா, புதிய இயக்குனர் அருட்பணி. ச. சவுல்நாதன் ஆகியோரும் வரவேற்கப்பட்டனர்.

ஆயர் அவர்கள் பணிப்பொறுப்பேற்பு சடங்கினை நிறைவேற்றிவைத்தார். அன்பிய மத்திய குழு, திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் புதிய இயக்குனருடன் இணைந்து பணிகளை ஆற்றுமாறும் கேட்டுக்கொண்டார். அர்ப்பணத்தோடு பணியாற்றும் அன்பிய மத்தியகுழு உறுப்பினர்களையும் ஆயர் பாராட்டினார். உலகத்திரு அவை திருப்பாலத்துவ சபை ஆரம்பித்து 175வது ஆண்டு நிறைவை குறித்து மறைமாவட்டத்தில் கொடிவாரம் ஆரம்பிக்கும் முகமாக ஆயர் அவர்களுக்கு முதல் கொடிகையளிக்கப்பட்டது. இந்நிகழ்வு சுமார் 11.45 மணியளவில் நிறைவெய்தியது. ●

## பிரான்சிஸ்கன் சபை.....

**08ஆம் பக்கத் தொடர்ச்சி**

2018ஆம் ஆண்டு ஆவணி மாதம் 02ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டுத்திருப்பலியின்போது தனது நித்திய அர்ப்பணத்தைப் பெற்றுக்கொண்டார். இந்த நித்திய அர்ப்பணத்தை இலங்கை புனித யோசவ்வாஸ் ஸ்தாபகம் என அழைக்கப்படும் பிரான்சிஸ்கன் சிறிய துறவிகளின் பிலிப்பைன்ஸ் மாகாண முதல்வரின் பிரதிநிதியாக விளங்கிய அந்தோனிப்பிள்ளை எட்வேட் ஜெயபாலன் (OFM) அவர்களிடம் தனது நித்திய வாக்குத்தத்தத்தைக் கையளித்தார். இவரின் நன்றித் திருப்பலி 05.08.2018 அன்று மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்தில் மாலை 5.30 மணியளவில் ஒப்புக்கொடுக்கப் பட்டது. ●

# இல்லற வாழ்வில் 60வது ஆண்டு வைரவிழா வாழ்த்து!



**திரு. யாக்கோப் பாக்கியநாதர் மிராண்டா**
**ஆனந்தம் பிறிஜிற்றா டயஸ் (நேசமலர்)**
**(பேசாலை, மன்னார்)**

**1958.08.19 - 2018.08.19**

**"நான் ஒருபோதும் அவர்களை கைவிடவும் மாட்டேன், அவர்களை விட்டுப்பிரியவும் மாட்டேன்" (எபி. 13:5)**

இறையவனார் படைத்தளித்த
உலகமெனும் பூங்காவில்
பெருமை மிகு பேசாலை எனும்
பெயர் கூறும் பூஞ்செடியில்
அழகுறவே பூத்திட்ட
அருமையான பூக்கள் நீங்கள்
இல்லற மகிமை தனில்
இனிதுறவே வாழ்ந்திங்கு
ஈரிரண்டு மழலையரை
மகிழ்வுடனே ஈன்றெடுத்தீர்
இகபர நலன்களோடு
இல்லற வாழ்வுதனில்
அறுபது ஆண்டுகளை
அடைந்திட்ட நீவிர்
இன்னும் பல்லாண்டு காலம்
வாழ்வாங்கு வாழ்கவென
உற்றம் சுற்றம் சூழ்ந்து நின்று
வாழ்த்துகின்றோம்! வாழ்த்துகின்றோம்!

**வாழ்த்துவோர் :**
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரங்கள்.

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. செல்வரட்ணம் செல்வச்சந்திரன் (ராஜா)**
**(ஓய்வுபெற்ற முன்னாள் றெயில்வே ஊழியர் - தோட்டவெளி)**

**மலர்வு : 18 - 05 - 1958**
**உதிர்வு : 12 - 08 - 2017**

**"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"**

அன்பிற்கு இலக்கணமான அப்பா!
ஆண்டு ஒன்று உருண்டோடினாலும்
ஒவ்வொரு நொடியும் உம்மை
மறக்க முடியவில்லையே!
நித்தமும் எம்மை உம் சிறகுகளில் காத்தீர்.
திருச்சபையில், சமூகத்தில், குடும்பத்தில்
அயராது பணிகள் பல புரிந்திட்டீர்.
பாசத்தை முழுமையாக எமக்குக்
காட்டிச் சென்றீர். நெஞ்சம் துன்பத்தால்
வெடித்து சிதறுதப்பா!
இறைவனின் அழைப்பிற்கு நீர் இணங்கியே
சென்றுவிட்டீர். விண்ணுலகில் நீர் அமைதி
பெற்று வாழ்ந்திட எம் செபத்தில்
வேண்டுகின்றோம் உம் ஆன்மா சாந்தி பெற!

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமகன்கள், மருமகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 20ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
03
03
1957



உதிர்வு
10
08
1998

**திரு. பிலிப்பு அமிர்தநாயகம் (சீலன்)**
**(கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்)**

மண்ணுலக வாழ்வை
மகத்துவமாய் வாழ்ந்து
விண்ணகம் சென்ற
எம் தந்தையே!
இருபது ஆண்டுகள்
கடந்தும் நீர் காட்டிய
நேரிய வழியில் உம் பணி
தொடர்கின்றோம் நாம்.
பரமன் பாதம் உந்தன் ஆன்மா இறைபுகழ்பாடி, என்றும்
மகிழ்ந்திருக்க தினமும் மன்றாடுகின்றோம் தந்தையே.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16
10
1953



உதிர்வு
22
08
2015

**திருமதி. ஆரோக்கியம் மரியை றெவ்வல்**
**(ஆயுள்வேத வைத்தியர் - வங்காலை)**

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோவான்-11:25)**

ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் - அம்மாவின்
பாச நினைவுகள் நீங்குமா?
கண்ணின் மணிபோலக் காலமெல்லாம் காத்திருந்து
கனிவாக எம்மை உயர்த்தி வாழ வைத்தீர்.
பக்தியில், பாசத்தில், பண்பினில் எம்மை வளர்த்திட்ட
அம்மாவே! உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில்
இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், மகன்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
11
08
1948



உதிர்வு
30
08
2017

**திரு. லோறன்ஸ் அலெக்சாந்திரியா கூஞ்ஞு (சிசிலி)**
**(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)**

அம்மா... பாசம் எனும் அன்பைத் தந்து பாரில்
படைத்தவரிடம் சென்று ஓராண்டு கடந்தது, ஓராண்டு
என்ன ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்,
உங்கள் அன்பான பார்வை, அரவணைப்பான உங்கள்
பேச்சு, ஆழமான உங்கள் வார்த்தைகள், ஆடம்பரமில்லாத
உங்கள் வாழ்க்கை, ஆணவம் இல்லாத உங்கள் பணிவு,
எங்கள் மனங்களை விட்டகலுமோ அம்மா...

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவுகள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி





**திரு. இன்னாசி முத்து பெனடிற்**
**(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி)**
**(பெற்றா, மன்னார்)**

**மலர்வு : 04 - 08 - 1933**
**உதிர்வு : 15 - 07 - 2018**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"**
**(யோவான் 11:25)**



எம் குடும்பக் காவலனே
கடமை முடிந்தது கண்ணுறங்கு

எமக்காய் சிந்திய வியர்வை
முற்றத்து மண்ணிலும்
நெஞ்சிலும் ஈரமாய் இருக்கும்
கண்ணுறங்கு!

மன்னார் பாலம் கடக்கையில்
பார்க்கும் கோவிலும்
கோட்டை நனைக்கும் கடலும்
கோவில் திருந்தாதியும்
வயல்வீதி மாதர் மனதிலும்
பெனடிற் அத்தார் எமக்காய் இருந்தார்.
என்றே சொல்லும்


இது போல் உறவு இனிவருமா?
தந்தையாய் இருந்த நண்பனே
கடவுள் மடியில் கண்ணுறங்கு

தந்தையைக் காணாத மகன்
மகேந்திரன் தியோப்பிளஸ்

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர்.
T.P No: 077-3793099

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01
01
1928



உதிர்வு
13
08
2015

**திரு. ஞானப்பிரகாசம் சூசைமுத்து**
**(பிறப்பிடம்: முல்லைத்தீவு, வதிவிடம்: மன்னார்)**

அன்பு அப்பா! கடந்த 13.08.2015இல் நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து இரண்டு வருடங்கள் ஆனாலும், உங்கள் அருமை இழந்து தவிக்கின்றோம்.

அப்பா! மௌனம் உங்கள் தாய் மொழி அல்லவே! உங்கள் சிம்மக்குரலை எம்மருகில் கேட்காவிடினும், நீங்கள் எங்கும் சென்று விடவில்லை என்ற உணர்வு எம்மிடம் உள்ளது. ஆன்மீகக் காரியங்களில் உங்களது அக்கறையும், கரிசனையும் அளப்பரியது. நோயென்று படுக்காது, யாரையுமே வருத்தாது, அமைதியில் இளைப்பாறிட, எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நல்ல மரணத்தைக் கொடுத்தருளினார். உங்களது ஆன்மா இறை சந்நிதியில் இளைப்பாறிட செபிக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும் :**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**